REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2021 ஏப்ரல் 9 வெள்ளிக்கிழமை

89 1932 - 2021

வரு. 89 இல. 85 | April 09, Friday, 2021 | 28 பக்கங்கள் | 30/-

## சென்னை சிதம்பரம் மைதானத்தில் IPL தொடர் இன்று ஆரம்பம்




உலகெங்கிலுமுள்ள பல கோடி கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஐ.பி.எல். ரி20 லீக் தொடர், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர், இன்று 06



அக்குறணை பிரதேச சபையின் மூன்றாண்டு நிறைவு 07

ஆலமுல் இஸ்லாம் - அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk 08

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ; 87 உறவுகள் உயிரிழப்பு 10



டெஸ்ட் தொடர் ; பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை 16

ரூ.1,000 சம்பள அதிகரிப்பில் அதிருப்தி

## தோட்ட தொழிலாளர்களை பழிவாங்கும் செயற்பாடுகளில் தோட்ட நிர்வாகம்



**ஜீவன் கடும் கண்டனம்; தொழில் ஆணையருக்கு அவசர கடிதம்**

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று பெருந்தோட்டங்களில் நிலுவைக்கு மேலதிகமாக பறிக்கப்படும் கொழுந்துக்கும் எடுக்கப்படும் இறப்பருக்கும் மேலதிக நிறைக் 06

ரஞ்சன் ராமநாயக்க விவகாரம்

## நேற்றும் சபையில் அமளிதுமளி சபை சற்று நேரம் ஒத்திவைப்பு

**இரு தரப்பு கோஷங்களினால் சபை அதிர்ந்தது**

*ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*

சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து 06

பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பாதிப்பு

## பாம் ஒயிலுக்கான தடை குறித்து ஜனாதிபதி விளக்கம்



உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதியை முழுமையாக தடை செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்தமைக்கான காரணம் இறக்குமதி செய்யப்படும் பாம் எண்ணெய் 06

# யாழில் மாநகர காவல் படை சீருடையால் கிளம்பிய சர்ச்சை

**பணிகளை நிறுத்த பொலிஸ் கோரிக்கை; ஆணையாளரிடம் விசாரணை**

*யாழ்.விசேட, யாழ். குறூப் நிருபர்கள்*

யாழ். மாநகர சபை காவல் படையின் கடமைகளை உடனடியாக நிறுத்துமாறு மாநகர சபைக்கு பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர். அத்தோடு, காவல் படையின் சீருடையைப் பெற்று அதனை கொழும்புக்கு கொண்டுவரவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரின் பொது இடங்களில் குப்பை கொட்டினால் 5,000 ரூபாவும் வெற்றிலை துப்பினால் 2,000 ரூபாவும் தண்டப் பணம் அறவிடப்படவுள்ளதாக மாநகர முதல்வர் 06



லேக்ஹவுஸ் ஸ்தாபகர் அமரர் டி.ஆர். விஜேவர்தனவின் 135 ஆவது ஜனன தினத்தையிட்டு கப்பிதாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையின் பின்னர் நிறுவனத்திலமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு நிறுவனத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ தயாரத்ன மலர்மாலை அணிவித்த போது

(படம்: சிந்தக குமாரசிங்க)

## உள்நோக்கம் எதுவுமில்லை

**மணிவண்ணன் விளக்கம்**

யாழ். மாநகர சபையால் அறிமுப்படுத்தப்பட்டுள்ள மாநகர காவல் படையின் சீருடை வடிவத்தில் எந்தவொரு உள்ளநோக்கமும் 06

## சீருடை தொடர்பில் விசாரணை

**DIG அஜித் ரோஹண தெரிவிப்பு**

யாழ்.மாநகர சபையால் உருவாக்கப்பட்டுள்ள காவல்படை மற்றும் அதன் சீருடை என்பன தொடர்பில் விசாரணைகள் 06

## சபைக்குள்ளும் சலசலப்பு

**ஐ.ம.ச.எம்.பி நெல்சன் கேள்வி**

யாழ்ப்பாணம் மாநகர முதல்வரால் உருவாக்கப்பட்டுள்ள 'காவல்படை' பணிக்குழுவினருக்கான சீருடை புலிகளின் காவல்துறை 06

## பிரபாகரனின் வீடியோ 03

ஏப்ரல் 23 முதல் ஜூலை 06 வரை

## இரண்டாவது டோஸ் வழங்க ஏற்பாடு



**சபையில் சுகாதார அமைச்சர் பவித்ரா**

*ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*

ஏப்ரல் 23ஆம் திகதி முதல் ஜூலை 06ஆம் திகதி வரை ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகளின் இரண்டாவது டோஸ் வழங்கப்படுமென சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று 06

## புலிகளைப் புகழ்பவர்கள் தராதரம் பாராது கைதாவர்

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண**



தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைப் புகழ்ந்தும் நினைவுகூர்ந்தும் பகிரங்கமாகக் கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் அனைவரும் இனிமேல் தகுதி தராதரம் பாராது உடன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்களென 06

## கரோலின் ஜூரி, சூலா கைதாகி பிணையில் விடுதலை



திருமதி உலக அழகியான கரோலின் ஜூரி மற்றும் முன்னாள் மாடல் சூலா பத்மேந்திரா ஆகியோர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டு 06

## பிரதமர் மோடிக்கு இரண்டாவது டோஸ்

**ஏனையோருக்கும் டுவிட்டரில் அறிவுரை**



கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது டோஸை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று 06

## ரஞ்சனின் பதவி வெற்றிட விடயத்தில் அரசு பின்னணி

**சபாநாயகரும் துணை; சஜித் குற்றச்சாட்டு**

*ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்*



ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 06

## அரசை அவமதிக்கும் வகையில் தோட்ட கம்பனிகளின் செயற்பாடு

**பொறுமை எல்லை மீறினால் விளைவுகள் பாரதூரமாகும் - இராதாகிருஸ்ணன்**



*நுவரெலியா தினகரன் நிருபர்*

நீதிமன்றம் தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை 06

## சாதாரண தர மாணவர்களுக்கு அடிப்படைவாத செயலமர்வு

**ஒலுவிலில் TID யினரால் இருவர் கைது**



கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு அடிப்படைவாத வகுப்புக்களை நடத்திய இரு நபர்கள் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒலுவில் பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஒலுவில் பிரதேசத்தை சேர்ந்தவர்களென தெரிவிக்கப்படுகிறது. 06

**விக்கல் வீராச்சாமி**



பாராளுமன்றத்தில அலி சப்ரி ஐயா பேசுற பேச்சு ஒவ்வொண்டும் மனதை தொடுவதாயிருக்கு.....

மனதைத் தொட்டு என்ன பயன், அதை சம்பந்தப்பட்ட தரப்பு சரியாக பயன்படுத்தினாதானே நாட்டில எல்லா இன மக்களும் நிம்மதியாக வாழலாம்...!!!



# புராதன பசுமைக் கிராமங்களை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் 'கிராமத்துடன் உறவாடல்' திட்டம்

## ஜனாதிபதிக்கு மஹா சங்கத்தினர் பாராட்டு



புராதன காலத்தில் காணப்பட்ட பசுமையான கிராமங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு கிராமம் கிராமமாக விஜயம் செய்யும் ‘கிராமத்துடன் உறவாடல்‘ என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் திட்டத்தை மஹா சங்கத்தினர் பாராட்டியுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ (07) வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையை தரிசித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார். தலதா மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை தியவடன நிலமே நிலங்க தேல வரவேற்றார்.

தலதா மாளிகை வளாகத்தில் அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க சங்கைக்குரிய வறக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரை சந்தித்த ஜனாதிபதி, தேரரின் நலம் விசாரித்ததுடன் சிறு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

அஸ்கிரி மகா விகாரையின் காரக சங்க சபிக்க பதுலு முத்தியங்கன ரஜமகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி சங்கைக்குரிய முருத்தெனியே தம்மரத்தன தேரரும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்துகொண்டார்.

புராதன காலத்தில் காணப்பட்ட பசுமையான கிராமத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு கிராமம் கிராமமாக விஜயம் செய்யும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை தேரர்கள் இதன்போதே பாராட்டியுள்ளனர்.

கிராமிய மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை உருவாக்கிக் கொடுக்காமல் கிராமத்தை முன்னேற்ற முடியாதென்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, விவசாயத்தின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவது கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவேயாகும் என்று குறிப்பிட்டார்.

இறக்குமதியை கட்டுப்படுத்தி நாட்டில் பயிரிடக் கூடிய அனைத்து பயிர் வகைகளையும் பயிரிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது வெளிநாட்டு விவசாயிகளுக்கு சென்ற நிதியை எமது விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்காகவே ஆகும். பயிரிடக்கூடிய அனைத்து நிலங்களையும் விவசாயத்திற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தி விளைச்சளை அதிகரிப்பதற்கும் இளைஞர் சமுதாயத்தை இத்துறையில் ஊக்கப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொவிட்19 சவாலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடிந்தமைக்கான காரணம் அரசாங்கம் முன்னெடுத்த சரியான வேலைத்திட்டங்களாகும். இன்று அனைத்து துறைகளிலும் முன்னேற்றத்தை காணக்கூடியதாக உள்ளதோடு, எதிர்காலத்தை கருத்திற்கொண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நாட்டில் நடைமுறைப்படுத்தி வருவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இந்நாட்டின் சுபீட்சத்தின் அடையாளமாகக் காணப்படும் தேயிலை கைத்தொழிலை வீழ்ச்சியடைய இடமளிக்காது பலமுடன் முன்னோக்கி செல்வதற்காக தேயிலை பயிர்ச் செய்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்கி இத்துறையின் முன்னேற்றத்திற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பிரச்சினைகளை தீர்த்து நாட்டின் வெற்றிக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று மகா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

தலதா மாளிகையை தரிசிக்க வருகை தந்திருந்த மக்களிடம் சுக நலன்களை விசாரித்தறிந்த ஜனாதிபதி, அவர்களுடன் சிறு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி , மல்வத்து மகா விகாரைக்கு சென்று, மல்வத்து மகாநாயக்க சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரரரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

மல்வத்து பீடத்தின் அனுநாயக்க சங்கைக்குரிய திம்புல் கும்புரே விமலதம்ம தேரரை சந்தித்த ஜனாதிபதி, தேரரின் நலனை விசாரித்து அறிந்துகொண்டார். அனுநாயக்க தேரர் தங்கியுள்ள விகாரை இலங்கை கடற்படையினரால் புனர்நிர்மாணம் செய்யப்படுவதையும் அவதானித்த ஜனாதிபதி, உடனடியாக அதனை முழுமைப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கினார்.

கெடம்பே ராஜோப்ப வனாராமயவிற்கு சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விகாராதிபதி சங்கைக்குரிய கெப்பெட்டியாகொட சிறிவிமல தேரரையும் சந்தித்ததோடு, பிரித் பாராயணத்தில் கலந்துகொண்டு ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

தமது 90ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு எழுதிய “யத்திவர ஹதவத விநிவித துட்டிமி” நூல் நாயக்க தேரரால் ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்பட்டது. தேரரின் தேசிய, மத, சமூக சேவைகளை பற்றி பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல், விஞ்ஞான பிரிவின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ஆர்.ஏ.டப்ளியு.ரணசிங்கவினால் இந்நூல் எழுதப்பட்டது.

ஜனாதிபதி, அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்க சாஸ்திரபதி பண்டித சங்கைக்குரிய ஆனமடுவே ஸ்ரீ தம்மதஸ்ஸி தேரரை சந்தித்தபோது, எவ்வகையான தடைகள் வந்தாலும் எதிர்கால வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பலமும் தைரியமும் பெற வேண்டுமென தேரர் ஜனாதிபதியை ஆசிர்வதித்தார்.

# அரசியல் ஆலோசனை பொறிமுறையை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

## இலங்கை – ஆப்கான் நாடுகள் உடன்படிக்கை கைச்சாத்து

லோரன்ஸ் செல்வநாயகம்





அரசியல் ஆலோசனைப் பொறிமுறையொன்றை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சுகள் கையெழுத்திட்டுள்ளன.

இரு தெற்காசிய நாடுகளுக்கிடையிலான வழக்கமான ஈடுபாடு மற்றும் கூட்டாண்மைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கைச்சாத்திட்டதுடன், கொழும்பிலுள்ள ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதரி ஆப்கான் அரசாங்கத்தின் சார்பில் கைச்சாத்திட்டார்.

இந்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், இரு வெளிநாட்டு அமைச்சுக்களினதும் ஆக்கபூர்வமான வசதியளித்தல்களின் மூலம் இலங்கை ஆப்கானிஸ்தான் இருதரப்புப் பங்காண்மையானது மேலும் வளர்ச்சியடையும் ஆதலால், இருதரப்பு உறவுகளின் முழுமையான வரம்புகளை வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்ய முடியும் என இரு நாடுகளும் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தின.

அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, கலாச்சாரம், சுகாதாரம், சமூகம், மக்களுக்கிடையிலான தொடர்புகள் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு உட்பட பொதுவான நலன்களின் ஏனைய பகுதிகளை இது உள்ளடக்கும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலம், அரசியல் ஆலோசனைகள் அல்லது வெளிநாட்டு அலுவலக ஆலோசனைகளின் இருதரப்பு ஆவணங்களை தெற்காசியப் பிராந்தியத்தின் அனைத்து நாடுகளுடனும் நிறுவுவதை இலங்கை நிறைவு செய்கின்றது. கைச்சாத்திடப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான 63 ஆண்டுகால முறையான இராஜதந்திர உறவுகளின் வரலாற்றில் ஒரு முக்கியமான இருதரப்பு ஆவணமாகும்.

இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் அரசியல் ஆலோசனைகளின் அங்குரார்ப்பண அமர்வை பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நேரத்தில் நடத்துவதற்கும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். பொருளாதார மற்றும் வர்த்தக விடயங்களிலான நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும், அண்டை நாடுகள் மற்றும் சார்க் உறுப்பினர்களுடனான தொடர்பு ஆகியன இலங்கையின் முன்னணிப் பொருளாதார இராஜதந்திர இலக்காக உள்ளது.

தேயிலை, இரத்தினம் மற்றும் ஆபரணங்கள், உலர் பழங்கள், விதைகள் மற்றும் தானியங்கள் உள்ளிட்ட இருதரப்பு வர்த்தகத்திற்கான உயர் சாத்தியம் மிகுந்த பகுதிகளை இரு தரப்பினரும் அடிக்கோடிட்டுக் காட்டியதுடன், நேரடி விமான இணைப்பானது இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலா, கலாச்சார மற்றும் சமூக ஈடுபாடுகளில் நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தும் என்பதை சுட்டிக் காட்டினர்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் கொழும்பிலுள்ள ஆப்கானிஸ்தான் தூதரகம் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜயவர்தனவின் 135 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு லேக்ஹவுஸ் இந்து மன்றமும் தினகரன் ஆசிரியர் பீடமும் இணைந்து கொழும்பு கப்பிதாவத்தை அருள் மிகு கைலாசநாதர் தேவஸ்தானத்தில் விசேட பூஜை நடத்தப்பட்டது. ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ யோகரஞ்சித குருக்கள் பூஜைகளை நடத்தினார். பூஜை நிகழ்வில் நீதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ரகித்த அபேகுணவர்தன, செயற்பாட்டுப் பணிப்பாளர் கனிஷ்க வித்தாரண, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல ஆகியோர் கலந்து கொண்டனர்.











தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 9 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.50
ளுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

மேஷம் - செலவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)



# பிரதேச வேறுபாடின்றி அனைவருக்கும் சமமான சுகாதார கட்டமைப்பு வசதி

### கண்டி வைத்திய அதிகாரிகள் சங்க வருடாந்த அமர்வில் ஜனாதிபதி

நாட்டின் அனைத்து பிரதேச மக்களுக்கும் சமமான பயன்தரக்கூடிய தேசிய சுகாதார கட்டமைப்பொன்றை உருவாக்குவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்நோக்கத்தை குறுகிய காலத்தில் அடைந்துகொள்வதற்காக புதிய ஆலோசனைகளை வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

கண்டியில் (07) நடைபெற்ற கண்டி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் 43 ஆவது வருடாந்த அமர்வின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மக்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வது எமது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். ஆகவே நீண்டகாலமாக நீடிக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதற்காக வைத்தியர்கள் மற்றும் ஏனைய சுகாதார சேவைகள் நிபுணர்களை உள்ளடக்கிய அனைத்து சுகாதாரத் துறையை சார்ந்தவர்களும் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவது அவசியமாகுமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

"கிராமத்துடன் கலந்துரையாடல்" நிகழ்ச்சிக்காக 17 மாவட்டங்களிலுள்ள கிராமங்களுக்கு விஜயம் செய்தபோது கிராமப்புற மற்றும் தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை நேரடியாக பார்வையிட முடிந்ததாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். சுகாதார கட்டமைப்பில் வெற்றிகொள்ளப்பட வேண்டிய பல்வேறு பலவீனங்களை அங்கு அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. இப்பலவீனங்கள் மேலும் தொடர்ந்தால் மோசமான பாரிய பின் விளைவுகள் உருவாகலாம் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கிராமிய மட்டத்தில்

06

# கொரோனா புதிய கொத்தணி? சுகாதார அமைச்சு எச்சரிக்கை

### மக்களை விழிப்பாக இருக்க வேண்டுகோள்

*லோரன்ஸ் செல்வநாயகம்*



நாளாந்தம் 100 ற்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்படுவதால் நாட்டில் கொரோனா தொற்றின் புதிய கொத்தணி உருவாகக்கூடுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர, மக்கள் அதிகளவில் கூடும் இடங்கள் இன்னும் ஆபத்தில் உள்ளதாக கூறினார்.

ஆகவே முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளி உள்ளிட்ட வழிகாட்டுதல்களை பொது மக்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை அவசரகால பயன்பாட்டுக்காக சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியை அங்கீகரிக்க கணிசமான தரவுகளைப் பெற்றுள்ளதாக வைத்தியர் சுதத் சமரவீர குறிப்பிட்டார்.

06



மறைந்த சிரேஷ்ட அரச நிர்வாக சேவை அதிகாரி அமரர் சிவஞானசோதியின் பூதவுடல் நேற்று அக்கினியுடன் சங்கமமானது. பொரளையில் அன்னாரின் பூதவுடலுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி குழுக்களின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்திய போது...



இந்தியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராக நியமனம் பெற்றுள்ள துரைசாமி வெங்கடேஸ்வரனுக்கு கொழும்பு, புதுச்செட்டித்தெருவில் உள்ள சீரடி சாயி பாபா ஆலயத்தில் நேற்று (08) வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன்போது, சீரடி சாயி மத்திய நிலைய தலைமை அறங்காவலர் எஸ். என். உதயநாயகன், வெங்கடேஸ்வரனை கௌரவிப்பதையும், அருகில் ஊடகத்துறை இணைப்பாளர் சிவா இராஜஜோதி நிற்பதையும் படத்தில் காணலாம்.

# தென்னாபிரிக்காவில் பரவும் கொரோனா வைரஸ்

### நாட்டில் மூவருக்கு இனங்காணப்பட்டுள்ளது

*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாட்டில் இனங்காணப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைக்கிணங்க தென்னாபிரிக்காவில் பரவும் புதிய வகை வைரஸ் தொற்று கொழும்பில் மூன்று நபர்களுக்கு காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர விஞ்ஞான பீட பணிப்பாளர் டாக்டர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

மேற்படி வைரஸ் தொற்றாளர்கள் இருவரும் கட்டார் நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்தவர்கள் என்றும் அவர்கள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையையடுத்து அவர்களுக்கு தென்னாபிரிக்காவில் பரவும் வைரஸ் தொற்று இனங் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

06

# வங்கிக் கணக்கில் 136 மில்லியன் பணம்

### 27 வயது இளைஞர் கைது

இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டிலுள்ள ஒருவரால் தமது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட 136 மில்லியன் ரூபாவை கொண்டிருந்தமைக்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணச் சலவைச் சட்டத்தின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பணம் தற்போது வெளிநாட்டில் வசிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான தர்மசிறி பெரேராவுக்கு சொந்தமானதென குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் தர்மசிறி பெரேரா என்ற பாதாள உலக உறுப்பினர் நாட்டிலுள்ள மற்றொரு நபரின் கணக்கிற்கு 49 மில்லியன் ரூபாவை வைப்பிலிட்டிருந்தார்.

அந்த சந்தேக நபரும் மூன்று மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது கைது செய்யப்பட்ட நபர் இன்று கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

# ரஞ்சனின் வெற்றிடத்துக்கு அஜித் மான்னப்பெரும

### வர்த்தமானியில் விரைவில் பெயர்



ரஞ்சன் ராமநாயக்கவின் வெற்றிடத்திற்கு அஜித் மான்னப்பெருமவின் பெயர் வர்தமானியில் வெளியிடப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

வெற்றிடமாகியுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற ஆசனத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலின் அடுத்த இடத்திலுள்ள அஜித் மான்னப்பெருமவின் பெயர் வர்தமானியில் வெளியிடப்படுமென தெரியவந்துள்ளது.

# யாழ். மாநகர சபை அமர்வுகளை புறக்கணித்தது ஈ.பி.டி.பி

### முன்னாள் முதல்வர் விளக்கம்



யாழ். மாநகர சபையின் நேற்றைய அமர்வுகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி புறக்கணித்துள்ளது என்று மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் முதல்வருமான திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை முதல்வரினால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாநகர காவல் படை தொடர்பில் தம்முடன் கலந்துரையாடப்படாமையே இன்றைய புறக்கணிப்பிற்கு காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

06

### ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நிறுவனத்தின்

# தடுப்பூசி கொள்வனவு குறித்து இலங்கை அமெரிக்காவுடன் பேச்சு

### பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் பவித்ரா

ஜோன்சன் அன்ட் ஜோன்சன் (Johnson & Johnson) தடுப்பூசியை கொள்வனவு செய்வது தொடர்பில் அமெரிக்காவுடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் மூலம் அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனத்துடன் இலங்கை பேச்சுவார்த்தை களைத் ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி நேற்று வியாழைக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மேலும் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக

06

# பிரபாகரனின் வீடியோ வைத்திருந்தவர் கைது

### விளக்கமறியலில் வைக்க உத்தரவு

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீடியோயை கையடக்க தொலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் வெறுப்பைத் தூண்டுதல் அல்லது எத்தனித்தலின் கீழ் இளைஞன் மீது "பி" அறிக்கையை கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதவான் இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்து இளைஞனை எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.



பணயக்கைதிகளை அதிரடியாக மீட்கவும் தீவிரவாத தாக்குதலை முறியடித்தல் தொடர்பான பாடநெறி மற்றும் மோப்ப நாய்களை கையாளும் கமாண்டோ படையணிக்கான பாடநெறியையும் பூர்த்தி செய்த 88 படைவீரர்கள் தமது பயிற்சியை முடித்து வெளியேறும் நிகழ்வு புதன்கிழமை (7) மாலை கனேமுல்லை கமண்டோ படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கலந்து கொண்டு அவர்களது பயிற்சிகளை நேரடியாக அவதானித்த போது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 151.29 | 155.96 |
| கனடியன் டொலர் | 156.71 | 162.35 |
| யூரோ | 235.51 | 242.17 |
| ஜப்பான் யென் | 1.8123 | 1.8608 |
| சிங்கப்பூர் டொலர் | 147.88 | 152.39 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 274.06 | 280.52 |
| சுவிஸ் பிராங்க் | 212.35 | 220.03 |
| அமெரிக்க டொலர் | 199.21 | 203.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 530.55 | கட்டார் ரியால் | 54.91 |
| குவைத் டினார் | 662.46 | சவூதி ரியால் | 53.32 |
| ஓமான் ரியால் | 519.54 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.45 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 26

### குறள் தரும் சிந்தனை



ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்க வல்லது வேறொன்றும் இல்லை.

# அலட்சியம் ஆபத்துக்கே மீண்டும் வழிவகுக்கும்!

தமிழ், சிங்களப் புத்தாண்டு பிறப்பதற்கு இன்னும் ஐந்து நாட்களே உள்ளன. இலங்கை மக்களைப் பொறுத்த வரை சித்திரைப் புத்தாண்டென்பது சிறப்பு மிக்கதொரு பண்டிகை ஆகும். மொழியினாலும், மதத்தினாலும் வேறுபட்ட இரு இனங்களைச் சேர்ந்த மக்களான தமிழர்களும் சிங்களவர்களும் கொண்டாடுகின்ற பொதுப் பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டு திகழ்கின்றது. எனவேதான் இப்பண்டிகை கூடுதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

அதுமாத்திரமன்றி, எமது நாட்டில் கொண்டாடப்படுகின்ற பண்டிகைகளில் மிகவும் விமரிசையான பண்டிகையும் சித்திரைப் புத்தாண்டு ஆகும். சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டமானது ஒரு நாளுடன் முடிந்து விடுவதில்லை. சுமார் ஒரு வார காலத்துக்கு தொடர்ச்சியாக கொண்டாடப்படுகின்ற பண்டிகை இதுவாகும்.

விதம் விதமான உணவுப் பண்டங்கள், உறவினர்களின் வீடுகளைத் தரிசித்தல், கிராமங்களில் நடைபெறுகின்ற கேளிக்கை நிகழ்ச்சிகள் என்றெல்லாம் முழு நாடுமே சுமார் ஒரு வார காலத்துக்கு களைகட்டுவது வழக்கமாகும். கிராமப் பகுதிகளில்தான் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் உண்மையான சிறப்பை நாம் காண முடியும்.

எமது நாட்டின் பாரம்பரிய அடையாளங்களில் ஒன்றாகவும் தமிழ் சிங்களப் புத்தாண்டைக் குறிப்பிட முடியும். அன்றைய காலத்தில் தமிழ், சிங்கள இனங்கள் அந்நியோன்யமாக வாழ்ந்ததற்கான அடையாளமாக சித்திரைப் புத்தாண்டு விளங்குகின்றது. எனவேதான் இப்புத்தாண்டை இனஉறவின் வெளிப்பாடாகவும் மக்கள் கருதுவதுண்டு.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த சித்திரைப் புத்தாண்டை தமிழ், சிங்கள மக்களால் கடந்த வருடம் கொண்டாட முடியாமலேயே போய் விட்டது. உலகை ஆக்கிரமித்துக் கொண்ட கொவிட்19 பெருந்தொற்றே இதற்கான காரணம் ஆகும். கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் கொரோனா அச்சத்தினால் முழு நாடுமே களையிழந்து போய்க் கிடந்தது. நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் கொரோனா தீவிரமாகப் பரவியதனால் மக்கள் தத்தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்க வேண்டியிருந்தது.

எனவே கடந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு சோபையிழந்து போயிருந்தது. அதேசமயம் அதற்கு முந்திய வருடத்திலும் சித்திரைப் புத்தாண்டுக் காலம் துயரத்திலேயே கழிந்தது. சித்திரைப் புத்தாண்டு கடந்ததும் ஒரு வார காலத்தில் ஈஸ்டர் பண்டிகை தினத்தன்று பயங்கரவாதிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தி அப்பாவி மக்களைப் பலியெடுத்ததன் காரணமாக ஒட்டுமொத்த நாடுமே துயரத்தில் மூழ்கியிருந்தது.

ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் தற்போது இரண்டாவது தடவையாக நாடு சித்திரைப் புத்தாண்டை எதிர்நோக்கியுள்ளது. கடந்த தடவை போன்று இம்முறையும் கொவிட்19 அச்சுறுத்தல் நீங்காத சூழலிலேயே மக்கள் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடப் போகின்றனர். தமிழ், சிங்கள மக்களைப் பொறுத்த வரை இப்புத்தாண்டை அமைதியான முறையில் கொண்டாடுவதென்பது மகிழ்ச்சியானதல்ல. அவர்கள் இப்பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடியே பழக்கப்பட்டுப் போனவர்களாவர்.

ஆனாலும் மக்கள் இம்முறையும் அமைதி காக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். முன்னைய காலங்களைப் போன்று விமரிசையாக புத்தாண்டு கொண்டாடுகின்ற சூழல் இன்னும் உருவாகவில்லையென்பதே உண்மை. கொவிட் அச்சுறுத்தல் நிலைமை சற்றுத் தணிந்துள்ளதென்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் தொற்று பரவல் நிலைமையானது இன்னுமே கட்டுப்பாட்டுக்குள் வந்து விடவில்லை.

நாட்டில் அன்றாடம் கொரோனா தொற்றாளர்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்படுவதுடன், தினமும் ஓரிரு மரணங்களும் பதிவாகிக் கொண்டே செல்கின்றன. இவ்வாறான நிலைமையில் மக்கள் மத்தியில் அலட்சியம் தொடருமானால், நாட்டில் எங்காவது புதிய கொத்தணியொன்று உருவாகி மீண்டும் மற்றொரு கொரோனா அலை உருவாகின்ற ஆபத்து ஏற்படக் கூடுமென்பதே மருத்துவ நிபுணர்களின் எச்சரிக்கையாக உள்ளது.

எனவே புத்தாண்டுக் காலம் என்பதற்காக மக்கள் இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த விழிப்புணர்வை முற்றாகவே மறந்து செயற்படுவது பாதகமான விளைவே ஏற்படுத்தக் கூடும். நாடு மீண்டும் ஆபத்தான கட்டத்துக்குச் செல்வதற்கு இடமளிப்பதானது நாட்டின் பொருளாதாரத்திலும் குடும்ப பொருளாதாரத்திலும் பெருவீழ்ச்சியை ஏற்படுத்துமென்பதை மறந்து விடக் கூடாது.

புத்தாண்டு நெருங்குவதனால் புத்தாடைகளையும் ஏனைய பொருட்களையும் வாங்குவதற்காக மக்கள் கடைகளில் முண்டியடிப்பதை நகரப் பகுதிகளில் இப்போது காண முடிகின்றது. பஸ்களில் பயணிகள் கூட்டம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் முற்றாகவே மறந்து போயுள்ளனர். பஸ்களில் மக்கள் நெருக்கியடித்தபடி பயணம் செய்வதைக் காண முடிகின்றது.

இவையெல்லாம் ஆபத்தான அறிகுறிகளாகவே தெரிகின்றன. கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்து விடாத இந்நிலையில் இவ்வாறான அலட்சியம் நல்லதல்ல. புத்தாண்டு என்பதற்காக அச்சத்தை மறந்த நிலையில் எவரும் நடந்து கொள்ளலாகாது. வழமையான பாதுகாப்பை கடைப்பிடித்தபடி செயற்படுவதே நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# கொழும்பு இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் பரமேஸ்வரனின் மணிவிழா நிகழ்வு நாளை

உயர்ந்த புகழுக்கு ஒப்பான ஒரு பொருள் இந்த உலகத்தில் வேறெதுவும் இல்லை என்றார் வள்ளுவப் பெருந்தகை. வள்ளுவரின் வாய்மொழியை மெய்யாக்கும் விதத்தில் தன் அன்பாலும், அதீத ஆளுமையாலும் எல்லோர் மனங்களிலும் நின்று நிலைப்பவர் கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் பழனிவேல் பரமேஸ்வரன்.

அவரைக் காண்கின்ற போதெல்லாம், "மனதிலுறுதி வேண்டும், வாக்கினிலேயினிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும், கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற பாரதியின் நல்வரிகள் எம் சிந்தையைத் தட்டும். அவ்வரிகளுக்கும் அவருக்கும் நெருங்கிய பொருத்தங்களுள்ளன.



யாழ்ப்பாணம் நயினாதீவில் பிரபல வர்த்தகரான பழனிவேல், சரஸ்வதி தம்பதியினருக்கு 1960 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆந் திகதி மூத்த புதல்வனாக இவர் பிறந்தார். சைவத்தின் மீதும் தமிழின் மீதும் தீராத பற்றுக் கொண்ட இவர், இளவயதிலேயே தனது தந்தையை இழந்தார். இருப்பினும் தாயார், சகோர சகோதரிகளின் பாசக் கூடத்தில் மகிழ்ந்திருந்து வாழ்ந்து வந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் கற்றார். இதனைத் தொடர்ந்து தனது இடைநிலைக் கல்வியை யா/ நயினாதீவு மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தார். இலங்கையின் புகழ் பூத்த கல்லூரிகளில் ஒன்றான யாழ். இந்துக் கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியை தொடர்ந்தார்.

உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவைத் தேர்தெடுத்த பரமேஸ்வரன், ஆசிரியர்களின் வழிகாட்டலிலும் அதிபரின் நெறிப்படுத்தலிலும் திறமையானவராக உருவாக்கப்பட்டார்.

தொழில் அதிகாரியான தாமோதரம் பிள்ளை, தங்கம்மாள் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியான மணிமொழியை 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி கரம் பிடித்தார். இவரின் துணைவியார் மணிமொழி கொ/ இராமநாதன் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

கல்விப் பயணத்தின் தொடர்ச்சியாக உயர்தரத்தில் கற்றுத் தேறிய இவர், தேசிய கல்வி நிறுவனத்தின் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக வெளிவந்தார். அது மட்டுமல்லாமல் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வியில் டிப்ளோமா (Dip in Ed) பாடநெறியையும் பூர்த்தி செய்து கொண்டார். இவற்றுக்கெல்லாம் மேலாக சட்டக் கல்வியிலும் தன் முனைப்பைச் செலுத்தினார்.

சட்டத்தரணியாக வேண்டும் என்ற பெரு விருப்பம் இவர் மனதில் குடி கொண்டிருந்தது.

அவ்விருப்பத்தை நிறைவேற்றும் முகமாக 1998 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டமாணிப் பட்டத்தை (LLB) பெற்றுக் கொண்டார். தொடர்ந்து இலங்கை சட்டக் கல்லூரியில் பயின்று 1999 ஆம் ஆண்டு சட்டத்தரணியானார். அந்நம்பிக்கையின்படி தம்பணியில் பல திட்டங்களை வகுக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் சட்டக் கல்வி பெரும் உந்துசக்தியாக அமைந்தது.

'சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இல் வெல்லல் யார்க்கும் அரிது' என்ற வள்ளுவரின் பொன்மொழிக்கு முழு அர்த்தமும் தந்தவர் பரமேஸ்வரன்.

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக 1987ஆம் ஆண்டு கொ/ விவேகானந்தா கல்லூரியில் இணைந்து தன் கடமையை மேற்கொண்டார். இன்றுவரை தனக்கேயுரிய பாணியில் சிறந்த தலைமைத்துவம் பொருந்தியவராகவும் அறிவாற்றல்மிக்க நெறிப்படுத்துனராகவும் தொழிற்பட்டு வருகிறார். இக்கல்லூரிக்கு இவர் வழங்கிய சேவைகள் கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. தன் ஆற்றலால் திடமான கல்விக் கூடமாக இந்துக் கல்லூரியை ஆக்கிக் கொடுத்தார்.

இவர் அதிபராகப் பொறுப்பேற்றவுடன் '2020 Vision' என்னும் நோக்கை இலக்காகக் கொண்ட திட்டமிடல் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. பழைய மாணவர்களதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் நிதி மூலம் கல்லூரி மைதானம் தேசிய தரத்திற்கேற்ப புனரமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

சகல கட்டடங்களும் வகுப்பறைகளும் புனரமைக்கப்பட்டு வெண்ணிறப் பூச்சுடன், கம்பீரமான தோற்றத்துடன் தலைநகருக்கே உரிய தோற்றப்பாட்டுடன் தலைநிமிர்ந்து காட்சியளிக்கும் விதம் காண்போரை களிப்படையச் செய்கின்றது. இது அதிபர் பரமேஸ்வரன் அவர்களின் உறுதி மிக்க ஆளுமைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஆரம்பப் பிரிவு மணவர்களது கற்றற் செயற்பாடுகளுக்கு ஏற்றதாக இடமும் கட்டடமும் மாற்றியமைக்கப்பட்டு, மாணவர்கள் சிரமமின்றி வருவதற்கும் செல்வதற்கும் வழியேற்படுத்தப்பட்டது.

சிற்றுண்டிச்சாலை தேசிய தரத்திற்கேற்ப நவீன முறையில் உருவாக்கப்பட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் மகிழ்ச்சியாக உணவருந்தும் இடமாக மாற்றம் செய்யப்பட்டது. இது இந்துக் கல்லூரி ஆசிரிய, மாணவர்களுக்கு மட்டுமன்றி அங்கு நிகழ்வுகளுக்கு வருகை தரும் வெளிப்பாடசாலை ஆசிரிய மாணவர்களுக்கும் பேருதவியாக அமைந்துள்ளதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தகவல் தொடர்பாடல் வசதி கொண்ட பிரிவும், ஒன்லைன் மூலம் பரீட்சைகள் நடத்தக் கூடிய கணனி அறைகளும் உருவாக்கப்பட்டன.

உயர்தர விஞ்ஞான, கணித வகுப்பறைகளும் ஆய்வுகூடங்களும் ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றம் செய்யப்பட்டன. இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு முக்கிய படியாக இருந்தவர் பரமேஸ்வரன். இவரின் மகத்தான பணிகளை இந்துக் கல்லூரியின் ஆசிரியர் நலன்புரிக் கழகம் போற்றி வணங்குகின்றது. பரமேஸ்வரனின் மணிவிழா கொண்டாட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்...**
**(இந்துக் கல்லூரி, கொழும்பு)**

# அனைத்து இனங்களும் ஐக்கியமாக வாழக் கூடியதொரு நாடு இலங்கை

## மேல்மாகாண ஜும்ஆ பள்ளிவாசல்களின் பிரதான கதீப்மார்களுக்கான கருத்தரங்கில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தர் கும்புருகமுவ வஜிர தேரர்

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், தெஹிவளை ஜும்ஆ பள்ளிவாசலும் இணைந்து மேல்மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் உள்ள பிரதான ஜூம்ஆபள்ளிவாசல்களது பிரதான கதீப்மார்களுக்காக (மௌலவிமார்) கடந்த ஞயிற்றுக்கிழமை தெஹிவளை முகையிதீன் ஜூம்ஆ பள்ளிவாசலில் முழு நாள் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.பி.ஏ. அஷ்ரப் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ருஸ்தி பாபு, அப்துல் ஹமீட் பாஜி, பள்ளிவாசல்களுக்கு பொறுப்பான வக்பு சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சப்ரி ஹலீம்டீன், ஜம்மியத்துல் உலமா பதில் தலைவர் அஷ்ஷேக் அப்துல் ஹாலிக், முஸ்லிம் சமய திணைக்களத்தின் நீதி அலுவலர் சட்டத்தரணி எம். சுரைஹா , பிரதமரின் முஸ்லிம் சமய விவகார ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷேக் ஹசன் மௌலானா, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தரும் மருதானை மாளிகாகந்தை பிரதான விகாராதிபதியுமான பேராசிரியர் கும்புருகமுவ வஜிர தேரோ ஆகியோர் கலந்து கொண்டு அங்கு வருகை தந்திருந்த 50 இற்கும் மேற்பட்ட கதிப்மார்களுக்கு விரிவுரைகளை ஆற்றினார்கள்.

இங்கு உரையாற்றிய சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தர் கும்புருகமுவ வஜிர தேரர் தெரிவித்ததாவது:




இந்த நாட்டில் பெரும்பான்மையான பௌத்தர்கள் வாழ்ந்தாலும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களைக் கொண்ட சகல சமூகங்களும் அனுசரித்து வாழக் கூடிய நாடாகும். இந்நாட்டில் மூவினங்களும் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வந்தன. ஆனால் கடந்த 2 வருடத்தின் முன்னர் இதே போன்ற ஒரு தினத்தில் சஹ்ரான் குழுவினரின் குண்டுத் தாக்குதலால் பலர் மரணமடைந்தனர். சஹ்ரான் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு கறுப்புப் புள்ளியை வைத்து விட்டுச் சென்றுள்ளார். இதனால்தான் நாம் ஒருவரையொருவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கிறிஸ்தவ மக்களின் இலங்கைத் தலைவர் கார்டினல் மல்கம் ரன்ஜித் ஆண்டகையின் தீர்க்க தரிசனமான நடவடிக்கையினால் இந்த நாட்டில் பாரிய அசம்பாவிதம் நடைபெறாமல் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால்தான் நாம் இன்றும் அமைதியாக வாழ்ந்து வருகின்றோம்.

ஆகவே பள்ளிவாசல்களில் உள்ள பிரதான மௌலவிமார் இணைந்து முஸ்லிம் சமூகத்தில் உள்ள இளைஞர் சமுதாயத்தினை நல்வழிக்கு கொண்டு வருதல் வேண்டும். கடும்போக்குடைய இஸ்லாமிய கொள்கைகளை விட்டு தற்போதைய இளைஞர்களை சீரான சிறந்தவர்களாக கொண்டு வருதல் வேண்டும்.




கடந்த காலங்களில் மருதானை மாளிகாகந்தையின் எனது பன்சலையில் முஸ்லிம்களுக்கு நோன்பு திறப்பதற்கு வசதியளித்தேன். அதேபோன்று மறைந்த எம்.எச். முஹம்மத் மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் பிரதான பிக்குமார்களை அழைத்து காலையுணவை வழங்கி வைத்தார். இதனால் பௌத்தம்_ இஸ்லாம் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தினை ஏற்படுத்த வாய்ப்பு கிட்டியது.

நாங்கள் பல புத்திஜீவிகளை குழுவாகக் கொண்டு நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வந்தோம். இன்றும் மௌலவி ஹசன் மௌலானவுடன் இணைந்து எனது 90 வயதிலும் எனது கடமையைச் செய்து வருகின்றேன்.

நான் வினயமாகக் கேட்டுக் கொள்வது இதுதான். முஸ்லிம் சமய திணைக்களத்தின் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்களையும் கேட்டுக் கொள்வது இதுதான். இதுபோன்ற நல்லிணக்க கருத்தரங்குகளை நாடு பூராவும் செயல்படுத்துங்கள். முஸ்லிம்களில் உள்ள சில கடும்போக்குவாதிகள் தங்களது கடும்போக்கு கொள்கையை கைவிட்டு, இந்த அழகான நாட்டில் சகல மதங்களுடன் சகோதரத்துவதோடும் ஐக்கியமாகவும் வாழ வேண்டும். நாம் சமாதானமாக வாழ வேண்டும்".

இவ்வாறு பேராசிரியர் கும்புருகமுவ தேரர் அங்கு குழுமியிருந்த மௌலவிமார் மத்தியில் உரையாற்றினார்.

மேலும் அங்கு விரிவுரையாளர்களினால் பல்வேறு தலைப்புகளில் கருத்துகள் வழங்கப்பட்டன.

**அஷ்ரப் ஏ சமத்...**

# ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள கடந்த அரசு தவறி விட்டது

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடந்த 2021.04.07அன்று பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர**

**அச்சம், சந்தேகமற்ற சமூகத்தை உருவாக்குவதற்காகவே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது. அதற்காக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு ஒன்றை உருவாக்கிய ஜனாதிபதி அதனை எனக்கு வழங்கியிருக்கின்றார். அச்சம், சந்தேகமற்ற சமூகத்தில் கப்பம் கேட்பவர்கள், பாதாள உலக உறுப்பினர்கள், சிறுவர் மற்றும் பெண்களை துஷ்பிரயோகம் செய்பவர்கள், போதைப்பொருள் கடத்தல் செய்வோர் இருக்கக் கூடாது. எனது அமைச்சின் பிரதான கடமைகளில் மேற்படி ஐந்து விடயங்களையும் ஒழிப்பதே பிரதான இலக்குகளாக உள்ளன. சிறந்த சமூகத்தை உருவாக்க உள்ள பிரதான தடைகளாக இவற்றைக் காண்கின்றோம்.**



விசேடமாக போதைப்பொருள் நாட்டினை விழுங்கக் கூடியதாக உள்ளது. நாட்டிற்குள் வருகின்ற போதைப்பொருளை முற்றாக தடுக்க முயற்சிக்கின்றோம். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் ஊடாகவே எமது நாட்டிற்குள் போதைப்பொருட்கள் பிரவேசிக்கின்றன. தீவு என்கிற வகையில், மீனவப் படகு ஊடாக எந்த விடயமானாலும் நாட்டிற்கு கொண்டு

## தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்தப்படும்

வரப்படலாம். கடந்த வாரங்களாக நாங்கள் போதைப்பொருட்களை கடற்படை ஊடாக பிடித்திருக்கின்றோம்.

நாட்டிற்குள் சர்வதேச, அரசாங்க பாடசாலைகளில் போதைப்பொருள் தடுப்பு சிந்தனையை உருவாக்கக் கூடிய பிரிவுகளை அமைக்கின்றோம். பாடசாலைகளுக்குள் எப்படி போதைப்பொருள் வருகின்றது? யார் இதற்கு அடிமையாகின்றனர்? இவற்றையெல்லாம் கண்டறிகின்றோம். உதாரணமாக 02 கிராம் ஹெரோயின் வைத்திருந்தால் மரண தண்டனை அளிக்கப்படும் என்பது பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

போதைப்பொருளுக்கு அடிமையானோரை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் செயற்பாட்டினை முன்னெடுக்கின்றோம். கடந்த வருடத்தில் 31,000 கைதிகளில் 11,000 பேர் போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டவர்கள். சிறைச்சாலைகளில் நெரிசல் ஏற்படுவதோடு மீண்டும் இவ்வாறு கைதாவோரினால் மேலும் நெரிசல் கூடுகின்றது. இவர்கள் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்றாலும் கூட மீண்டும் சங்கிலி அறுப்பு போன்றவற்றை செய்து மீண்டும் சிறைக்கே வருகின்றனர். மறுபக்கம், இயன்ற அளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கடும் சட்டத்தை அளிக்கின்றோம். புலனாய்வுத் தகவலை பார்க்கையில், சிறிய வயது பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது அதிகரித்துள்ளது. 150 வருடங்களுக்கு முன்னர் பருத்தித்துறையிலிருந்து தெற்கு முனை வரை தங்கத்துடன் கூட பெண் ஒருவர் வரக் கூடிய நிலைமை இருந்தது. இன்று பெண்களால் தனியே வீதியில் செல்ல முடியாது. சிங்கப்பூரில் தனியாக பெண்கள் நடு இரவிலும் நடமாட முடியும். எமது நாட்டில் அப்படிப்பட்ட நிலைமை இல்லாதிருப்பது கவலைக்குரியதாகும். மக்களும் இணைந்துதான் இந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

கேள்வி: அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் பெண்கள், சிறுவர் பிரிவு உள்ளன. இது பற்றி விளக்கம் தருவீர்களா?

பதில்: அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இந்தப் பிரிவு உள்ளது. 118 என்கிற தொலைபேசி பிரிவு இயங்குகின்றது. அதன் வசதிகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், அநீதிகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மக்கள் அதற்கு அழைப்பு ஏற்படுத்தி தகவலை வழங்க முடியும். அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கேள்வி: அரசியல் பழிவாங்கல் என 84 பொலிஸ் அதிகாரிகளின் பட்டியல் வழங்கப்பட்டுள்ளதாகவும், பொய்யாக பதவி உயர்வுக்கு சிலர் முயற்சிப்பதாகவும்கூறப்படுகிறது அல்லவா?

பதில்: நல்லாட்சி காலத்தில் ஏ.எஸ்.பி தரப்பினர் எஸ். எஸ்.பி வரையும், சார்ஜன்ட் நிலை அதிகாரிகள் ஐ.பி வரையும் தரமுயர்த்தப்பட்டார்கள். எந்த ஆர்ப்பாட்டமும் அதன் போது இடம்பெறவில்லை. ஆனாலும் இன்று இடம்பெறுகின்றன. கடந்த அரசாங்கம் இதனை செய்கையில் எவரும் அதற்கெதிராக குரல் கொடுக்கவில்லை. அரசியல் பழிவாங்கல் பட்டியலில் உள்ளவர்கள் குறித்து நடவடிக்கை எடுக்க சமல் ராஜபக்ஷ குழுவொன்றை அமைத்து நடவடிக்கை எடுத்தார். அமைச்சரவையில் அதுபற்றிய முறைப்பாடுகளும் குவிந்தன. பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 197 பொலிஸ் நிலையங்கள் உருவாக்கப்படும். 11,600 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்ந்தும் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2000 பேர் தற்போது பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கேள்வி: 2030ஆம் ஆண்டில் சிறந்த தலைவர் ஒருவர் நியமிக்கப்படா விட்டால் வேறு பக்கமாக ஒரு தலைவர் உருவாகி விடலாம் என்கிற அச்சுறுத்தல் உள்ளதாக கூறப்படுகின்றதே...

பதில்: தனிநபர், அமைப்பினால் ஒரு தலைவரை நியமிக்க முடியாது. நாட்டில் ஒரு தலைவர், ஒரு சட்டம் இருக்க வேண்டும். அதற்காகவே தயாராகி வருகின்றோம். இந்த நாட்டில் ஒற்றையாட்சி என்றால் அதனையே தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும். வேறு யோசனைகளின் ஊடாக நாட்டின் ஒற்றையாட்சியை மாற்றியமைக்க முனைந்தால் நாங்கள் முடிவுகளை எடுக்க வேண்டும். ஒரு நாடு, ஒரு சட்டம் என்றால் ஒரு தலைவரே நாட்டில் இருக்க வேண்டும். அனைவருக்கும் நீதியான ஆட்சியையே ஏற்படுத்த வேண்டும்.எதிர்காலத்தில் நாட்டை பிளவு செய்ய, தலைவர்கள் பிரிவுகளிடையே ஏற்படுத்த முனைந்தால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கேள்வி: கூட்டணியிலிருந்து பிரிந்து சென்று இப்படியான மாற்று அணிகளை உருவாக்கி தத்தமது பக்கத்திலான தலைவர்களை நியமிக்க முயற்சிப்பதாக கூறப்படுவது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: ஈஸ்டர் தாக்குதலைப் போன்ற சம்பவம் ஏன் இடம் பெற்றது? நல்லாட்சி அரசாங்கம் முஸ்லிம் மக்களின் வாக்குகளுக்காக அவர்களுக்கு எதிராக நடவடிக்கையை எடுக்காமையே காரணம். ஆனால் எமது அரசாங்கம் அப்படிச் செய்யாது. முழுமையாக தேசிய பாதுகாப்பு குறித்து நடவடிக்கை எடுக்கும். தமிழ்,முஸ்லிம் மக்களின் வாக்குகளுக்காக அப்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபடியினால் நாட்டு மக்களுக்கே ஆபத்து நேர்ந்தது. ஆனால் எமது அரசாங்கத்தின் காலத்தில் தேசத்துரோக நடவடிக்கை இடம்பெறாது.

## எமது அரசாங்கம் தேசத்துரோக காரியத்தில் ஈடுபடாது

கேள்வி: கர்தினால் ஆண்டகை வெளியிட்ட கருத்து குறித்து உங்கள் பதில் என்ன?

பதில்: அவரது கவலை புரிகிறது. இந்த வருடத்துடன் 02 வருடங்களாகின்ற நிலையில், அவர் கூறுவது பற்றி நாங்கள் கவனம் செலுத்துகின்றோம். இந்த இடத்தில் பொலிஸார் ஊடாக பிரதான சந்தேக நபர்கள் குறித்த விசாரணைகளை பூர்த்தி செய்திருக்கின்றோம். 08 ஆவணங்களை சட்டமா அதிபரிடம் கடந்த மாதத்தில் கையளித்துள்ளோம். 32 பிரதான சந்தேக நபர்கள் நபர்கள் இவற்றில் உள்ளனர். 211 சந்தேக நபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் உள்ளனர். சட்டமா அதிபரே நடவடிக்கை எடுப்பதற்காக தாமதத்தினை ஏற்படுத்தியுள்ளார். ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கைக்காக அவர் காத்திருந்தார். அந்த அறிக்கை வெளிவந்து ஒருமாதமாகின்ற நிலையில், அறிக்கையில் உள்ள சாட்சியங்கள் மற்றும் விசாரணையில் வெளியான சாட்சியங்களை ஆய்வு செய்தே சட்டமா அதிபரினால் நடவடிக்கை எடுக்கப்படும். ஜனாதிபதி மற்றும் என்னால் கூட இவர்களுக்குஎதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது. சட்டமா அதிபரே இதனை செய்ய வேண்டும். தாமதம் ஏற்படுகிறது என்றால் அதற்கு சட்டமா அதிபரே காரணம். எனினும் அவசரமாக வழக்கு தாக்கல் செய்ய முடியாது. அமெரிக்காவின் செப்டம்பர் தாக்குதலின் பிரதான சந்தேக நபரான சேக் மொஹமட் என்பவர் கௌதமாலா சிறையில் உள்ள போதிலும், 07 வருடங்களாக அவருக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவதற்கு எத்தனை வருடங்கள் சென்றன?

ஆகவே சட்டமா அதிபர், சட்டத்தரணிகள் இரவுபகலாக ஆய்வு செய்து வருகின்றார்கள். குற்றவாளிகள் எவரும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிச் செல்ல இடமளிக்காத வகையில் அவ்வாறு சிமரப்படுகின்றார்கள். இலங்கையிலுள்ள பிரபல சட்டத்தரணிகளே இதில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆகவேதான் காலத்தைப் பெற்று சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். தாமதத்திற்கான காரணத்தை கேட்டாலும் சட்டமா அதிபர் அதற்கான பதிலை அளிப்பார். கடந்த மாதத்திலும் கூட சந்தேக நபர்கள் கைதாகினார்கள். மௌலவி உட்பட சிலருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆவணங்களை நாங்கள் கையளித்து விட்டோம். சட்டமா அதிபரிடமே அனைத்து செயற்பாடுகளும் தேங்கியுள்ளன. சாரா கைது செய்யப்பட வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில்தான் இருக்கின்றோம். அவர் தொடர்பிலான மரபணு பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கேள்வி: குருநாகலில் உயிரிழந்த இந்தியப் பிரஜை குறித்த விசாரணைகள் எவ்வாறு உள்ளன?

பதில்: அவர் சித்த சுவாதீன மற்றவர் என்கின்ற விடயம் அம்பலமாகியிருக்கின்றது. அவர் குறித்த விசாரணை தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றது. அவர் திருமணமாகியிருக்கின்ற போதிலும் சித்தசுவாதீனமற்றவராகவே இருந்திருப்பதாக அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேள்வி: மாகாண சபைத் தேர்தல் அவசியமா?

பதில்: எனது நிலைப்பாடு என்னவென்றால் மாகாண சபைக்கு நான் அன்றும், இன்றும் எதிரானவன். எனினும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்தால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. இருப்பினும் ஒரே நாடு ஒரே சட்டம் என்றால் 9 மாகாணங்களுக்கும் வெவ்வேறு சட்டம் தேவையில்லை. இது எனது தனிப்பட்ட கருத்து.

# கவிதையுலகின் முடிசூடா மன்னன் நீலாபாலன்

**பன்முக ஆளுமை கொண்ட மூத்த கவிஞராக கல்முனை பூபால் விளங்கினார். அவர் பதுளையில் கடந்த 5ஆம் திகதி காலமான செய்தி அவரது அபிமானிகளுக்கு துயரை ஏற்படுத்தியது.**

கல்முனையை பிறப்பிடமாகக் கொண்ட நல்லதம்பி பூபாலரெத்தினம் எனும் 'கல்முனை பூபால்' வெலிமடையை வசிப்பிடமாக கொண்டிருந்தார். 'கல்முனை பூபால்' என்ற பெயரில் படைப்புகளை வழங்கி ஈழத்தின் பிரபல எழுத்தாளராக விளங்கினார். பின்னர் ' நீலாபாலன் ' என்ற பெயரில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். ஆயிரக்கணக்கான கவிதைகளையும் ஏராளமான புத்தகங்களையும் எழுதிப் படைத்துள்ளார்.



பன்முக ஆளுமை கொண்ட இலங்கையின் மூத்த படைப்பாளி ஒருவரை இலக்கிய உலகு இழந்திருக்கின்றது. கவிஞர், எழுத்தாளர், சிறுகதை எழுத்தாளர், நாடக ஆசிரியர், மேடைப்பேச்சாளர், தொழிற்சங்கவாதி என பன்முக ஆளுமை கொண்ட மூத்த கவிஞர் கல்முனை பூபால் ஆவார்.

இறக்கும் போது அவருக்கு வயது 73. கல்முனையில் 'புதிய பறவைகள்' என்ற இலக்கிய மன்றம் ஒன்றை 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உருவாக்கிய இவர், அந்தப் பிரதேசத்தில் பல இளைஞர்களையும் இலக்கிய துறைக்குள் ஈடுபடுத்தி எழுத்தாற்றலையும் படைப்பாற்றலையும் விதைத்த பெருமைக்குரியவர்.

கிழக்கிலங்கையின் கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்படும் நீலாவணனுடன் சமகாலத்தில் பயணித்த இவர், மூத்த படைப்பாளியும் கவிஞருமான மூ.சடாச்சரனின் மைத்துனர் ஆவார்.

நீலாவணன், மூ.சடாட்சரம், மருதூர்க் கனி, மருதூர்க் கொத்தன், பேராசிரியர் நுஹ்மான், பாவலர் பஸீல் காரியப்பர் உட்பட பெரும் படைப்பாளிகளுடன் சமகாலத்தில் பணியாற்றிய ஒரு இலக்கிய ஆளுமையே நீலாபாலன்.

1976 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெலிமடையில் குடிபெயர்ந்தார் அவர். தோட்டக் கம்பெனி ஒன்றில் எழுதுவினைஞராக பணியாற்றி தோட்ட நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெற்ற இவர், தோட்டத் தொழிலாளர்களுக்காகவும் குரல் கொடுத்தவர்.

15க்கும் மேற்பட்ட நாடகங்களை மேடை ஏற்றியுள்ள நீலா பாலன் சுமார் 75 கவியரங்குகளுக்கு தலைமை தாங்கி இருக்கிறார். 'தமிழோசை ' என்ற கையெழுத்து பிரதிக்கும் நீண்ட காலம்ஆசிரியராக இருந்தவர். 'இலங்கை பழுத்துப் புழுக்கள்' 'கடலோர தென்னைமரம்' ஆகிய இரண்டு நாடகங்களை மேடையேற்றி பெரும் வரவேற்பைப் பெற்றவர்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ந்தும் கவிதைகள் எழுதி கவிதை மன்னராகவே திகழ்ந்த நீலா பாலன் பாவரவு கவிதை வித்தகர் கவிமாமணி, தமிழ்மணி கவிதைப் பருதி ஆகிய பட்டங்களுக்கு சொந்தக்காரராக திகழ்ந்தார். அதேநேரம் அரசாங்கத்தின் உயர் விருதான 'கலாபூசணம் ' விருதும் இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**வி.ரி.சகாதேவராஜா...**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

# குடும்ப பரம்பரை உறுப்பினர்களை ஒன்றிணைத்து உருவாகும் அமைப்புகள்

**கோறளை மத்தி வாழைச்சேனை பிரதேச செயலக எல்லைப் பிரிவிற்குள் அடங்குகின்ற வாழைச்சேனை_4 மற்றும் வாழைச்சேனை_5 இல் வசிக்கின்ற ஒரு பரம்பரையினரின் குடும்ப அங்கத்தவர்களை ஒன்றினைத்து உருவாக்கப்பட்ட சமூக மேம்பாட்டு நிறுவனமான உசன்ஹாஜி பவுண்டேசன் அண்மையில் வாழைச்சேனையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.**



'பரம்பரையினரை இறைவனின் பால் அழைக்கின்ற நற்குடும்பங்களாக ஒன்றிணைத்தல்' என்ற எண்ணக்கருவில் உருவாக்கப்பட்ட இந்த பவுண்டேசனில் வாழைச்சேனையில் வசிக்கின்ற ஒரே இரத்த உறவில் இருந்து உருவாகிய 30குடும்பங்களின் 70 இற்கும் மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டனர்.

வாழைச்சேனையில் உசன்ஹாஜி என்பவர் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுக வரலாற்றில் முதன்முதலாக ஆழ்கடல் இயந்திரப் படகு மூலமாக கடலுக்கு தொழிலுக்காக சென்ற கடற்றொழிலாளி என்பதோடு இவரது புதல்வர்களும்,மருமகன்களும் வாழைச்சேனையில் ஆழ்கடல் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வாழைச்சேனையின் பொருளாதார மேம்பாட்டில் பங்கெடுத்த குடும்பங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது வாழைச்சேனையில் உள்ள அரச உத்தியோகத்தர்களில் ஒரு பரம்பரையினரால் உருவாக்கப்பட்ட ஆகக் கூடிய அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட குடும்பங்களாகவும் உசன் ஹாஜி பவுண்டேசனில் அங்கத்துவம் பெற்றுள்ள பேரப்பிள்ளைகள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களே அதிகம் உள்ளதால் எதிர்கால பிரதேச சமூக அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து குடும்பங்களை பாதுகாப்பதினூடாக சமூகத்தை பாதுகாக்க முடியும் என்ற நல்வெண்ணத்தில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் வறிய நிலையிலுள்ளவர்களுக்கு நலனோம்பு விடயங்களை செய்வதனூடாகவும் நலன்புரி விடயங்களில் கவனஞ் செலுத்துவதனூடாகவும் அங்கத்தவர்களை ஒன்றினைத்து எதிர்காலத்தில் வறுமையை ஒழிக்கும் பாரிய நிறுவனமாக இதனை மாற்ற நடவடிக்கை எடுப்பதாக நிறுவனத்தின் ஸ்தாபக தலைவர் தெரிவித்தார்.

கிழக்கில் தற்போது இவ்வாறான குடும்ப அங்கத்தவர்களை ஒன்றினைத்து உருவாக்கப்பட்ட அமைப்புக்களால் மருத்துவ உதவிகள் மற்றும் புனித பயணங்களுக்கான கட்டுப் பணத்தை சுழற்சி முறையில் வழங்கி வைத்தல், உயர்கல்விக்கு உதவுதல் போன்ற மேம்பாட்டு விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பவுண்டேசனின் ஆலோசகரும், உசன்ஹாஜியின் மூத்த புதல்வருமான சம்சுதீன் இங்கு கலந்து கொண்டு கருத்து தெரிவித்தார்.

**யு.எல்.எம்.ஹரீஸ்...**
**(வாழைச்சேனை விசேட நிருபர்)**

## அரசை அவமதிக்கும்...

தள்ளுபடி செய்ய முடியாதென வழங்கிய தீர்ப்பை தொடர்ந்து தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்கள் மீது அடாவடித் தனமான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தோட்டத் தொழிலாளர்கள் தமது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு நேற்று (08) கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளாதாவது,

தொழிலாளர்களின் 1,000 ரூபா சம்பள விடயத்தில் ஆரம்பம் முதலே முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் தோட்ட கம்பனிகளே.அவர்கள் எந்தக் காரணம் கொண்டும் அந்த சம்பள உயர்வை தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்க கூடாதென்ற எண்ணத்திலேயே செயற்பட்டு வந்தனர். ஆனால் இன்று இந்த விடயம் நீதிமன்றம் வரை சென்றுவிட்டது.நீதிமன்றம் வர்த்தமானி அறிவித்தலை நீக்க முடியாதென தீர்ப்பளித்துள்ள நிலையில் இன்று தோட்ட கம்பனிகள் தொழிலார்களை பழிவாங்குகின்ற செயலில் ஈடுபட்டு வருகின்றது. தற்பொழுது தோட்டங்களில் தோட்டங்களை துப்பரவு செய்வதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் தோட்ட நிர்வாகம் மேற்கொள்வதில்லை. இதன் மூலம் தோட்டங்களை காடுகளாக்கி தனியாருக்கு வழங்குவதற்கு அல்லது சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுகின்றார்களா? என்ற கேள்வியும் எங்கள் மத்தியில் ஏற்படுகின்றது. அது மட்டுமல்லாமல் ஒரு நாள் சம்பளத்திற்கு எடுக்கப்படுகின்ற தேயிலை கொழுந்தின் எடையையும் அதிகரித்து இருக்கின்றார்கள். இது தொழிலாளர்களுக்கு ஒரு பெரும் சுமையாக அமைந்துள்ளது. எனவே தோட்டத் தொழிலாளர்களின் பொறுமையை சோதிக்க யாராவது நினைத்தால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமாக இருக்கும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் அமைதியாக இருப்பது யாருக்கும் பயந்து கொண்டு என யாரும் நினைத்தால் அது அவர்களின் முட்டாள்தனம். எனவே தோட்டத் தொழிலாளர்களின் விடயத்தில் தோட்ட கம்பனிகள் ஒரு சரியான நடைமுறையை பின்பற்றாவிட்டால் தோட்ட நிர்வாகத்திற்கு தொழிலாளர்கள் பாடம் புகட்ட வேண்டிய ஒரு நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரஞ்சனின் பதவி..

வெற்றிடமாக்கிய பின்புலத்தில் அரசாங்கத்தின் சூழ்ச்சியொன்று இடம்பெற்றுள்ளதுடன் அதற்கு சபாநாயகரும் துணை நின்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தினார். பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற பதவி வெற்றிடமாகியுள்ளமை தொடர்பில் சபாநாயகர் அளித்த விளக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒரு கருத்து வேறுபாட்டு தீர்ப்பை வழங்கியுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றில் வாதாட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உரிமையுள்ளது. வழக்கு முடியும்வரை அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார் என்ற முடிவை எடுக்க வேண்டும். ஆனால், சபாநாயகர் அவசரப்பட்டு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். நீதிமன்றில் வழக்கு விவாத்தில் உள்ள தருணத்தில் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் துரதிஷ்டவசமானது. இதற்கு பின்னால் அரசாங்கத்தின் சூழ்ச்சி உள்ளது. அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதை நீக்குவதே அந்த சூழ்ச்சியாகும்.

கம்பஹா மாவட்ட மக்களின் அங்கீகாரத்துடன்தான் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்திற்கு தெரிவானார். அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையை பரிப்பதானது மக்களின் அங்கீகாரத்திற்கு எதிரான செயற்பாடாகும்.

ஒருவேளை, உயர்நீதிமன்றத்தில் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்தில் இருக்க வேண்டுமென தீர்மானம் எடுத்தால் சபாநாயகர் என்ன செய்வார்? தற்போது உயர் நீதிமன்றில் வழக்காட அவர் தயாராகிக் கொண்டிருக்கிறார். தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை எழுதி இது தொடர்பில் தெளிவுப்படுத்த வேண்டும். எமது நாட்டில் ஒருவருக்கு அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட வேண்டிய உரிமை மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவருக்கு உள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் பிரகாரம் அவரை பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கக் கூடாது. உயர்நீதிமன்றம் ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தால் நாங்கள் இதனை ஏற்றுக்கொள்கிறோம். சபாநாயகரின் அறிவிப்பு தவறானது என்பதுடன், அரசியல் அமைப்புக்கும் எதிரான தீர்மானமாகும். பிரேமலால் ஜயசேகரவுக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை இருந்தது. ஆனால், ரஞ்சனுக்கு அந்த உரிமை வழங்கப்படவில்லை. சபாநாயகர் இவ்வாறு செயற்படுவதன் மூலம் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் ஒரு பங்காளராக செயற்பட்டுள்ளார் என்றார்.

## புலிகளைப் புகழ்பவர்கள்

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். பத்திரிகைகள், இணையத்தளங்கள் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைப் போற்றியும், அவர்களை நினைவுகூர்ந்தும் கருத்துக்களைப் பதிவிடுபவர்களும் இவ்வாறு கைது செய்யப்படுவார்களென்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## கரோலின் ஜூரி, சூலா..

பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை மாலை திருமதி அழகி போட்டியில் நடந்த சம்பவம் தொடர்பில் இவர்கள் கொழும்பு 07 கருவாத் தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அறிக்கைகளை பதிவு செய்வதற்காக பொலிஸ் நிலையத்தில் ஆஜரான பின்னர் இருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். புஷ்பிகா டி சில்வாவிடம் மன்னிப்பு கேட்க கரோலின் மறுத்துவிட்டதாக ஆங்கில ஊடகம் ஒன்றும் தெரிவித்திருந்தது. அதே நேரத்தில் மன்னிப்பு கேட்காமல் இந்த விஷயத்தை தீர்க்க புஷ்பிகாவும் மறுத்துவிட்டார்.

இந்நிலையிலேயே கைது செய்யப்பட்ட திருமதி உலக அழகியான கரோலின் ஜூரி மற்றும் முன்னாள் மாடல் சூலா பத்மேந்திரா ஆகியோர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## பிரதமர் மோடிக்கு

வியாழக்கிழமை காலை பெற்றுக் கொண்டார்.

கடந்த மார்ச் மாதம் கொரோனா தடுப்பூசியின் முதலாவது டோஸை பெற்றுக்கொண்ட அவர், நேற்று தனது இரண்டாவது டோஸை பெற்றுக்கொண்டுள்ளார். எய்ம்ஸ் மருத்துவமனையில் அவருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டது.

இது குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்த அவர், தகுதியுடைய அனைவரும் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சாதாரண தர

30 மற்றும் 39 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாட்டு தீவிரவாத குழுக்களுக்கு உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் சொற்பொழிவுகள் அடங்கிய விடயங்கள் சந்தேகநபர்களால் இந்நாட்டு சிறுவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஒலுவில் பிரதேசத்தில் இந்த வகுப்புக்கள் நடைபெற்றுள்ளதுடன், அதில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு அவர்களின் அனுமதியின்றி பல்வேறு உடற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார். இப் பயிற்சிகளை விரும்பாத மாணவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், அவ்வாறு தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பு பயங்கரவாத விசாரணை பிரிவிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தடுப்பு காவல் உத்தரவின் பேரில் அவர்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான குண்டுதாரியான பயங்கரவாதி சஹ்ரான் ஹசீமின் ஒத்துழைப்புடன் இந்த வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

## IPL தொடர் இன்று...

9ஆம் திகதி முதல் மே 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடரின் முதல் லீக் போட்டியில், நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதவுள்ளன.

சென்னை சிதம்பரம் மைதானத்தில் இன்று உள்ளூர் நேரப்படி இரவு 7.30 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டியில் மும்பை அணிக்கு ரோஹித் சர்மாவும், பெங்களூர் அணிக்கு விராட் கோஹ்லியும் தலைமை தாங்கவுள்ளனர்.

இரு அணிகளும் முன்னதாக 27 முறை மோதியுள்ளன. இதில் மும்பை அணி 17 போட்டிகளிலும் பெங்களூர் அணி 10 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

## சபைக்குள்ளும் சலசலப்பு...

சீருடையை ஒத்ததாக உள்ளது. எனவே, இப்படையணி குறித்து அரசு ஆராய வேண்டுமென எதிர்க்கட்சி சபையில் வலியுறுத்தியது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபை நடவடிக்கை இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் ஒழுங்குப்பிரச்சினையொன்ற எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன்,

"ஒரே நாடு, ஒரே சட்டமெனில் இந்நாட்டில் ஒரு காவல்துறை பிரிவுதான் இருக்கவேண்டும். எனினும், யாழ்ப்பாணம் முதல்வரால் தனியான பாதுகாப்புக்குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. (காவல்படை). யாழ். நகரில் காவல்துறையினரால் முன்னெடுக்க வேண்டிய பணிகளை நேற்று முதல் (நேற்றுமுன்தினம்) அக்குழுதான் செய்கின்றது. போக்குவரத்து நெறிப்படுத்தலும் முதல்வரின் பாதுகாப்பு குழுவின்கீழ்தான் இடம்பெறுகின்றது. கடந்த காலங்களில் புலிகளின் காவல்துறை பிரிவு அணிந்திருந்த ஆடைக்கு நிகரான ஆடையையே இந்த குழுவும் அணிந்துள்ளது.

இது தொடர்பில் அரசுக்கு தெரியுமா, இது பாரதூரமான பிரச்சினையாகும். எனவே, இது தொடர்பில் அரசு தேடிபார்க்க வேண்டும்." என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ச,

" இன்று (நேற்று) மாலை பாதுகாப்பு ஆலோசனைக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அனைத்து அதிகாரிகளும் வருவார்கள். அங்குவந்து தகவல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி., " ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் வந்த முதல்வரே அவ்வாறு செய்துள்ளார்" என சுட்டிக்காட்டினார்.

## இரண்டாவது டோஸ்...

வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனவரி 29ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதிவரையான காலப் பகுதியில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகள் 9 இலட்சத்து 24 ஆயிரத்து 927 பேருக்கு முதல் தடுப்பூசியாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் பிரகாரம் முதல் தடுப்பூசி வழங்கப்பட்டு 12 வாரங்களின் பின்னர் இரண்டாவது தடுப்பூசி வழங்கப்படும் போது மிகவும் வீரியமான நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கப்பெறுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 23ஆம் திகதிமுதல் ஜூலை மாதம் 6ஆம் திகதிவரை இரண்டாவது தடுப்பூசி வழங்கப்படும். ஏப்ரல் 23ஆம் திகதியின் பின்னர் கட்டங்கட்டமாகவே இரண்டாவது தடுப்பூசி வழங்கப்படும். இரண்டாவது தடுப்பூசியை வழங்குவதற்காக 3,56,730 தடுப்பூசிகள் தொற்று நோய் பிரிவிடம் கையிருப்பில் உள்ளன.

9,24,627 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியை தற்போதைய சூழலில் வழங்க வேண்டியுள்ளது. இரண்டாவது தடுப்பூசியை வழங்க கையிருப்பில் உள்ள தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக 5,67,000 அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகள் தேவைப்படும். இந்த தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உரிய துறையினருடன் இணைந்து பணியாற்றி வருகிறது. எதிர்வரும் வாரங்களில் குறித்த தடுப்பூசி தொகை கிடைக்கும். ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகள் அனைத்தும் இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் மாத்திரமே பெற்றுக் கொள்ளப்படும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைத்த பின்னர் சினோபார்ம் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவது குறித்து தேசிய ஔடதங்கள் அதிகாரசபை தீர்மானிக்கும். தற்போது இந்த தடுப்பூசிகளை இலங்கையில் உள்ள சீன பிரஜைகளுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், 2023ஆம் ஆண்டு வரை தடுப்பூசிகளுக்கு ஆயுட்காலம் உள்ளது என்றார்.

## பாம் ஒயிலுக்கான

பாவனை பொதுமக்களின் சுகாதாரத்தை பாதிப்பதனாலாகும்.

பாம் எண்ணெய் பயன்பாட்டின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவுகள் பெரும்பாலும் பிரதானமான பல நோய்களை உருவாக்குவதாக வைத்தியர்கள், உணவு தொடர்பான விசேட நிபுணர்கள் மூலம் அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும் உரிய தரப்படுத்தப்பட்ட பாம் எண்ணெய் வகையைக் கொண்டு பிஸ்கட், உணவு பண்டங்கள், ஒரு சில பான் வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1511.90.10 எனும் குறியீட்டைக் கொண்ட வகை (Harmonized System code) அவ்வாறானதாகும். அது புழக்கத்தில் பாம் ஸ்டியரின் என்று (Palm Stearin) குறிப்பிடப்படும். இந்த உப உணவு உற்பத்திக்கு பயன்படுத்துவதற்காக இவ்வகையை இறக்குமதி செய்வதற்கு எவ்வித தடைகளும் இல்லை எனத் தெரிவித்தார்.

## சீருடை தொடர்பில்...

ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, யாழ். நகர முதல்வர், யாழ்.நகர ஆணையாளர் உள்ளிட்ட சில தரப்பினரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு, யாழ்ப்பாணம் பொலிஸ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் மாநகர...

சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் அறிவித்திருந்தார்.

அத்தோடு, இந்த நடைமுறையை கையாள்வதற்காக யாழ்ப்பாணம் மாநகர காவல் படை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனையடுத்து, காவல் படையினர் நேற்று முன்தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றிருந்தனர்.

காவல் படையின் படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டும் வந்தன.

காவல் படையின் சீருடை தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல் துறை சீருடைகளை ஒத்த சீருடை என பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, யாழ். மாநகர சபை ஆணையாளரை நேற்று முன்தினம் இரவு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸார், நீண்ட விசாரணைகளை முன்னெடுத்து சுமார் 03.00 மணி நேரம் வாக்கு மூலத்தை பதிவு செய்தனர்.

அதனையடுத்து காவல் படையின் கடமைகளை உடனடியாக நிறுத்துமாறும் அவர்களின் சீருடைகளை தம்மிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸார் ஆணையாளருக்கு பணித்திருந்தனர். அதன்பிரகாரம் காவல் படையின் கடமைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் சீருடைகளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக காவல் படையின் சீருடைகளை கொழும்புக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பிரதேச வேறுபாடின்றி...

(03 ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையை வெற்றி கொள்வதன் அவசியம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சிறந்த சுகாதார சேவையை உறுதி செய்வதற்கு வைத்தியர்களின் விரைவான அவதானம் இடம்பெற வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கண்டி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கல்வி அமர்வுகள் இன்று வெள்ளிக்கிழமை (09) நிறைவுபெறும். இங்கு புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் விசேட அனுபவங்கள் தொடர்பான ஆய்வுகள் விரிவாக ஆராயப்படும்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, கண்டி நகர பிதா கேசர சேனாநாயக்க, கண்டி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் துஷ்யந்த மெதகெதர ஆகியோருடன் வைத்திய சங்கத்தின் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## உள்நோக்கம் எதுவுமில்லை...

பிரதிபலிப்பும் இல்லையென மாநகர முதல்வர் சட்டதரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தப் புதிய முயற்சி கொழும்பு மாநகர சபையின் முன்னுதாரணமான செயற்பாட்டைப் பின்பற்றியே முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் நேற்று ஊடக சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ். மாநகர சபையால் மாநகரத்தை தூய்மைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைச் செயற்பாட்டுக்காக மாநகர காவல் படை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந் நிலையில், அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள சீருடை விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பிரிவின் சீருடை வடிவமென சில இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் தகவல் பரப்பப்பட்டது. இந்நிலையில், இதுகுறித்து விளக்கமளித்துள்ள மணிவண்ணன், அவ்வாறான எந்தவொரு முன்னிலைப்படுத்தலோ அல்லது உள்நோக்கமோ கிடையாதென்று குறிப்பிட்டுள்ளார். இந்த புதிய காவல் படையானது ஏற்கனவே மாநகர சபையில் பணிபரியும் ஐந்து ஊழியர்களைப் பயன்படுத்தியே உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் வடக்கிலுள்ள ஒரேயொரு மாநகரத்தை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதற்காக, குப்பைகளைக் கண்டபடி போடுபவர்கள் மற்றும் நகரை அசுத்தமாக்கும் பிற செயற்பாடுகளைச் செய்பவர்களைக் கண்டறிந்து அந்தச் செயற்பாடுகளைத் தடுப்பார்களென அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இந்தச் செயற்பாடு கொழும்பு மாநகர சபையின் செயற்பாட்டைப் பின்பற்றியே முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், பரப்பப்பட்டுவரும் செய்திகளுக்கு மாநகரசபை பொறுப்பேற்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொரோனா புதிய ...

(03 ஆம் பக்கத் தொடர்)

இருப்பினும் நிபுணர் குழு ஒப்புதல் வழங்க இன்னும் தரவுகள் அவசியமெனசுட்டிக்காட்டிய அவர், விரைவில் இலங்கையில் சினோபார்ம் தடுப்பூசியைப் பயன்படுத்த அங்கீகாரம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவில்...

(03 ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை பிரிட்டனில் புதிதாக இனங்காணப்பட்டுள்ள B.1,428 வகை கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் 7 பேர் நாட்டில் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 6 பேர் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் மேலும் ஒருவர் மீனவர் ஆவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி தொற்றுக்குள்ளான நோயாளர்கள் மூவர் கொழும்பு பகுதியில் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களிடம் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## தோட்ட தொழிலாளர்களை...

கொடுப்பனவை வழங்க நிர்வாகம் மறுத்திருக்கின்றது.

இது ஒரு கண்டனத்துக்குரிய செயற்பாடென இ.தொ.கா. பொதுச்செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு அவர் எழுதியுள்ள அவசர கடிதத்தில், பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் அனைத்து கம்பனிகளும் தேயிலைக்கும், இறப்பருக்கும் வழங்கப்படும் மேலதிக நிறைக்கொடுப்பனவை மார்ச் மாதத்தில் வழங்க மறுத்திருக்கின்றன.

தினசரி பறிக்கப்படும் மேலதிக கொழுந்துக்கும் இறப்பருக்கும் 40வீதம் வழங்கப்படுவது வழக்கமாகும். மார்ச் மாதம் சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்துக்கு அரச வர்த்தமானி அறிவித்தலூடாக சம்பளம் அதிகரித்ததன் காரணமாக தொழிலாளர்களுக்கு இக்கொடுப்பனவை வழங்க கம்பனிகள் மறுத்திருக்கின்றன.

தாங்கள் ஒரு பொறுப்புவாய்ந்த அதிகாரி என்ற முறையில் இதற்கான ஒரு காத்திரமான தீர்வை மேற்கொள்வதன் மூலம் தொழிலாளர்களுக்கு இந்த மேலதிக நிறைக் கொடுப்பனவை வழங்க ஆவண செய்யுமாறு நாம் எதிர்பார்க்கின்றோம் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாக சட்டத்தரணி கா. மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

## யாழ். மாநகர சபை...

(03 ஆம் பக்கத் தொடர்)

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலில் ஆர்வம் செலுத்துகின்ற இளைய தலைமுறையினருக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பதற்காக சட்டத்தரணி மணிவண்ணனுக்கு ஆதரவு வழங்குவதற்கு எமது கட்சியின் தலைமை தீர்மானித்திருந்தது.

எவ்வாறெனினும், எமது கட்சியின் ஆதரவுடன் ஆதிகாரத்தைப் பெற்றுக்காண்டவர்கள், முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அவை தொடர்பாக எம்முடனும் கலந்துரையாட வேண்டியது தார்மீக கடமையாகும்.

ஆனால் காவல்படை உருவாக்கம் தொடர்பாக எம்மோடு கலந்துரையாடப்படவில்லை. இதுதொடர்பில் எமது கரிசனையை வெளிப்படுத்தும் வகையிலேயே இன்றைய அமர்வுகளை புறக்கணித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## நேற்றும் சபையில்...

நீக்கப்பட்டமைக்கு எதிராகவும் ஆதரவாகவும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் நேற்று சபையில் கோஷம் எழுப்பியதால் அமளிதுமளி ஏற்பட்டு சபை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பின் போது அரசியலமைப்பின் பிரகாரமும் மேல் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலுமே ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இவ்விடயத்துக்கும் அவரின் பாராளுமன்ற விடுமுறை கோரலுக்கும் தொடர்பு கிடையாது. அரசியலமைப்பின்படி எடுக்கப்பட்ட இந்த முடிவு தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தை கேள்விக்குட்படுத்த முடியாது. எனவே ரஞ்சன் ராமநாயக்க விடயத்தில் அடிப்படையற்ற கருத்துக்களை எதிர்க்கட்சித் தலைவர் முன்வைக்க கூடாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

இதனையடுத்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சபாநாயகரின் அறிவிப்பை நிராகரித்ததுடன் இதன் பின்னணியில் அரசின் சூழ்ச்சி உள்ளதாகவும் அதற்கு சபாநாயகர் துணை போவதாகவும் குற்றம்சாட்டி கருத்துக்களை முன்வைத்தார். இதனையடுத்து அரச மற்றும் எதிர்க்கட்சியினரிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. இதன் உச்சக்கட்டமாக பீல்ட் மார்ஷலும் எதிர்க்கட்சி எம்.பி.யுமான சரத் பொன்சேகாவுக்கும் அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷவுக்குமிடையில் ஏற்பட்ட கடும் தொனியிலான வாய்த்தர்க்கம் அமைந்தது. இதனால் இரு தரப்பிலும் கூச்சல்,குழப்பங்கள் ஏற்பட்டன. சபைக்குதவாத வார்த்தைகள் தாராளமாக பயன்படுத்தப்பட்டன.

சரத் பொன்சேகா எம்.பி.க்கும் அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்குமிடையில் கடும் தர்க்கம் நடந்து கொண்டிருக்க பிரதான எதிர்க்கட்சியினரான ஐக்கிய மக்கள் சக்தியினர் கைகளில் கறுப்பு பட்டிகளைக் கட்டியவாறும் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. யின் படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் அரசை விமர்சித்து பாடல் பாடியவாறும் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கினர். இதனால் ஏற்கனவே கூச்சல் குழப்பங்களினால் அதிர்ந்து கொண்டிருந்த சபையில் பெரும் களேபரமே ஏற்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கியதையடுத்து சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முற்பகல் 10.30 மணியளவில் சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்கள் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார்.

எதிர்க்கட்சியினர் தமது பக்கத்தின் முன்வரிசை ஆசனங்களுக்கருகில் நின்றவாறு பதாகைகளை ஏந்தி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிக்கொண்டிருந்தபோது அரச தரப்பினரும் பதாகைகளுடன் சபைக்கு நடுவில் வந்து எதிர்க்கட்சியினர் பக்கம் சென்று அவர்களுக்கு முன்பாக நின்று அவர்களின் பதாகைகளையும் அவர்களையும் மறைத்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் எதிர்க்கட்சியினர் தமது எதிர்ப்பு நடவடிக்கைகை கைவிட்டு சபையிலிருந்து வெளியேறினர். இதனையடுத்து அரச தரப்பினரும் தமது இடம் திரும்பினர்.இதனைத் தொடர்ந்து முற்பகல் 10.50 மணியளவில் சபை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகின.

## தடுப்பூசி கொள்வனவு...

(03 ஆம் பக்கத் தொடர்)

நடந்தால் தடுப்பூசியை கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.

ஜோன்சன் அன்ட் ஜோன்சன் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு அமெரிக்க கட்டுப்பாட்டாளர்கள் முறையாக ஒப்புதல் அளித்துள்ளனர்.

இந்தத் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அங்கீகரிக்க வேண்டும்.

தடுப்பூசி செலவு குறைந்ததாக அமைக்கப்பட்டுள்ளது மற்றும் உறைவிப்பானுக்கு பதிலாக குளிர்சாதன பெட்டியில் சேமிக்க முடியும்.

அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட தடுப்பூசி சோதனைகளின் முடிவுகள் வைரஸின் மோசமான விளைவுகளுக்கு எதிரான அதன் செயல்திறனை கண்டறிந்தன.

கடுமையான நோயைத் தடுப்பதில் இது 85 வீதத்துக்கும் மேலானது என்று தரவு காட்டியது. ஆனால் ஒட்டுமொத்தமாக 66வீதம் மட்டுமே பயனுள்ளதாக இருந்தது என்றும் கூறப்படுகிறது.

தடுப்பூசி பெற்றவர்களிடையே எந்த இறப்பும் இதுவரையில் பதிவாகவில்லை என்பதுடன், தடுப்பூசி ஏற்றிக்கொண்ட பின்னர் 28 நாட்களுக்குப் பின்னர் மருத்துவமனையில் எவரும் அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அக்குறணை பிரதேசத்தின் பாரிய மாற்றத்திற்கான மூன்றாண்டு...





**அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் பதவியேற்று மூன்றாண்டு நிறைவை முன்னிட்டு தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி**

தவிசாளர்

# இஸ்திஹார் இமாமுதீனின் நேர்த்தியான முகாமைத்துவம்

நேர்காணல்
இக்பால் அலி

**? நீங்கள் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளராக பதவியேற்று மூன்றாவது நிறைவு தினத்தை நிறைவு செய்யும் தருணத்தில் நீங்கள் சாதித்த விடயங்கள் பற்றி சுருக்கமாக குறிப்பிட முடியுமா?**

அக்குறணை பிரதேச சபையின் தலைவர் என்ற பதவியில் இருந்து சற்று விலகி நாங்கள் 2011 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு ஒரு பிரதேச சபை உறுப்பினராக நான் தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து செய்த பணிகளைக் குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதுகின்றேன்.

அக்குறணை என்பது பல்லின சமூகம் வாழுகின்ற பிரதேசமாகும். அதிலும் குறிப்பாக அதிகளவு முஸ்லிம்கள் வாழுகின்றனர். அத்துடன் சிங்கள, தமிழ் சகோதரர்கள் வாழுகின்றனர்.மறைந்த அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் சுலைமானுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்திற்கும் சிங்கள சமூகத்திற்குமிடையே ஒரு விரிசல் காணப்பட்டது.இரண்டு சமூகங்களையும் இணைப்பதிலே தான் அதிக கவனம் செலுத்தி நாங்கள் செயற்பட்டு வந்தோம்.

நான் நீதிக்கும் அபிவிருத்திற்குமான மக்கள் அமைப்பின் மூலமாகத் தான் அரசியலுக்குள் வந்தேன். 2011 ஆம் ஆண்டு முதல் ஒரு பிரதேச சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு எங்களால் எவ்வளவு பணிகள் செய்ய முடியுமோ அந்தளவுக்கு நாங்கள் பணிகள் செய்தோம்.

அந்த வகையிலே தான் 2018 ஆம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நான் பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்படுவதற்கு எங்களுடைய கடந்த கால நடவடிக்கைகள் தான் உண்மையிலேயே காரணமாக அமைந்தது என்பதையும் இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

பி. எம் ஜே. டி அமைப்பினர் முன்னெடுத்த இந்த அரசியல் பயணம் தான் அக்குறணையில் வெற்றியளித்துள்ளதென நான் கருதுகின்றேன்.

அதே போன்று 2018 ஆம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்பு நான் இந்தப் பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்படுவதற்கு பல வகையிலும் உதவி செய்த அனைவரையும் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப் படுத்திக் கொள்கின்றேன்.

அதேவேளை பிரதேச சபையின் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் நான் செயற்படவில்லை. ஏனென்றால் பல்லின சமூகம் வாழக் கூடிய இந்தப் பிரதேசத்தில் இனங்களுக்கிடையே ஒரு சுமுகமான ஒரு நிலைமை உருவாக வேண்டும். இனங்களுக்கிடையே காணப்படும் இடைவெளி இல்லாமற் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டேன்.

சர்வமதத் தலைவர்களுடனும் மாற்று மத அரசியல் தலைவர்களுடனும் நல்லதொரு உறவைப் பேணுவதோடு அதே நேரம் இனங்களை ஒன்று சேர்ப்பதிலும் இனங்களுக்கிடையே காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதிலும் பாரிய வேலைத் திட்டங்களைச் செய்து வெற்றியும் கண்டிருக்கின்றோம்.

**? உங்களுடைய அபிவிருத்திப் பணியில் சக பிரதேச சபை உறுப்பினர்களுடைய பங்களிப்பு எவ்வாறு காணப்பட்டது?**

எமது பிரதேச சபை சிறந்த முன்மாதிரியான பிரதேச சபையாக திகழ்கிறது. நாங்கள் பல கட்சிகளில் போட்டியிட்டாலும் பல கட்சிகளில் இருந்து பல உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அக்குறணை பிரதேச சபையை பொறுத்த வரையில் உண்மையில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி பேதம் இல்லாமல் எல்லோரும் ஒரு குடும்பமாக இருந்து பணிகளைச் செய்து கொண்டு இருக்கின்றோம். நான் அக்குறணை பிரதேச சபையின் தலைவர் என்ற ரீதியிலோ அல்லது ஒரு பிரதேச சபை உறுப்பினர் என்ற ரீதியிலோ எங்களுடைய உயர் சபைக்கு ஒரு நல்ல யோசனை முன்வைக்கப்படும் போது அதனை ஏகமனதாக வரவேற்று அந்த திட்டத்தை செயற்படுத்துவதில் எல்லோரும் அவர்களுடைய முழுமையான பங்களிப்பை கடந்த மூன்று வருடங்களிலும் தந்திருக்கின்றார்கள்.

சபையில் முன்வைக்கப்படும் திட்டங்கள் கார சாரமாக விவாதிக்கப்பட்டாலும் முன்வைக்கப்பட்ட எந்தவொரு யோசனையும் தோற்கடிக்கப்பட்ட சம்பவம் இது வரையிலும் நடந்ததில்லை.

நாங்கள் நன்மை தீமைகளை ஆராய்ந்து இறுதியில் ஒட்டுமொத்தமான எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு சிறப்பான முடிவினை எடுத்து அவர்களுடைய பங்களிப்பினை வழங்கியிருக்கிறார்கள்.

அக்குறணையில் 25 வருடகாலமாக யாலுகஹவெல என்ற இடத்தில் எங்களது திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ளது. அந்த இடத்தில் சுற்றாடலுக்கு பாரியதொரு அச்சுறுத்தல் இருந்தது. அதற்குரிய செயற்றிட்டத்தை நாங்கள் முன் வைத்த போது அதற்கு எல்லா உறுப்பினர்களும் அவர்களுடைய முழுமையான ஆதரவினை தெரிவித்ததோடு அல்லாமல் அவர்களுக்கு தனித் தனியாக அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து அந்த வேலைத் திட்டத்திற்காக எல்லா உறுப்பினர்களும் உதவி செய்தார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

**? அரசாங்கத்தில் இருந்து எவ்வாறான ஊக்குவிப்பினையும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டீர்கள்?**

அக்குறணை பிரதேச சபையில் பிரதான கட்சிகளுடன் சேர்ந்து 2018 ஆம் ஆண்டு நாங்கள் ஒரு சுயாதீன குழுவாகத் தான் இந்த தேர்தலில் களமிறங்கி நான்கு ஆசனங்களைப் பெற்று இந்தப் பிரதேச சபையின் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டோம்.

நாங்கள் சுயாதீனமாக இருப்பதனால் ஆளும் தரப்பைச் சேர்ந்த கட்சியானாலும் சரி அல்லது எதிர்த் தரப்பிலுள்ள கட்சியானாலும் சரி எல்லோரும் எங்களுக்குத் தேவையான வேலைத் திட்டங்களை முன்வைத்து அவர்களுடைய உதவிகளையும் ஆலோசனைகளையும் எங்களால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இந்த நட்பால் அரசாங்கத்துடனும் நெருங்கிய உறவினைப் பேணிக் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

ஒரு வருட காலத்திற்கு அக்குறணைப் பிரதேசத்திற்கு பல கோடி ரூபாய்களை நிதி உதவிகளாக நாங்கள் பெற்று இருக்கின்றோம். விசேடமாக யாலுகஹவெல பிரதேசத்தில் பொலித்தீன், பிளாஸ்டி போன்ற உக்கிப் போகாத கழிவுகளை எரியூட்டக் கூடிய இன்சூலேட்டர் இயந்திரத்தினை கடந்த அரசாங்கத்தின் மூலம் பெற்றுக் கொண்டோம். அதே போன்று இன்று உக்கிப் போகக் கூடிய கழிவுகளை சேதனப் பசளையாக மாற்றக் கூடிய ஒரு செயற்றிட்டத்தை இரண்டாம் கட்டமாக தொடங்க இருக்கின்றோம். இந்த அரசாங்கத்திடம் இருந்து கடந்த வாரம் நிதி உதவி கிடைக்கப்பெற்றுள்ளது. எதிர்வரும் காலங்களில் சேதனப் பசளை செயற்றிட்டத்தை நாங்கள் ஆரம்பிக்க இருக்கின்றோம்.

நான் அக்குறணைப் பிரதேச சபையின் தலைவர் என்ற வகையிலும் அதேபோன்று ஏனைய உறுப்பினர்களும் இந்தப் பிராந்திய மக்களுடைய அடிப்படைத் தேவைகளையும் அபிவிருத்தி திட்டங்களையும் பங்களிப்புக்களையும் ஆளும் தரப்பில் இருக்கக் கூடிய அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் செய்து வருகின்றார்கள்.

**? யாலுகஹவெல பிரதேச தமிழ் மக்களின் சுற்றுச் சூழல் பிரச்சினைக்கு தீவிர கவனம் செலுத்தி அதற்கான நிரந்த தீர்வினைப் பெற்றுக் கொடுத்துள்ளீர்கள். நீங்கள் இது குறித்து என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

யாலுகஹவெல கிராமம் அக்குறணையில் சேகரிக்கக் கூடிய அத்தனை கழிவுப் பொருட்களையும் எடுத்துச் சென்று கொட்டக் கூடிய ஓர் இடமாகும். இங்கு சிறுபான்மை சமூகமாக தமிழ் சகோதர மக்கள் வாழுகின்றனர். ஒரு பிரதேசத்தின் தலைவராக இருந்தாலும் தலைமைத்துவப் பண்பு என்பது எங்களுக்கு கிடைக்கக் கூடிய பிரதிபலன்களை வைத்து முடிவு எடுக்கக் கூடாது.

மக்களுடைய தேவை அறிந்து சிறுபான்மைச் சமூகமோ பெரும்பான்மைச் சமூகமோ அவர்களுக்குத் தேவையானதை நாங்கள் ஒழுங்காக செய்து கொடுக்க வேண்டும். அந்த தலைமைத்துவப் பண்பினை வெளிப்படுத்துவதற்கு ஒரு காரணியாக யாலுகஹவெல பிரச்சினையினை நான் பார்க்கின்றேன்.

2018 ஆம் ஆண்டு நடந்த பிரதேச சபைத் தேர்தலில் யாலுகஹவெல பிரதேசத்தில் இருந்து ஒரு வாக்குக் கூட சுயாதீன குழுவுக்கு கிடைக்கவில்லை. இதற்கு முன்பு பல எல்லா கட்சிகளும் அங்கு சென்று அவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து தருவதாக வாக்குறுதியளித்து விட்டுத் தான் வாக்குகளைப் பெற்று வந்தார்கள். ஆனால் எந்தவொரு பிரதான கட்சியும் அந்த மக்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வில்லை. ஆனால் நாங்கள் மாறாக ஒரு பிரதேச சபை தலைவராக இருந்து எனக்கு எந்த விதமான வாக்குகள் கிடைக்காத போதிலும் கடந்த 25 வருட காலமாக அந்த மக்கள் அனுபவித்த நரக வேதனைக்கு ஒரு வெற்றிகரமான திட்டத்தை முன் வைத்து அவர்களுடைய பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.

அந்த வகையில் நானும் என்னுடைய சக பிரதேச சபை உறுப்பினர்கள் அந்த இடத்திற்குச் சென்று பார்த்த போது உண்மையிலேயே நாங்கள் ஒரு தர்மசங்கடமான சூழ் நிலைக்கு தள்ளப்பட்டோம்.

யாலுகஹவெல பிரதேசத்திலுள்ள துர்நாற்றத்தினால் அந்த ஊரில் இருந்து யாரும் பெண் எடுப்பதற்கு விரும்புவது இல்லை. இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் யாலுகாஹவெல கிராமம் இருந்தது. இதற்கான திட்டத்தை வகுப்பதற்கு எமது சக பிரதேச சபை உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை செய்த போது எல்லா உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்கு தலைவராக நீங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு நாங்கள் பக்கபலமாகவும் ஆதரவாகவும் இருப்போம் என்று எல்லோரும் ஒருமித்த கருத்துடன் ஆதரவாக செயற்பட்டார்கள்.

அது மட்டுமல்லாமல் எங்களுடைய சக பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒரு தொகைப் பணத்தை இந்த திட்டத்திற்கு அவர்கள் வழங்கி வைத்தார்கள். இந்த வேலைத் திட்டத்தினை அதாவது இலங்கையில் முதல் முறையாக ஒரு பிரதேச சபை மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட வெற்றிகரமான ஒரு வேலைத் திட்டம் ஆகும்.

ஊவா மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், எல்ல பிரதேச சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகள் இந்த வேலைத் திட்டத்தை பார்வையிட்டுள்ளார்கள்.

அவர்கள் இது பற்றிக் கூறுகையில்,....

இது மிகப் பெறுமதியான வேலைத் திட்டமாகும். இதனை ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவதற்கு எங்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுச் சென்றார்கள்.

அதே போன்று எதிர்வரும் காலங்களில் வட மாகாணத்தில் இருந்தும் மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் வந்து பார்வையிடவுள்ளனர். முழு இலங்கையிலும் அக்குறணை பிரதேச சபைதான் இப்படியான வெற்றிகரமான ஒரு வேலைத் திட்டத்தை செய்த முதல் பிரதேச சபையாக இருந்து கொண்டிருக்கின்றது. இது அக்குறணைப் பிரதேச சபையைப் பிரதிநித்துவப்படுத்தக் கூடிய தலைவரான எனக்கும் எனது சக உறுப்பினர்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி என்று தான் இதைக் கூற வேண்டும்.

**? அக்குறணை பிரதேச அபிவிருத்தி தொடர்பில் உங்கள் எதிர்கால திட்டங்கள் என்ன?**

எங்களது அரசியலைப் பொறுத்தவரையிலும் நாங்கள் அபிவிருத்தி திட்டங்களை மட்டும் வைத்து பார்ப்பதில்லை. ஏனென்றால் அபிவிருத்தி அரசியல் என்பது ஒரு முஸ்லிம் அரசியல்வாதி என்ற வகையில் அது எந்தளவுக்கு தம் சமூகத்திற்கு தேவை என்பது ஒரு கேள்விக்குறியான விடயம். எனினும் தேவை இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. இருந்தாலும் சமூகமாக நாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் எமது சமூகத்திற்கு உரிய கௌரவம், இவை அனைத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு திட்டத்தைத் தான் நான் வகுத்து அக்குறணைக்கு மட்டுமல்ல கண்டி மாவட்டம் முழுவதிலும் செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்.

கண்டி மாவட்டம் என்பது மிகச் சிறந்த அரசியல் தலைமைத்துவங்களை உருவாக்கிய மாவட்டமாக இருந்து கொண்டிருக்கின்றது. 1940 களில் இருந்து அப்படியான தலைமைத்துவங்கள் இந்தப் பிராந்தியத்தில் இருந்து உருவாக்கப்பட்டது. இருந்தாலும் துரதிருஷ்டவசமாக சமீபகாலங்களில் அப்படியான சமூக சிந்தனைகளுடன் சமூக ரீதியில் நாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அவற்றிற்கு தீர்வினைப் பெற்றுத் தரக் கூடிய தலைமைத்துவங்களை உருவாக்குவதில் ஒரு பின்னடைவு ஏற்பட்டு இருக்கின்றது.இவை எதிர்காலத்தில் மாற்றப்பட வேண்டும்.

அக்குறணை பிரதேச சபையின் தலைவராக இருக்கக் கூடிய நான் இது என்னுடைய சொந்தப் பயணம் அல்ல. இந்த அரசியல் பயணத்தில் எனக்கு ஒத்துழைப்பு வழங்கி அறிவுறுத்தல் ஆலோசனை வழங்கக் கூடிய பல சர்வ மதத் தலைவர்கள் இருக்கின்றார்கள்.

என்னை அரசியலுக்குள் அறிமுகப்படுத்திய பி. எம். ஜே. டி அமைப்பின் தலைவர், உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்களது வழிகாட்டலுடன் தான் நாங்கள் அரசியல் முன்னெடுப்புக்களை மேற் கொண்டு வருகின்றோம்.

## உப தவிசாளர் சரத் அமரகோன்



அக்குறணைப் பிரதேச சபை தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் எமக்கு பெரும் பலமாகும். அவர் பதவியைப் பொறுப்பேற்றதுடன் இப்பிரதேசத்தில் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவத்தில் அவருக்கு பெரும் சவால் ஒன்று இருந்தது.

யாலுகஹவெல பிரதேச தமிழ் மக்கள் பெரியளவிலான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர் அந்த இடத்திற்குச் சென்று அந்த சவாலை பொறுப்பேற்று தன்னுடைய சொந்த நிதியில் முதலில் அந்த ஆரம்ப வேலைத் திட்டத்தை ஆரம்பித்தார். பின்னர் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் நவீன முறையில் அந்த திண்ம கழிவு முகாமைத்துவ நிலையம் மத்திய மாகாணத்தில் முதல் தரமானதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அது அவரது வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்டதாகும்.

அது மட்டுமல்ல சபைக்குள் அவர் இன, மத, பேதமின்றி சேவையாற்றி வரும் ஒருவர். அவர் அரச நிதியினை மட்டுமல்ல தன்னுடைய சொந்த நிதியினையும் செலவு செய்து பொது மக்களுக்கு மிகவும் பாரிய சேவைகளை இந்த மூன்றுவருட காலம் வரையிலும் அவர் மேற் கொண்டு வந்துள்ளார்.

## அக்குறணை பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவர் அஜ்மீர் பாரூக்



பிரதேச சபையின் பணி என்பது மக்களோடு மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டதாகும். அந்த மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக அக்குறணை பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றித்துப் போதல் எனும் விடயத்தில் இனம், மதம் கட்சிவேறுபாடுகளுக்கப்பால் ஒன்றுபட்டு செயற்பட்டு வருகின்றனர் என தெரிவித்துக் கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.எனவே எமது அக்குறணை பிரதேசத்தில் வாழும் பல்லின மக்களின் சமூக நல மேம்பாட்டுக்காக எமது அக்குறணை பிரதேச சபைத் தலைவர் மற்றும் சக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து ஒன்றுபட்டு செயற்படும் ஆற்றலை வலுப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## பிரதேச சபை உறுப்பினர் ஏ. ஏ. ஹஜ்ஜி முகைதீன்



அக்குறணை பிரதேச சபையின் பெயர் இன்று நாட்டில் எல்லோருடைய கவனத்தையும் திசை திருப்பி இருப்பது யாலுகஹவெலப் பிரதேசத்தில் அமைந்துள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையமாகும். அதன் வரலாற்றை எடுத்தாய்வு செய்து பார்த்தால் யாலுகஹவெல என்ற பிரதேசத்தின் சுற்றுச் சூழல் சீரழிந்து காணப்பட்டது.

இப்பிரதேச மக்களினது நலனையும் எதிர்கால தலைமுறைகளுக்கு நிலையான எதிர்காலத்தை உறுதி செய்யும் வகையில் அக்குறணை சபையின் தவிசாளர் எடுத்த பங்களிப்பை யாராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. அவர் அக்குறணை பிரதேசத்திற்கு செய்த சேவை பற்றி கூறுவதாயின் வாழ் நாள் பூராவும் பாராட்டுவதற்கு இவைமட்டும் போதுமானதாகும்.

எனவே அவர் இன்னுமின்னும் அயாராது அக்குறணை மண்ணுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி ஒரு புதிய நவீன நகரமாக மாற்றம் செய்ய வேண்டும் என்றும் அதற்கு இறைவன் அருள் புரிய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.



# ரமழான்; அல்குர்ஆனின் மாதம் முஃமின்களின் பருவ காலம்



முஃமீன்களுடைய பருவ காலமான ரமழான் எம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ரமழானை எவ்வாறு வரவேற்கப் போகின்றோம். அதற்காக எவ்வாறு தயாராகப் போகின்றோம், ரமழானை எப்படி பயன்படுத்தப் போகின்றோம்? முதலான கேள்விகளை எழுப்பி அவற்றுக்கான விடைகளைக் காண்பதன் மூலம் ரமழானின் பூரண கூலிகளைப் பெற முடியும் இன்ஷா அல்லாஹ்.

ரஜப் விதைக்கின்ற மாதம். ஷஃபான் அந்தப் பயிருக்கு நீருற்றுகின்ற மாதம். ரமழான் அறுவடை செய்கின்ற காலம். இதுவரை எதை விதைக்கின்றோம், எஞ்சியுள்ள நாட்களில் எதை விதைக்கப் போகின்றோம், ரமழானில் எதை அறுவடை செய்யப் போகிறோம்? என்பதை பொறுப்போடு சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது ஆரம்ப கால மனிதர்கள் (ஸலபுஸ் ஸாலிஹீன்கள்) ரமழானை அடைகின்ற பாக்கியத்தைத் தருமாறு, ரமழானை அனுபவிக்கின்ற அருட் பேறை வழங்குமாறு வேண்டி வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள். அவர்கள் ரமழானை அடைந்துவிட்டால் அதனை உச்ச நிலையில் பயன்படுத்துவார்கள். பின்னர் அடுத்த ஐந்து மாதங்களிலும் ரமழானில் செய்த நற்காரியங்களை ஏற்று, அங்கீகரிக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள். மொத்தத்தில் அவர்களது முழு வருடமும் ரமழானாகவே இருந்தது என்றால் அதில் மிகையில்லை.

**ரமழானை வரவேற்று அதற்குத் தயாராவது எவ்வாறு?**

சமயலறையையும் குளிர்சாதனப் பெட்டிகளையும் வகை வகையான உணவுப் பொருட்களாலும் குளிர்பானங்களாலும் நிரப்பி ரமழானுக்கான முன்னாயத்தங்களில் ஈடுபடப் போகின்றோமா? அல்லது டாம், கரம், காட்ஸ், கிரிக்கெட், அரட்டை என்று வீண் விளையாட்டுக்கான ஆயத்தங்களைச் செய்து ரமழானை வரவேற்கப் போகின்றோமா? அல்லது பகல் காலங்களில் நன்றாகத் தூங்குவதற்கும் இராப் பொழுதுகளில் கேளிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் வருகிறது என்ற எதிர்பார்ப்பில் ரமழானை வரவேற்கப் போகின்றோமா? பெண்கள் சமையலறையிலே முழு நாளையும் கழிக்கப்போகிறோம் என்ற எதிர்பார்ப்புடன் இந்த ரமழானை வரவேற்கத் தயாராகின்றார்களா? இளைஞர்களும் யுவதிகளும் பேஸ் புக், டுவிட்டர் முதலான சமூக வலைத்தளங்களிலும் ஒன்லைன்களிலும் சுதந்திரமாக நேரத்தைக் கழிப்பதற்கான ஒரு விடுமுறை காலம் வருகிறது என்ற எதிர்பார்ப்பில் இந்த ரமழானை வரவேற்கப் போகின்றார்களா?

இப்படித்தான் இந்த ரமழானை வரவேற்கப் போகின்றோம் என்றால் அது ரமழானைக் கேவலப்படுத்துவதாக,அகௌரவப்படுத்துவதாகவே இருக்க முடியும். அப்படிச் செய்தால் நாம் இவ்வுலகிலும் நாளை மறுமையிலும் பெரும் நஷ்டவாளிகள் ஆகி விடுவோம்.

“ரமழான் மாதத்தை அடைந்து அதில் பாவ மன்னிப்பைப் பெறாத மனிதன் நாசமாகட்டும்” (திர்மிதி) என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

ரமழான் அது புனித குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதம்; ஸியாமுடைய மாதம்; கியாமுடைய மாதம்; தராவீஹுடைய மாதம்; தஹஜ்ஜுத்துடைய மாதம்; பாவங்கள் மன்னிக்கப்படுகின்ற மாதம்; ஷைத்தானுக்கு விலங்கிடப்படுகின்ற மாதம்; சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்ற மாதம்; நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்ற மாதம்; ஈகையின் மாதம்; நரக விடுதலையைப் பெற்றுத்தருகின்ற மாதம்; ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த லைலதுல் கத்ரை தன்னகத்தே கொண்ட மாதம்; இஸ்லாமிய வரலாற்றிலே முஸ்லிம் உம்மத்திற்கு பல்வேறு வெற்றிகளைச் சுமந்து வந்த மாதம்; நற்காரியங்களுக்கு பல மடங்கு நன்மைகளைப் பெற்றுத்தரும் மாதம்; ரமழான் பொறுமையின் மாதம்; நன்றிக்குரிய மாதம்; துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்ற மாதம்; அல்லாஹ்வின் அருளும், ரஹ்மத்தும் இறங்கும் மாதம்.

**அல்குர்ஆனின் மாதம்**

ரமழான் புனித அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதம். இந்த மாதத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியவர்களை தினமும் சந்தித்து நபியவர்களோடு ஒன்றாக அமர்ந்து அதுவரை இறக்கியருளப்பட்ட அல்குர்ஆன் வசனங்களை மீட்டுவார்கள், பாராயணம் செய்வார்கள்.

ரமழான் மாதம் வந்துவிட்டால் உஸ்மான் (ரழி) அவர்கள் அல்குர்ஆனோடு இரண்டரக் கலந்து விடுவார்கள். ஒவ்வொரு நாளும் முழுக் குர்ஆனையும் ஓதி ரமழான் மாதத்தில் மாத்திரம் 30 தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்துவிடுவார்கள்.

இமாம் ஷாபி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ரமழான் மாதத்தில் மாத்திரம் 60 தடவைகள் முழுக் குர்ஆனையும் ஓதி முடிப்பவர்களாக இருந்தார்கள். இமாம் அபூஹனீபா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களிடமும் இந்த வழமை இருந்ததாக வரலாறு சொல்கிறது.

புகழ்பெற்ற ஹதீஸ்துறை அறிஞர் இமாம் ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஹதீஸ்களைத் திரட்டி, தொகுத்து நூலுருப்படுத்துகின்ற மாபெரும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். இமாமவர்கள் ரமழான் மாதம் வந்துவிட்டால் ஹதீஸ் சார்ந்த பணிகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு அல்குர்ஆனை ஓதுவதும் அதன் கருத்துகளை விளங்குவதும்தான் அவரது முழுவேளையாக இருக்கும்.

“ரமழான் அல்குர்ஆன் ஓதும் மாதமாகும்; ஏழைகளுக்கு உணவளிக்கும் மாதம். இதுவல்லாத எதுவும் ரமழானில் இல்லை” எனச் சொல்பவராக இருந்தார்கள் இமாம் ஸுஹ்ரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்.

பல்துறை சார்ந்த மிகப் பெரும் இஸ்லாமிய அறிஞரான இமாம் சுப்யான் அஸ்ஸவ்ரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ரமழான் காலத்தில் மேற்கொள்ளும் மிகவும் பிரதானமான இபாதத் அல்குர்ஆனை ஓதுவதும் படிப்பதுமாகும். அதுவல்லாத ஏனைய இபாதத்களை அவர் குறைத்துக் கொள்பவராக இருந்தார்கள்.

**அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முஹம்மத் (நளீமி), எம்.ஏ**
**(பிரதிப் பணிப்பாளர்-, ஜாமிஆ நளீமிய்யா)**

ஸலபுஸ் ஸாலிஹீன்கள் ரமழான் மாதத்தை குர்ஆனிய மாதமாக நோக்கினார்கள்.

“ரமழான் மாதம் எத்தகையது என்றால் அதில்தான் மனிதர்களுக்கு (முழுமையான வழிகாட்டியாகவும் தெளிவான” சான்றுகளைக்கொண்டதாகவும் (நன்மை, தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல்குர்ஆன் இறக்கியருளப் பெற்றது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும். (ஸூரத்துல் பகரா: 185)

ஸலபுஸ் ஸாலிஹீன்கள் ரமழான் மாதத்தில் சில போது ஒரு நாளுடைய இரவு நேரத் தொழுகையில் முழுக்குர்ஆனையும் ஓதி முடித்து விடுவார்கள். மற்றும் சிலர் மூன்று நாளைக்கு ஒரு முறை அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பார்கள். இன்னும் சிலர் ஏழு நாட்களுக்கு ஒரு முறை அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பார்கள். இன்னும் சிலர் கியாமுல்லைல் தொழுகையில் பத்து நாட்களுக்கு ஒருமுறை அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

இதனைப் படிக்கும்போது, ஒரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அவர்களை வழிப்படுத்தும் முகமாக மூன்று நாட்களுக்குக் குறைவான நேரத்திற்குள் அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்கக் கூடாது எனச் சொல்லியிருக்கும் போது ஒரு நாளைக்கு ஒரு தடவை அல்குர்ஆனை ஓதுவது எந்தளவு சாத்தியமானது. அப்படி ஓதுவது நபிவழிக்கு ஏற்புடையதா? என்று கேள்வி எமது உள்ளங்களில் எழலாம்.

“ஒருவர் மூன்று நாட்களுக்குள் குர்ஆனை ஓதி முடிக்க வேண்டும் என்பதற்காக அவசர அவசரமாக ஓதுவார். கருத்துக்களை உள்வாங்கிய நிலையில் ஓதமாட்டார். எனவே, குர்ஆனை ஒரு முறை ஓதி முடிப்பதற்கு குறைந்தபட்சம் மூன்று நாட்கள் தேவை என்ற கருத்தை நபி (ஸல்) அவர்கள் சொன்னது உண்மைதான். (அல்புகாரி, முஸ்லிம்)

ஆனால் வழமையாக அப்படிச் செய்வதையே நபியவர்கள் தவறாகக் கருதினார்கள். நல்ல இடங்களில், நல்ல சந்தர்ப்பங்களில் எந்தளவுக்கு அல்குர்ஆனை அதிகமாக ஓத முடியுமோ அந்த அளவுக்கு ஓதுவது வரவேற்கத்தக்கது” என இப்னு ரஜப் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

“யார் ரமழான் மாதத்தில் ஈமானோடும் நன்மையை எதிர்பார்த்தவராகவும் நின்று வணங்குகிறாரோ அவரது முன் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்” (அல்புகாரி, முஸ்லிம்)

எனவே நோன்புகள், கியாமுல் லைல், லைலதுல் கத்ர்... என இந்த மாதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நல்லமல்களும் பாவ மன்னிப்பின் வாயிலைத் திறந்து தரும். இது ஓர் உயரிய வாய்ப்பு. இதனை நாம் உச்ச நிலையில் பயன்படுத்த வேண்டும்.

**பொறுமையின் மாதம்**

ரமழான் மாதத்தை நபி (ஸல்) அவர்கள் பொறுமையின் மாதமாக (ஷஹ்ருஸ் ஸப்ர்) பிரகடனம் செய்திருக்கிறார்கள். ரமழான் மத்ரஸதுஸ் ஸப்ர் பொறுமைக்கான பயிற்சியை வழங்குகின்ற மகத்தான ஒரு பயிற்சிப் பாசறையாக விளங்குகின்றது.

ரமழான் ஆசைகளை அடக்கி, பசியையும் தாகத்தையும் உடல் பலவீனத்தையும் சகித்துக்கொள்கின்ற பொறுமையையும் பயிற்சியையும் இபாதத்களில் ஈடுபடுகின்ற பொறுமையையும் தருகின்றது.

மனித வாழ்வில் இன்றியமையாத பொறுமை எனும் கட்டுச்சாதத்தைத் தருகின்ற மாதம் ரமழான. இந்த சந்தர்ப்பத்தை நாம் உச்ச அளவில் பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்போமாக.

**தொகுப்பு:**
**எம்.எம். மொஹமட் ஸப்வான்,**
**சீனன்கோட்டை.**

# ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி

aalamulislam.tkn@lakehouse.lk

# மனிதனின் வாழ்வின் சுபீட்சத்திற்கான வழிகாட்டல்

சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வின் படைப்புக்களில் மனிதன் மிக விஷேடமானவன். அவனுக்காக எல்லா படைப்புகளும் பணியாற்றவும் அவனது எதிர்பார்ப்புக்கும் தேவைக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடக்கவும் அவன் ஏற்பாடு செய்து வைத்துள்ளான். இவை அனைத்தும் அல்லாஹ்வின் ஏற்பாடேயன்றி மனிதனின் அறிவினாலோ ஆற்றல்களினாலோ செய்து கொள்ளப்பட்டுள்ள வசதிகளும் ஏற்பாடுகளும் அல்ல.

'ஆலமுல் அர்வா' முதல் சுவர்க்கம் அல்லது நரகம் வரையான நீண்ட பயணத்தில் மனிதன் பல வாழ்வு பல கட்டங்களைக் கிடைக்கப்பெற்ற படைப்பாக விளங்குகின்றான். அவற்றில் உலக வாழ்வு கட்டத்தில் தான் உடல் கட்டமைப்பும் தெரிவு சுதந்திரமும் மனிதனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இது மிக முக்கியத்துவம் மிக்க பெறுமதியான வாழ்வு கட்டமாகும். இவ்வாழ்வுக்கட்டம் வரையறுக்கப்பட்டதாக இருந்த போதிலும் அதன் முக்கியத்துவமும் சிறப்பும் ஈடு இணையற்றதாகும்.

அதாவது இம்மையிலும் மறுமையிலும் சுபீட்சமும், விமோசனமும் அடைந்து கொள்வதை இலக்காகவும் நோக்காகவும் கொண்டு செயற்பட வேண்டிய வாழ்வு கட்டம் தான் இது. அவ்வாறு இவ்வாழ்வு கட்டத்தை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பைக் கொண்டவனாகவே மனிதன் படைக்கப்பட்டிருக்கின்றான். ஏனைய படைப்புக்களுக்கு போன்றல்லாமல் தெரிவு சுதந்திரமும் பகுத்தறிவு ஆற்றலும் மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றை உரிய ஒழுங்கில் பயன்படுத்தி கொள்வது மனிதனின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

என்றாலும் இவ்வாழ்வு கட்டத்தை இவ்வாறு தான் அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தமோ, பலவந்தப்படுத்தலோ இஸ்லாத்தில் கிடையாது. ஆனால் இவ்வாறு அமைத்துக் கொண்டால் தான் இம்மையிலும் மறுமையிலும் சுபீட்சம் அடைந்திட முடியும் என்பதற்கான தெளிவான இறை வழிகாட்டலை அல்லாஹ் வழங்கியுள்ளான். அதுவே அல்லாஹ் அங்கீகரித்திருக்கும் மனிதனுக்கான வாழ்வொழுங்காகும்.

அதனால் தாம் பெற்றுக்கொண்டிருக்கும் தெரிவு சுதந்திரத்தையும் பகுத்தறிவு ஆற்றலையும் உரிய முறையில் பயன்படுத்தி , இம்மையிலும் மறுமையிலும் சுபீட்சம் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ப இந்த உலக வாழ்வுக்கட்டத்தை மனிதன் அமைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் எதிர்வரும் வாழ்வுக் கட்டங்களின் சுபீட்சமும் விமோசனமும் இவ் வாழ்வுக்கட்டத்தில் தான் தங்கியுள்ளது. அதனால் ஈருலகிலும் சுபீட்சம் பெற்றுக்கொள்வதே மனித வாழ்வின் நோக்காகவும் இலக்காகவும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து இவ்வாழ்வு கட்டத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணராது தெரிவுச் சுதந்திரத்தையும் பகுத்தறிவு ஆற்றலையும் உரிய ஒழுங்கில் பயன்படுத்தாது பொடுபோக்காகவும் மனம் போன போக்கிலும் இவ்வாழ்வுக் கட்டத்தை அமைத்துக் கொண்டால் அதனால் விளையும் கைசேதத்தையும் நஷ்டத்தையும் ஈடுசெய்யவே முடியாது. அதனால் இறைவழிகாட்டல்களுக்கு ஏற்ப இவ்வுலக வாழ்வுக்கட்டத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். அதேநேரம் அல்லாஹ்வின் படைப்புகளில் விஷேடமான படைப்பாக இருந்த போதிலும் இயல்பாகவே பலவீனமானவனாகவும் தவறு செய்யக்கூடியவனாவும் பிழைகள் விடக்கூடியவனாகவும் இருப்பதையும் மனிதன் மறந்து விடலாகாது. ஆனால் அவன் விடுகின்ற தவறுகள் பிழைகளை உணர்ந்து அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரும் போது அவற்றை அவன் மன்னிக்கக் கூடியவனாக இருக்கின்றான்.

அதனை அவன் அல் குர்ஆனின் பல இடங்களில் தெளிவாகக் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

'உங்கள் இறைவனின் மன்னிப்புக்கும் சுவர்க்கத்துக்கும் விரைந்து செல்லுங்கள். அதன் விசாலம் வானங்கள், பூமியின் விசாலத்தைப் போன்றது. (அது) இறையச்சம் உடையவர்களுக்காகவே தயார்படுத்தப்பட்டுள்ளது.'

(அல் குர்ஆன் 03:133)

இதே கருத்துப்பட 'அல் ஹதீத்' என்ற அத்தியாயத்தில், 'ஆகவே (மனிதர்களே) நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பை நோக்கியும் சுவனபதியை நோக்கியும் முந்திச் செல்லுங்கள். அச்சுவனபதியின் விஸ்தீரணமோ வானம், பூமியின் விஸ்தீரணத்தைப் போன்று இருக்கின்றது. அது அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நம்பிக்கை கொண்டவர்களுக்காகவே தயார்படுத்தப்பட்டிருக்கின்றது. இது அல்லாஹ்வின் அருளாகும், அவன் விரும்பியவர்களுக்கு இதனைக் கொடுக்கின்றான், அல்லாஹ் மகத்தான அருளாளன்'. (அல் குர்அன் 5721)

அதனால் இந்த நிலையற்ற, வரையறுக்கப்பட்ட,

**மர்லின் மரிக்கார்...**

உலக வாழ்வுக்காக நிலைபேறானதும் முடிவில்லாததுமான இன்பங்கள் நிறைந்த சுவர்க்க வாழ்வை இழந்து விடலாகாது. சுவர்க்கம் இறையச்சம் மிக்கவர்களுக்காகத் தயார்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த மகத்துவம் மிக்க வாழ்வை அற்ப உலக வாழ்வுடன் எவ்விதத்திலும் ஒப்பிட முடியாது. இவ்விடயத்தில் மிகுந்த தெளிவுடனும் உறுதியுடனும் செயற்பட வேண்டும்.

அதனால் தான் அல்லாஹ்தஆலா, '(மனிதர்களே!) நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். இவ்வுலக வாழ்க்கை எல்லாம் வீண் விளையாட்டும் வேடிக்கையும் வெறும் அலங்காரமும் தான்'. (அல் குர்ஆன் 57:20) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

அது தான் உண்மை. உலக வாழ்வு வெறும் மாயையே. அது வீண் விளையாட்டுக்கள் நிறைந்தது. மனிதனின் நோக்கையும் இலக்கையும் மறக்கடிக்கச் செய்யக்கூடியது. அதனால் தான் அல்லாஹ், 'உங்களுடைய பொருட்களும் உங்களுடைய சந்ததிகளும் (உங்களுக்கு) ஒரு சோதனையாகவே உள்ளன. (இச்சோதனையில் நீங்கள் தேர்ச்சி பெற்றால் உங்களுக்கு) அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலி இருக்கின்றது'.

(அல் குர்ஆன் 64:15) என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றான்.

இந்த பின்புலத்தில் தான் முஹம்மத் (ஸல்) அவர்கள் 'தனது இலக்குகளை ஒன்று திரட்டி ஒன்றாக மறுமையையே இலக்காக ஒருவன் ஆக்கிக் கொண்டால் அவனது உலக விஷயங்களுக்கு அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கின்றான். அவ்வாறன்றி உலக விஷயங்களை அடைந்து கொள்வதில் தனது இலக்குகளைச் சிதற விடுகின்றவனை பொருத்தவரை அவன் எந்த வீதியில் எந்தப் பள்ளத்தாக்கில் அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றான் என்பது குறித்து அல்லாஹ் கவலைப்படுவதே இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: இப்னு மாஜா)

மற்றொரு அறிவிப்பில் அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

'எனக்கு அடிமைப்பட்டு கிடப்பதில் ஆதமின் மகனே நெஞ்சார ஈடுபடு. உன் மனதை நிறைவாக்கி விடுவேன். உன் நெருக்கடியை நீக்கி விடுவேன். இவ்விதம் செய்யவில்லை என்றாலோ உன் வேலைப் பளுவால் உன் நெஞ்சைப் பாரமாக்கி விடுவேன். உன் நெருக்கடிகளையும் நீக்க மாட்டேன்'.

(ஆதாரம்: திர்மிதி, இப்னு மாஜா)

இந்நபி மொழிகளும் மனிதன் உலக வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டிய ஒழுங்கையே விபரிக்கின்றது. அதனால் அல்லாஹ்வின் எதிர்பார்ப்புக்கும் விருப்பத்திற்கும் ஏற்பவே வாழ்வு அமையப்பெற வேண்டும். அப்போது அவன் மனிதனின் உலக விடயங்களை இலகுபடுத்தி வைப்பான். அவனே அவற்றைப் பொறுப்பெடுத்துக் கொள்கின்றான்.

ஆகவே அல்லாஹ்வின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இஸ்லாமிய வழிகாட்டல்களின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனமும் அக்கறையும் செலுத்த வேண்டும். அப்போது வரையறுக்கப்பட்டுள்ள இவ் வாழ்வுக் கட்டம் அர்த்தபூர்வமானதாகவும் ஈருலகிலும் சுபீட்சம் மிக்கதாகவும் அமையும். அதுவே மனிதனின் வாழ்வின் இலக்காகவும் நோக்காகவும் இருக்க வேண்டும்.



# மனிதனின் வாலிப பருவம்...

மனித வாழ்க்கையின் மூன்று பருவங்களில் வாலிபமே உயர்ந்து நிற்கிறது.

காரணம் சிறுவயது அறியாமைக்குச்சொந்தமானது, வயோதிபம் இயலாமைக்குச் சொந்தமானது, இளமையே சாதனைக்குச்சொந்தமானதாகும்.

உலகில் சாதனையாளர்களாக வலம் வருபவர்கள் தங்களின் சாதனைக்கான விதையை வாலிபத்தில் தான் தூவினார்கள்.இதை அழகாக விவரிக்கின்ற அல்குர்ஆனின் வசனங்களை கவனியுங்கள்.

அல்லாஹ் தான் உங்களை (ஆரம்பத்தில்) பலஹீனமான நிலையில் படைக்கிறான்; பலஹீனத்திற்குப் பின்னர், அவனே பலத்தை உண்டாக்குகிறான்; (அந்தப்) பலத்திற்குப் பின், பலஹீனத்தையும் நரையையும் அவனே உண்டாக்குகிறான்; தான் நாடியதை அவன் படைக்கிறான் அவனே எல்லாம் அறிந்தவன் பேராற்றலுடையவன். (அல்குர்ஆன்)

வாலிப பருவம் அல்லாஹ் நமக்கு அருளிய அனைத்து நிஃமத்துக்களும் முழுமையாக செயல்படும் பருவமாகும்.அதனால் தான் அல்லாஹ் அதை பலமிக்கது என்று வர்ணிக்கிறான். வாலிபம் பாக்கியமானது தான், அதேசமயம் ஆபத்தானது.இந்த பருவத்தில் நிகழும் தீய பழக்கங்களின் விளைவு முழுவாழ்வையும் சங்கடத்தில் ஆழ்த்தி விடும்.அதனால் தான், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நாளை மறுமையில் நடைபெறும் விசாரணை குறித்துச் சொல்லும்போது....

நாளை மறுமையில் நான்கு கேள்விக்கு பதில் கூறாதவரை ஒரு அடியானின் கால்கள் நகராது அவைகள்,

1. வாழ்நாளை எப்படி கழித்தாய்?
2. வாலிபத்தை எப்படி அழித்தாய்?
3. பொருளை எப்படி சேர்த்தாய்? எப்படி செலவு செய்தாய்?
4. கற்ற கல்வியைக்கொண்டு என்ன அமல் செய்தாய்? என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸில் கூறப்பட்ட வாழ்நாளுக்கு கீழ் வாலிபமும் வந்துவிட்டாலும் அல்லாஹ் வாலிபத்தை தனியாக விசாரிப்பான் என்பதிலிருந்து அதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளலாம்.

**அபூ ஹம்தான்,**
**அட்டாளைச்சேனை**

# ரமழானின் சிறப்பு...

❍ ரமழான் மாதம் வந்து விட்டால் வானத்தின் வாசல்கள் திறக்கப் படுகின்றன, நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. சைத்தான்கள் விலக்கிடப்படுவதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

❍ யார் ரமழானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவர்களது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நோன்பு நரகத்லிருந்து காக்கும் கேடயமாகும். நோன்பாளியின் வாய் நாற்றம் அல்லாஹ்விடம் துரியை விடச் சிறந்ததாகும் என நபிகள் நாயகம் அவர்கள் கூறினார்கள்.

சொர்க்கத்தில் ரய்யான் என்று கூறப்படும் ஒரு வாசல் இருக்கிறது. மறுமை அதன் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு அதன் வழியாக நுழைய மாட்டார்கள்.

பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. ஒன்று நோன்பு துறக்கும் மகிழ்ச்சியாகும். மற்றொன்று தனது இறைவனைச் சந்திக்கும் மகிழ்ச்சியாகும்” என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி

எம்மை முன்னோக்கியுள்ள புனித ரமழான் மாத்தை நல்ல எமது இறுதி ரமழான் என நினைத்து நன்மைகளை பெற்ற அடியானாக மாற முயற்சிப்போமாக.

**உம்மு குல்தும்,**
**கெக்கிராவ.**

# IPL 14வது அத்தியாயம்








# கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் இன்று கோலாகல ஆரம்பம்!

இந்தியன் பிரிமீயர் லீக் தொடரின் 14வது அத்தியாயம் இன்று நடப்புச் சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் றோயல் செலேஞ்சஸ் பெங்களூர் அணிக்கும் இடையில் சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடைபெறும் போட்டியுடன் ஆரம்பமாகவுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடுமையான கட்டுப்பாட்டுடனேயே தொடர் நடைபெறவுள்ளதுடன இம்முறை ஐ. பி. எல். தொடர் சென்னை, பெங்களூர், மும்பை, அஹமதாபாத், டெல்லி, கொல்கொத்தா போன்ற குறிப்பிட்ட சில நகரங்களிலேயே நடைபெற ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்முறை எந்தவொரு அணியும் அதன் சொந்த மண்ணில் விளையாடும் வகையில் ஆட்டங்கள் அட்டவணைப்படுத்தப்படவில்லை. அனைத்து ஆட்டங்களுமே ஒவ்வொரு அணிக்கும் பொது மைதானமாக அமையும் வகையிலேயே இம்முறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று சென்னையில் ஆரம்பமாகும் இத்தொடர் எதிர்வரும் மே மாதம் 30ம் திகதி அஹமதாபாத்தில் நடைபெறும் இறுதிப்போட்டியுடன் நிறைவுபெறும்.

இத்தொடரின் பிளே ஓப் சுற்றுக்கள் மற்றும் இறுதி ஆட்டங்கள் யாவும் குஜராத் மாநிலம் அஹமதாபாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் 4 முதல் 6 மைதானங்களில் விளையாடும். 56 லீக் ஆட்டங்களில் சென்னை, மும்பை, கொல்கத்தா, பெங்களூர் ஆகிய மைதானங்களில் தலா 10 ஆட்டங்களும், அஹமதாபாத், டில்லியில் தலா 8 ஆட்டங்களும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒரே நாளில் 2 ஆட்டங்கள் வீதம் 22 ஆட்டங்கள் நடைபெறவுள்ளதுடன் இதில் பகல் ஆட்டங்கள் வழமை போல் மாலை 3.30 மணிக்கும், இரவு ஆட்டங்கள் 7.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன.



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒவ்வொரு அணியும் 3 தடவைகள் மட்டுமே பயணம் மேற்கொள்ளும் வகையில் இம்முறை அட்டவணை தயாரிக்கப்பட்டு போட்டிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், அடங்கிப் போயிருந்த கொரோனா கடந்த சில வாரங்களாக மீண்டும் இந்தியாவில் வீரியம் பெறத் தொடங்கியுள்ளது. முக்கியமாக தமிழகம், கேரளா, மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களில் தொற்று தீவிரமடைந்துள்ளதுடன் சில நகரங்களில் இரவு நேரங்களில் ஊரடங்கும் அமுல் படுத்தப்படுள்ளது. திடீரென அனைத்து விதமான உள்ளூர் கிரிக்கெட் தொடர்களையும் ரத்துச் செய்துள்ளது இந்திய கிரிக்கெட் சபை. கடந்த மாதம் இறுதியில் நடைபெற்ற இங்கிலாந்துஇந்திய அணிகளுக்கிடையிலான போட்டிகளுக்கு பார்வையாளர்கள் கூட அனுமதிக்கப்படவில்லை. அதே போல் இம்முறை நடைபெறவுள்ள 14வது ஐ. பி. எல். தொடரில் பார்வையாளர்கள் அற்ற மூடிய அரங்கிலேயே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கொரோனா தோற்று ஏற்பட்ட நாளிலிருந்து தற்போது அது உச்சமடைந்து வரும் நிலைமை தோன்றியுள்ளது. முதன் முதலாக நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இவ்வாரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஐ. பி. எல். இல் ஆடும் வீரர்கள் ஒவ்வொருவராக இத்தொற்றுக்கு ஆளாகிவருகின்றனர். கொல்கொத்தா அணியின் நிதிஷ்ராணா, டெல்லி வீரர் அக்ஷால் பட்டேல், பெங்களூர் அணியின் தேவ்துன் படிக்கல் ஆகியோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் ஆரம்பப் போட்டிகளில் இவர்கள் விளையாடுவது சந்தேகமே. ஆரம்பத்தில் மும்மை வான்கடே மைதான ஊழியர்கள் மற்றும் சென்னை அணி அதிகாரி ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


அனைத்து அணி வீரர்களும் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் இந்நிலையில் கொரோனாத் தொற்றின் அதிதீவிர பரவலால் போட்டி ஏற்பாட்டாளர்கள் கலக்கம் அடைந்துள்ளனர். இதனால் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் அனைத்து நகரங்களையும் கிரிக்கெட் சபை தீவிரமாக கண்காணித்து வருகிறது.



மகாராஷ்டிர மாநிலத்தில் தீவிரமாக தொற்று பரவி வருவதால் அங்கு இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வார இறுதி நாட்களான வெள்ளிக்கிழமை இரவு 8 மணி முதல் திங்கள் காலை 7 மணி வரை முழுமையாக ஊரடங்கை அமுல்படுத்த அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது. எனவே மும்மை நகரில் போட்டிகளில் நடைபெறும் போது வீரர்கள் கட்டாயமாக சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென அம் மாநில அரசு வலியுறுத்தியுள்ளது. மும்பை மைதானத்தில் 10 போட்டிகள் நடைபெறவுள்ளதுடன் முதல் போட்டி நாளை டெல்லி சென்னை அணிகள் மோதவுள்ளன. மும்மையில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா காரணமாக மும்பையில் போட்டிகள் நடைபெற முடியாது போனால் அஹமதாபாத் மற்றும் இந்தோர் மைதானங்களை தயார் நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐ. பி. எல். நிர்வாகம் தெரிவித்துள்ளது.



தொடர்ந்து ஐ. பி. எல். தொடர்களில் திறமையாக விளையாடி வரும் ரோஹித் சர்மாவின் தலைமையிலான மும்மை இந்தியன்ஸ் அணி ஐந்து முறை கிண்ணம் வென்று அசத்தியுள்ளது. அவ்வணியில் வழமையாகக் களமிறங்கும் பும்ரா, சர்மா, ஹர்திக் பாண்டியா, சூரிய குமார் யாதவ், பொலார்ட் போன்ற அதிரடி ஆட்டக் காரர்கள் இருப்பதால் இம்முறையும் மற்றைய அணிகளுக்கு சவாலாக அவ்வணி திகழும் என்பது திண்ணம்.




மூன்று முறை கிண்ணம் வென்ற டோனியின் தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இதுவரை நடைபெற்ற தொடர்களில் 10 ப்ளே ஓப் சுற்றுககுத் தெரிவாகியுள்ளது. அவ்வணி சென்ற சீசனில் மட்டுமே பின்னடைவைச் சந்தித்தது. அனுபவ வீரர்களை கொண்ட அவ்வணியில் இம்முறை சுரேஷ்ரெய்னாவும் இணைந்துள்ளதால் பலமான அணியாகவே இம்முறை களமிறங்குகிறது.

திறமையான அதிரடி ஆட்டங்காரர்களைக் கொண்ட கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் அணி தினேஸ் காத்திக் தலைமையில் களமிறங்குகிறது. மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி சகலதுரை வீரர் அன்ட்று ரசல் விளையாடுவது அவ்வணிக்கு கூடுதல் பலம்.

சிறந்த வீரர்களைக் கொண்ட விராட் கோஹ்லியின் தலைமையிலான ரோயல் செலஞ்சர் பெங்களூர் அணி இதுவரை கிண்ணம் வென்றதில்லை. இம்முறையும் ஏபி டிவிலியர்ஸ், கிளேன் மெக்சுவல், படிக்கல் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டிருந்தாலும் அவ்வணியின் பந்து வீச்சு வழமை போல் பலவீனமாகவே உள்ளது.

சென்ற முறை இறுதிப் போட்டிக்குத் தெரிவான டெல்லி கெப்பிடல் அணி சிறந்த இளம் துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட அணியாகும். அவ்வணியின் தலைவர் ஸ்ரேஷ் அய்யர் காயம் காரணமாக ஆரம்பப் போட்டிகளில் களமிறங்க வாய்ப்பில்லை. என்றாலும் சிறந்த வீரர்களைக் கொண்ட அவ்வணி இம்முறை சாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அண்மைக்காலமாக பிரகாசித்து வரும் ரிஷப்பண்ட் அவ்வணியின் எதிர்பார்ப்பாகவுள்ளார்.

டேவிட் வோனர் தலைமையிலான ஹைதராபாத் அணி சிறந்த பந்து வீச்சையும், களத்தடுப்பையும் கொண்ட அணியாகும். கடந்த ஐ. பி. எல். தொடர்களில் அப் பந்துவீச்சின் மூலமே அவ்வணி முன்னிலை பெற்றது. புவனேஸ் குமார், நடராஜன், ரஷீத் கான் ஆகியோரின் பந்துவீச்சும், டேவிட் வோனர், கேன் வில்லியம்ஸின் களத்தடுப்பும் அவ்வணிக்கு கைகொடுக்கும்.

சென்ற முறை ஆரம்பப் போட்டிகளில் அதிரடியாக ஆடி முன்னிலைப் பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சிறந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட அணியாகும். ஸடீவ் சுமித்தின் தலைமையில் களமிறங்கும் அவ்வணியில் அதிரடி வீரர்களான சஞ்சு செம்சன், ஜோஸ் பட்டர், றொபின் உத்தப்பா களமிறங்கவுள்ளனர். ஜோப்பர் ஆச்சர், பென் ஸ்டொக்ஸ் போன்ற சகல துறை வீரர்களின் திறமையில் அதிக நம்பிக்கை வைத்துள்ளது ராஜஸ்தான் ரோயல்ஸ்.

இதுவரை கிண்ணம் வெல்லாத மற்றொரு அணியான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி இம்முறை பஞ்சாப் கிங்ஸ் எனற பெயர் மாற்றத்துடன் களமிறங்குகிறது. கே. எல். ராகுலின் தலைமையில் களமிறங்கும் அவ்வணியில் மாயங்க் அகர்வால், ரவிச்சந்திரன் அஸ்வின், அக்ஷால் பட்டேல் களமிறங்குவதுடன், இம்முறை ஏலத்தில் கூடிய தொகைக்கு வாங்கப்பட்ட தென்னாபிரிக்க சகல துறை வீரர் கிறிஸ் மொரிஸ் மற்றும் 'யுனிவர்சல் பொஸ்' என அழைக்கப்படும் டி/20 போட்டிகளில் துடுப்பாட்டத்தில் அநேக சாதனைக்குச் சொந்தக்காரரான மேறகிந்தியத் தீவுகள் அணி வீரர் கிறிஸ்கெயிலும் களமிறங்குவது அவ்வணிக்கு கூடிய பலமே.

பெங்களூர் ரோயல் சலேன்ஜஸ், பஞ்சாப் கிங்ஸ் ஆகிய இரு அணிகளும் இதுவரை கிண்ணம் வென்றதில்லை.

**ஒரு அணி பெற்ற கூடிய ஓட்டம்:**
273 ஓட்டங்ககள். பெங்களூர் அணி. 2013. எதிர் புனே வாரியஸ்.

**ஒரு அணி பெற்ற குறைந்த ஓட்டம்:**
49 ஓட்டங்கள் பெங்களூர் அணி 2019 எதிர் கேகேஆர்.

**தனி நபர் கூடிய ஓட்டம்:**
175 (66) கிறிஸ்கெயில் பெங்களூர் அணி 2013 எதிர் புனே வாரியஸ்

**அதிக ஆறு ஓட்டங்கள்:**
கிறிஸ்கெயில் 131 போட்டிகள் 349

**அதிக நான்கு ஓட்டங்கள்:**
சிகர் தவான் 175 போட்டிகள் 591.

**அதிக சதம்:**
கிறிஸ்கெயில் 6

**அதிக அரை சதம்:**
கோஹ்லி (பெங்களூர்) 48

**அதிக ஆட்டமிழப்பு (விக்கெட் கீப்பிங்):**
மகேந்திரசிங் டோனி 147

**சிறந்த பந்து வீச்சு:**
அல்சாரி ஜோசப் (மும்பை). 12/6. 2019ம் ஆண்டு ஹைதராபாத் அணிக்கு எதிராக.

**கூடிய மொத்த விக்கெட்டுகள்:**
லசித் மலிங்க (மும்பை). 125 போட்டிகளில் 170 விக்கெட்.

**கூடிய மொத்த ஓட்டங்கள்:**
விராட் கோஹ்லி (பெங்களூர்). 184 போட்டிகள். 5878 ஓட்டங்கள்.

**கூடிய இணைப்பாட்டம்:**
216 ஓட்டங்கள். இரண்டாவது விக்கெட்டுக்காக. அடம் கில்கிறஸ்ட் ஷோன் மார்ஷ் (பஞ்சாப்). எதிர் பெங்களூர். 2011ம் ஆண்டு.

**ஒரு சீசனில் கூடிய விக்கெட்:**
டெரன் பிரோவோ (சென்னை). 2013ம் ஆண்டு. 18 போட்டிகள். 32 விக்கெட்டுகள்.

**ஒரு சீசனில் கூடிய ஓட்டங்கள்:**
விராட் கோஹ்லி (பெங்களூர்). 2016ம் ஆண்டு. 17 போட்டிகள். 973 ஓட்டங்கள்.

**விரைவான சதம்:**
கிறிஸ் கெயில் (பெங்களூர்). 30 பந்துகள்.

**விரைவான அரைச் சதம்:**
கே.எல். ராஹுல் (பஞ்சாப்). 14 பந்துகள்.

## இதுவரை நடைபெற்ற ஐ.பி.எல். தொடர்களில் கிண்ணம் வென்ற அணிகள்

| | |
|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 5 |
| சென்னை சூப்பர் கிங்ஸ் | 3 |
| கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் | 2 |
| ராஜஸ்தான் ரோயல் | 1 |
| டெகன் சார்ஜஸ் | 1 |
| சன்ரைசஸ் ஹைதராபாத் | 1 |

## போட்டி அட்டவணை

| திகதி | அணிகள் | நகரம் | நேரம் |
|---|---|---|---|
| | April | | |
| 09 | மும்பை –பெங்களூர் | சென்னை | இரவு 7.30 |
| 10 | சென்னை – டெல்லி | மும்மை | இரவு 7.30 |
| 11 | ஹைதராபாத் –கொல்கொத்தா | சென்னை | இரவு 7.30 |
| 12 | ராஜஸ்தான் –பஞ்சாப் | மும்மை | இரவு 7.30 |
| 13 | கொல்கொத்தா –மும்பை | சென்னை | இரவு 7.30 |
| 14 | ஹைதராபாத் – பெங்களூர் | சென்னை | இரவு 7.30 |
| 15 | ராஜஸ்தான் – டெல்லி | மும்மை | இரவு 7.30 |
| 16 | பஞ்சாப் – சென்னை | மும்மை | இரவு 7.30 |
| 17 | மும்மை – ஹைதராபாத் | சென்னை | இரவு 7.30 |
| 18 | பெங்களூர் – கொல்கொத்தா | சென்னை | மாலை 3.30 |
| 18 | டெல்லி – பஞ்சாப் | மும்மை | இரவு 7.30 |
| 19 | சென்னை – ராஜஸ்தான் | மும்மை | இரவு 7.30 |
| 20 | டெல்லி – மும்மை | சென்னை | இரவு 7.30 |
| 21 | பஞ்சாப் – ஹைதராபாத் | சென்னை | மாலை 3.30 |
| 21 | கொல்கொத்தா – சென்னை | மும்மை | இரவு 7.30 |
| 22 | பெங்களூர் – ராஜஸ்தான் | மும்மை | இரவு 7.30 |
| 23 | பஞ்சாப் – மும்மை | சென்னை | இரவு 7.30 |
| 24 | ராஜஸ்தான் – கொல்கொத்தா | மும்பை | இரவு 7.30 |
| 25 | சென்னை – பெங்களூர் | மும்மை | மாலை 3.30 |
| 25 | ஹைதராபாத் – டெல்லி | சென்னை | இரவு 7.30 |
| 26 | பஞ்சாப் – கொல்கொத்தா | அஹமதா. | இரவு 7.30 |
| 27 | டெல்லி – பெங்களூர் | அஹமதா. | இரவு 7.30 |
| 28 | சென்னை – ஹைதராபாத் | டெல்லி | இரவு 7.30 |
| 29 | மும்மை – ராஜஸ்தான் | டெல்லி | மாலை 3.30 |
| 29 | டெல்லி – கொல்கொத்தா | அஹமதா. | இரவு 7.30 |
| 30 | பஞ்சாப் – பெங்களூர் | அஹமதா. | இரவு 7.30 |
| | May | | |
| 01 | மும்பை – சென்னை | டெல்லி | இரவு 7.30 |
| 02 | ராஜஸ்தான் – ஹைதராபாத் | டெல்லி | மாலை 3.30 |
| 02 | பஞ்சாப் – டெல்லி | அஹமதா. | இரவு 7.30 |
| 03 | கொல்கொத்தா – பெங்களூர் | அஹமதா. | இரவு 7.30 |
| 04 | ஹைதராபாத் – மும்பை | டெல்லி | இரவு 7.30 |
| 05 | ராஜஸ்தான் – சென்னை | டெல்லி | இரவு 7.30 |
| 06 | பெங்களூர் – பஞ்சாப் | அஹமதா. | இரவு 7.30 |
| 07 | ஹைதராபாத் – சென்னை | டெல்லி | இரவு 7.30 |
| 08 | கொல்கொத்தா – டெல்லி | அஹமதா. | மாலை 3.30 |
| 08 | ராஜஸ்தான் – மும்பை | டெல்லி | இரவு 7.30 |
| 09 | சென்னை – பஞ்சாப் | பெங்களூ. | மாலை 3.30 |
| 09 | பெங்களூர் – ஹைதராபாத் | கொல்கத். | இரவு 7.30 |
| 10 | மும்பை – கொல்கொத்தா | பெங்களூ. | இரவு 7.30 |
| 11 | டெல்லி – ராஜஸ்தான் | கொல்கத். | இரவு 7.30 |
| 12 | சென்னை – கொல்கொத்தா | கொல்கத். | இரவு 7.30 |
| 13 | மும்பை – பஞ்சாப் | பெங்களூ. | மாலை 3.30 |
| 13 | ஹைதராபாத் – ராஜஸ்தான் | கொல்கத். | இரவு 7.30 |
| 14 | பெங்களூர் – டெல்லி | கொல்கத். | இரவு 7.30 |
| 15 | கொல்கொத்தா – பஞ்சாப் | பெங்களூ. | இரவு 7.30 |
| 16 | ராஜஸ்தான் – பெங்களூர் | கொல்கத். | மாலை 3.30 |
| 16 | மும்பை – சென்னை | பெங்களூ. | இரவு 7.30 |
| 17 | டெல்லி – ஹைதராபாத் | கொல்கத். | இரவு 7.30 |
| 18 | கொல்கொத்தா – ராஜஸ்தான் | பெங்களூ. | இரவு 7.30 |
| 19 | ஹைதராபாத் – பஞ்சாப் | பெங்களூ. | இரவு 7.30 |
| 20 | பெங்களூர் – மும்பை | கொல்கத். | இரவு 7.30 |
| 21 | கொல்கொத்தா – ஹைதராபாத் | பெங்களூ. | மாலை 3.30 |
| 21 | டெல்லி – சென்னை | கொல்கத். | இரவு 7.30 |
| 22 | பஞ்சாப் – ராஜஸ்தான் | பெங்களூ. | இரவு 7.30 |
| 23 | டெல்லி – மும்பை | கொல்கத். | மாலை 3.30 |
| 23 | பெங்களூர் – சென்னை | கொல்கத். | இரவு 7.30 |
| 25 | முதல் அரையிறுதி (1ம் 2ம் இடம்) | அஹமதா. | இரவு 7.30 |
| 26 | முதல் அரையிறுதி (3ம் 4ம் இடம்) | அஹமதா. | இரவு 7.30 |
| 29 | 2வது அரையிறுதி | அஹமதா. | இரவு 7.30 |
| 30 | இறுதிப் போட்டி | அஹமதா. | இரவு 7.30 |

எம்.ஐ.எம்.சாஹில்

இந்தியா @75

# யாழ். இந்திய துணை தூதரகத்தில் இரத்ததானம்

இந்தியா சுதந்திரமடைந்து 75ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு அதற்கு 75 வாரங்களுக்கு முன்னர் இருந்தே உலகளாவிய ரீதியில் இந்தியா @75 என்ற பெயரில் அதனை சிறப்பாக கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியா சுதந்திரமடைந்த 75 ஆண்டுகால வரலாற்றில் அடையப்பட்ட புகழ்பெற்ற சாதனைகளின் வரலாற்றையும், முற்போக்கான இந்தியாவையும், இந்திய மக்கள் மற்றும் அவர்களின் கலாசாரம் என்பவற்றை நினைவு கூர்ந்து கொண்டாடுவதற்குமான இந்திய அரசின் ஒரு முயற்சியான இந்தியா@75 நிகழ்வானது உலகளாவிய ரீதியில் மார்ச் 12 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த கொண்டாட்ட நிகழ்வுகளின் ஒருபகுதியாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம், உலக சுகாதார தினமான ஏப்ரல் 07 ம் திகதி தூதரக வளாகத்தில் இரத்த தான முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

13 அதிகாரிகள் தாமாக முன்வந்து இரத்த தானம் வழங்கினர். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். பவானந்தராஜா பங்கேற்று சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய அவர், யாழ்ப்பாண வரலாற்றிலேயே வெளிநாட்டவர்களால் முதன் முறையாக இரத்ததானம் வழங்கப்பட்டுள்ளது எனவும், ஏற்கனவே "தொப்புள்கொடி" உறவுகளாக இருக்கும் எமது உறவானது இந்த இரத்த தானத்தின் மூலம் மேலும் பலப்படும் எனவும் குறிப்பிட்டார்.




# காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிய 87 உறவுகள் இதுவரை உயிரிழப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் பல்வேறு போராட்டங்களையும் நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர் .

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியலைந்து சொல்லெண்ணா துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிப காலங்களில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றார்கள் .

இவ்வாறு தமது உறவுகளைத் தேடியலைந்த 87 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 17 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். சர்வதேசத்தின் தலையிடுகளை கோரியும் ஐக்கிய நாடுகள் தமது விடயங்களில் தலையீடு செய்து தீர்வுகளை பெற்றுத்தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் நகரில் வியாபார நிலையங்கள் மீள திறப்பு

**பருத்தித்துறை விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் மாநகர் மத்தியில் சுமார் 70 வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனையவையை நேற்றையதினம் மீளத் திறக்கப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்று உள்ளதாக அடையாளம் காணப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர் அல்லது பணியாளர் உள்ள சுமார் 70 வர்த்தக நிலையங்களுக்கு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

அவை தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மீளத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகர மத்திய பேருந்து நிலையத்திலிருந்து நேற்று தொடக்கம் பேருந்து சேவைகளை நடத்த வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து சேவைகளும் வழமை போன்று தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பேருந்து சேவைகளிலும் உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை மீறினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விலைமனுக் கோரல்

**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் 099/T/2020**

**மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் கட்டிடங்களில் பொதுவான பூச்சிக் கொல்லி/ கறையான்/ எலிகள் வராது தடுப்பதற்கான சேவைகளை வழங்குதல்**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பாக இலக்கம் 02 கேள்விப்பத்திர சபையின் செயலாளரால் மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் கட்டிடங்களில் பொதுவான பூச்சிக் கொல்லி / கறையான் / எலிகள் வராது தடுப்பதற்கான சேவைகளை வழங்குவதற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமை பெற்ற விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. ஆரம்பத்தில்

ஒப்பந்தம் ஒரு வருட காலத்துக்காக வழங்குவதுடன் திருப்திகரமான செயலாற்றுகையினை கவனத்திற் கொள்ளப்பட்டு அது மேலுமொரு வருடத்தால் நீடிக்கப்படும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர்/ தாபனமாக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் கேள்விப்பத்திர கட்டணமாக திருப்பிச் செலுத்தப்படாத ரூபா மூவாயிரம் (ரூபா 3,000.00 மாத்திரமாகும்.) காசாக செலுத்தி ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

விலைக்கேள்வி, 2021.04.15 முதல் 2021.05.17 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள் வெளியிடப்படும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணமின்றி பார்வையிட முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதம் குறித்து அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாபனமொன்றினால் வெளியிடப்பட்ட ரூபா. 120,000.00 (ரூபா ஒரு இலட்சத்து இருபதாயிரம் மாத்திரம்) பெறுமதி வாயந்த பிணைமுறி, விலைக்கேள்வியுடன் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

2021.04.29 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் சிவில் பொறியியலாளர் பிரிவில் கேட்போர் கூடத்தில் நடைபெறும் ஆரம்ப விலைக்கேள்வி தொடர்பான கூட்டத்தில் பங்கேற்குமாறு, அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கு அல்லது அவரின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு இத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

செயலாளர், பெறுகைக் குழு இலக்கம் 02. வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு அம் முத்திரைக் குறியிடப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் சமர்பிக்கப்பட வேண்டியதுடன், 2021.05.18 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு அக்கால எல்லை முடிவடையும். அத்திகதியில் குறிப்பிட்ட நேரத்திற்கு உரிய விலைக்கேள்விகள்

திறந்துவைக்கப்படும்.

விலைக்கேள்வியாளர்களுக்கு, இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு கிளைத் தலைவர் மூலம் 011-2264103 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக மற்றும் மின்னஞ்சல் : head.scm@airport.lk அல்லது எமது இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம்: www.airport.lk அறிந்து கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய பிரான்ஸ் ஆர்வம்

## அமைச்சர் டக்ளஸிடம் பிரான்ஸ் தூதுவர் தெரிவிப்பு



இலங்கையிலுள்ள நான்கு பிரதான மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவரூட் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தூதுவர் தலைமையிலான அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடற்றொழில் அமைச்சில் (07) சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போதே பிரான்ஸ் தூதுவர் இவ்வாறு தெரிவத்தார்.

கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை போன்ற துறைகளில் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடி துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஆர்வமாக இருப்பதாக தெரிவித்த பிரான்ஸ் தூதுவர் இலங்கையிலுள்ள அனைத்து நீர் நிலைகளும் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் போதிய அறுவடைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் கூறினார்.

மேலும் இலங்கையில் கண்ணாடி நாரிழையில் தயாரிக்கப்பட்ட படகுகளால் சுற்றாடல் மாசடைவதாகவும் அவற்றை உரிய முறையில் அப்புறப்படுத்துவதற்கு தகுந்த கட்டமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்ததுடன் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு கடற்றெழில துறையில் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கவும் தமது நாடு ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையில் கடற்றொழில் துறையைப் பொறுத்தளவில் வளமான எதிர்காலம் இருப்பதாகவும் அத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று தெரிவித்ததுடன் இத்துறையின் வளர்ச்சிக்கு குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களில் கடற்றொழில்துறையின்அபிவிருத்திக்கு உதவுமாறு தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் படகு கண்காணிப்பு கட்டமைப்பு (வி.எம்.எஸ்) வசதிகள் போதிய அளவில் இலங்கை மீனவர்களிடம் இல்லாத காரணத்தினால் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருவதாகவும் ஆகவே அதற்கான உதவிகைளை பெற்றுத் தருமாறும் இச்சந்திப்பின் போது அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இச்சந்திப்பில பிரான்ஸ் தூதுவருடன் தூதரகத்தின் பொருளாதார ஆலோசகர் ஜோன் அலக்ஸான்டர் மற்றும் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் கே. தயானந்தா அமைச்சரின் ஆலோகர் சி. தவராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மீசாலையில் ரயில் மோதி குடும்பஸ்தர் பலி

**சாவகச்சேரி விசேட நிருபர்**




மீசாலை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ரயில் கடவையில் குடும்பஸ்தர் ஒருவர் ரயில் மோதியதில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் புதன் கிழமை (07) இரவு 10.45மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரயில் கடவைக் காப்பாளராக இருந்த இளைஞனுக்கு பேச்சுத் துணைக்கு நின்ற நபரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்த ரயில் மீசாலை ரயில் நிலையத்தை அண்மித்த போது கடவைக் காப்பாளர் வீதியில் பாதை தடையை ஏற்படுத்தி விட்டு வீதியின் மறுபக்கம் நின்றதாகவும், ரயில் வருவதனை அறியாத குறித்த நபர் காப்பாளர் நின்ற பக்கமாக கடவையைக் கடக்கும் போது ரயில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கார்த்திகேசு வீதி மீசாலை மேற்கைச் சேர்ந்த 60 வயதான பொன்னர் செல்வராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# திருநாவற்குளம் வாள்வெட்டு; இருவர் கைது

**வவுனியா பொலிசார் அதிரடி**

**வவுனியா விசேட, ஓமந்தை விஷேட நிருபர்கள்**

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் வாள்வெட்டில் ஈடுபட்டிருந்த இருவர் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த நான்காம் திகதி மது போதையில் இருந்த இளைஞர் குழு ஒன்று இளைஞர் ஒருவரை கண்மூடித்தனமாக கோடரியால் தாக்கியதில் அவர் படுகாயமடைந்திருந்தார்.

எனினும் வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் தொடர்பான தகவல்களை வழங்க பொதுமக்கள் அஞ்சியதால் பொலிசாரால் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த தாக்குதல் தொடர்பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. இந் நிலையில் விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதிபொலிஸ்மா அதிபருக்கு அவர் உத்தரவு வழங்கியிருந்தார்.

இதனையடுத்து வாள்வெட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இருவர் வவுனியா பொலிசாரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

# சத்திரசிகிச்சை பிரிவு ஏப்ரல் 15ல் மீள செயற்படும்

## யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர்

**கோப்பாய் குறூப் நிருபர்**

மூடப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவுகள் எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை பிரிவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்று காரணமாக சில சத்திரசிகிச்சை தொகுதிகள் மூடப்பட்டிருந்தன.

# பாண்டிருப்பில் பண்டிகைக்கால விற்பனை சந்தை திறந்து வைப்பு

*பாண்டிருப்பு தினகரன் நிருபர்*

தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி பயனுகரிகளின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தல் திட்டத்திற்கமைய, கல்முனை வடக்கு மேற்கு சமுர்த்தி வங்கி கிளைகளின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிமானி விற்பனை சந்தை நேற்று பாண்டிருப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள திரௌபதை அம்மன் ஆலயவளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை வடக்கு மேற்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர் செ.தவசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கலந்து கொண்டார்.



அத்துடன் முன்னிலை அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்கள், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர்கள், திட்ட முகாமையாளர்கள், வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு பிரதேச வாசிகளினால் விற்பனை செய்யப்பட்டன. சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் மூன்று தினங்கள் இவ் விற்பனை சந்தை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்கள் தேசிய கட்சிகளுடன் இணைந்து பயணிக்க வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளர்

*பாலமுனை விசேட நிருபர்*

இந்த அரசாங்கம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை மத்திய குழுவினருடனான சந்திப்பு செவ்வாய்க்கிழமை (6) கட்சியின் அம்பாரை மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

முஸ்லிம்கள் தங்களது சமூகம் சார்ந்து செயற்படுகின்ற சிறு கட்சிகளில் இருந்து வெளியேறி தேசிய கட்சிகளுடன் பயணிக்க வேண்டும். சமூகம் சார்ந்து கட்சிகளை வைத்துக்கொண்டு உரிமைக் கோசங்களையும், வீர வசனங்களையும் பேசி அரசியல் செய்ததனால் ஆனபலன் எதுவுமில்லை.

இந்த நாட்டிலே வாழ்கின்ற முஸ்லிம் சமூகத்திற்கு தேசிய ரீதியில் தலைமைத்துவமொன்று இல்லை. இதனால் முஸ்லிம் சமூகம் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. தற்போது பொருத்தமான அரசியல் தலைமை ஒன்றை தேடவேண்டிய பொறுப்பு முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

எனவே சிறுபான்மை சமூகத்திற்கு ஆதரவாக இருக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தியினை இந்தப் பிராந்தியத்தில் பலப்படுத்த வேண்டும் என்றார்.

# தம்பலகாமத்தில் சித்திர போட்டியில் வெற்றிபெற்றோருக்கு பணப் பரிசு

*முள்ளிப்பொத்தானை குறூப்,திருமலை மாவட்ட விசேட,தோப்பூர் குறூப் நிருபர்கள்*

தம்பலகாமம் பிரதேச செயலகம் மற்றும் தம்பலகாம பிரதேச மகளிர் செயலணி இணைந்து நடாத்திய மகளிர் தின கொண்டாட்டமும் சித்திர போட்டியும் செவ்வாய்கிழமை (06) பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் றிஸ்வானி றிபாஸ், சிறப்பு அதிதியாக ரெக்டோ நிறுவனத் தலைவர் ஜே.எம். அஷார், தம்பலகாமம் சமுர்த்தி வங்கி தலைமை முகாமையாளர் முஸம்மிலா ராபிக் மற்றும் இலங்கை வங்கி தம்பலகாம முகாமையாளர் உட்பட ரெக்டோ திட்ட முகாமையாளர் ஏ.எஸ்.எம்.தாணீஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தம்பலகாம பிரதேச பாடசாலைகளுக்கிடையில் இல்லத்து வன்முறை,சிறுவர் துஷ்பிரயோகம் எனும் தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட சிறந்த பெண் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, சிரேஷ்ட உறுப்பினர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

# தோப்பூரில் சமுர்த்தி சந்தை கண்காட்சி

*தோப்பூர் தினகரன் நிருபர்*

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் இரு நாள் விற்பனை சந்தைக் கண்காட்சி, தோப்பூர் சந்தைக்கட்டிடத் தொகுதியில் பாலத்தோப்பூர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரீ.இமாம்தீன் தலைமையில் ஆரம்பமானது .

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மூதூர் பிரதேச செயலாளர் எம். பி.எம்.முபாறக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இக்கண்காட்சி தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு நுகர்வோர் சலுகை விலையின் அடிப்படையில் பொருட்களை கொள்வனவு செய்யும் நிலையில் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இதில் சமுர்த்தி உற்பத்தியாளர்கள் மற்றும் குறைந்த வருமானமுடையவர்களின் உற்பத்தி பொருட்களும் விவசாயப் பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன . இதன்போது தெரிவு செய்யப்படுகின்ற ஐந்து சிறந்த விற்பனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, இவர்களுக்கு பணப்பரிசில்களும் நினைவுச்சின்னமும், வழங்கி கௌரவிக்கப்பட்டனர் .

இதன் மூலம் சமுர்த்தி உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். இதன்போது பொருட்களை கொள்வனவு செய்வதற்கென அனேக பொதுமக்கள் வருகை தந்திருந்தனர். இதில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் பீ.அறபாத், கணக்சகாளர் நாளீர் , தலைமை சமுர்த்தி முகாமையாளர் கோடீஸ்வரி, சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# ஒலிரூட் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் விஜயம்

தலவாக்கலை பெருந்தோட்டயாக்கத்திற்கு கீழ் இயங்கும் ஒலிரூட் தோட்டத்தில், தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில் இடம்பெற்ற முறுகல் நிலையை அடுத்து இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அப்பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது இது தொடர்பில் தொழிலாளர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தார்.

மேலும் ஒலிரூட் தோட்டத்தில் கொழுந்து பறிப்பதை தவிர ஏனைய நாளாந்த தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வர்த்தமானியில் குறிப்பிட்ட சம்பள தொகையை விட குறைவான தொகையினையே தோட்ட நிர்வாகம் வழங்குவதாக தொழிலாளர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இவ் விடயம் குறித்து பெருந்தோட்டயாக்கத்தின் நிறைவேற்று பணிப்பாளருடனும் தோட்ட முகாமையாளருடனும் கலந்துரையாடிய பின்னர் தொழிலாளர்களுக்கு சாதகமான தீர்வு எட்டப்பட்டது. அத்தோடு தொழிலாளர்கள் எதிர் நோக்கும் ஏனைய அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.



இதன் போது இ.தொ.க வின் உப தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான சக்திவேல், தலவாக்கலை மாநில இயக்குனர் விஸ்வநாதன் மற்றும் குறித்த தோட்ட தலைவர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

# சவாஹிரின் மறைவு கேட்டு நான் மிகவும் மனம் வருந்தினேன்

## கலாபூஷணம் நவநாயகமூர்த்தி

இலங்கையின் தமிழ், சிங்கள திரைப்படத்துறையிலும் தொலைக்காட்சி, வானொலி, மெல்லிசைப்பாடல் இசையமைப்பாளருமான மூத்த இசையமைப்பாளர் கலாபூஷணம் கே. எம். சவாஹிரின் மறைவு கேட்டு நான் மிகவும் மனம் வருந்தினேன். அன்னார் எனது முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலித்த மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைத்தவராவார். அவரது இசைகள் மறக்க முடியாத பழைய திரைப்படப் பாடல்களின் இசைச் சுரங்களை நினைவூட்டும் வகையில் அமைந்திருந்துடன், எனது வானொலி மெல்லிசைப் பாடல்களை மக்களிடம் பிரபல்யமடையும் வகையில் அவரது இசை அமைந்திருந்தது. அன்னாரது மறைவு எனக்கு மிகுந்த மனவேதனையை அளித்துள்ளதுடன் அவரது பிரிவால் துயருரும் அவரது குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபததைத் தெரிவித்துக்கொள்றேன்.

பனங்காடு கலாபூஷணம் நவநாயகமூர்த்தி

வரலாற்று திறனாய்வாளர் மற்றும் தொலைக்காட்சி, வானொலி மெல்லிசைப் பாடலாசிரியர்.

# அட்டாளைச்சேனை அல் முனிறாவில் இடம்பெற்ற வித்தியாரம்ப விழா




*பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்*

அட்டாளைச்சேனை அல் முனிறா பெண்கள் உயர்தர பாடசாலையில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் முகமாக பாடசாலை சமூகத்தினரால் வித்தியாரம்ப விழா மற்றும் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், அதிதிகளாக அல் முனீறா பெண்கள் உயர் பாடசாலையின் அதிபர் ஏ.சி.நியாஸ், பாடசாலை ஆரம்ப பிரிவு அதிபர் ஓ.எல்.றிஸ்வான், பிரதி அதிபர் ஏ.சுஹைறா. உதவி அதிபர் ஏ.அனீஸ், ஆரம்பபிரிவு வலயத் தலைவர் ஏ.சி. எம்.ஹாரித், அட்டாளைச்சேனை மக்கள் வங்கி சந்தைப்படுத்தல் உதத்தியோகத்தர் எம்.ஐ.எம்.நபீஸ், பாடசாலை அபிவிருத்தி குழுவின் செயலாளர் கபுர் ஹாஜி மற்றும் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் ,பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான பரிசுப் பொருட்களை வழங்கி மகிழ்வித்தனர்.





மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

படம்: பெரியபோரதீவு தினகரன் நிருபர்

திகதி 07.04.2021 புதன் கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4450
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,377,850.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 6 3 0 7 6 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,447,754.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2745
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,685,220.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 10 11 38 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,701,253.20

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 810
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,720,000.00
ஆங்கில எழுத்து R சுப்பர் இலக்கம் 26 வெற்றி இலக்கங்கள் 04 20 33 49
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 127,905,842.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 487
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,032,060.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 17 25 44 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,940,262.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1111
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,360,360.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 2 5 0 2 6 8
வெற்றி இலக்கினம் தனுசு விஷேட இலக்கம் 19541
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,640,405.14

07.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 751,934
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 31,175,490.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ.1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 35

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# சர்வதேச செய்திகள்

## லண்டன் தூதரகத்தில் இருந்து மியன்மார் தூதர் வெளியேற்றம்



லண்டனில் உள்ள பிரிட்டனுக்கான மியன்மார் தூதரகத்தை மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் கைப்பற்றியதை அடுத்து அந்நாட்டு தூதுவர் கடந்த புதன்கிழமை இரவை தனது காரிலேயே கழித்துள்ளார்.

தம்மை தூதரகத்தில் இருந்து வெளியேறும்படி மியன்மார் இராணுவத்துடன் தொடர்புபட்டவர்கள் கேட்டுக்கொண்டதாகவும், தாம் நாட்டை தொடர்ந்து பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்றும் அவர்கள் கூறியதாகவும் தூதுவர் கியவ் ஸ்வார் மின் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி 1ஆம் திகதி இராணுவம் ஆட்சியை கைப்பற்றியதோடு, அது தொடக்கம் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட தலைவியான ஆங் சான் சூச்சியை சிறையில் இருந்து விடுவிக்கும்படி கியவ் ஸ்வார் மின் குரல் கொடுத்து வந்தார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவத்தை, 'லண்டன் நகருக்கு மத்தியில் இடம்பெற்ற சதிப்புரட்சி ஒன்று' என்று கியவ் ஸ்வார் மின் வர்ணித்துள்ளார்.

'நான் வெளியேற்றப்பட்டேன். இவ்வாறான சதி ஒன்று நடந்திருக்கக் கூடாது' என்று அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்த செய்தி பரவியதை அடுத்து தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டக்காரர்கள் குவிந்ததோடு அங்கு பிரிட்டன் பொலிஸாரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

தூதரக அதிகாரிகள் யாரும் தூதரகத்தில் நுழைந்துவிடாத படி தடுத்து நிறுத்த பொலிஸார் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பலஸ்தீனர்களுக்கான உதவியை மீண்டும் அளிக்கிறது அமெரிக்கா

பலஸ்தீன அகதிகளுக்கு உதவும் ஐக்கிய நாடுகள் சபை நிறுவனத்திற்கான நிதியுதவியை மீண்டும் வழங்கும் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தில் 2018 ஆம் ஆண்டு இந்த நிதியை அமெரிக்கா நிறுத்தியதால் அந்த நிறுவனம் பெரும் நிதிப் பற்றாக்குறைக்கு முகம்கொடுத்தது.

ஐ.நா நிவாரண மற்றும் பணிகள் நிறுவனத்திற்கு மனிதாபிமான உதவியாக 150 மில்லியன் டொலர் வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது என்று அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் அட்டோனி பிளிங்கன் கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஐ.நா நிறுவனம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை மற்றும் காசா, லெபனான் மற்றும் ஜோர்தா




னில் வசிக்கும் சுமார் 5.7 மில்லியன் பலஸ்தீன அகதிகளுக்கு சுகாதார சேவை மற்றும் கல்வி உட்பட உதவி மற்றும் ஏனைய சேவைகளை வழங்கி வருகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் காசாவுக்கான 75 மில்லியன் டொலர் பொருளாதார மற்றும் அபிவிருத்தி உதவி, அதேபோன்று அமைதியை கட்டியெழுப்புவதற்கான திட்டத்திற்கு 10 மில்லியன் டொலர்களை பலஸ்தீனர்களுக்கு வழங்குவதற்கும் திட்டமிட்டிருப்பதாக பிளிங்கன் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்ற பைடன் பலஸ்தீனர்களுடனான உறவில் முந்தைய ஜனாதிபதியில் இருந்து மாற்று போக்கை பின்பற்றப்போவதாக அறிவித்திருந்தார்.

ஹொங்கொங்கிலிருந்து வருவோர்:

## பிரிட்டன் 59 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு



ஹொங்கொங்கிலிருந்து வருவோருக்கு வேலை, வீடு, பாடசாலை ஆகியவற்றைத் தேடித் தருவதில் உதவ பிரிட்டன் 59 மில்லியன் டொலரை ஒதுக்கவுள்ளது.

ஹொங்கொங்கில் சீனா புதிய பாதுகாப்புச் சட்டங்களை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறுவோருக்கு இடமளிக்க பிரிட்டன் முன்னர் உறுதியளித்திருந்தது.

அதன்படி 5 மில்லியனுக்கும் மேற்பட்டோரைப் பிரிட்டன் வரவேற்கக்கூடும். அங்கு அவர்கள் தங்கி, வேலை செய்து, பின்னர் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கவும் வாய்ப்பு வழங்கப்படும்.

ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும்பகுதி, ஆங்கில மொழி ஆதரவுக்கும் வீட்டுச் செலவுக்கும் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலைக்கும் சுகாதாரப் பராமரிப்புக்கும் பதிவு செய்ய உதவ, 12 இணையவழி வட்டார அலுவலகங்களும் ஆரம்பிக்கப்படும்.

பிரிட்டனில் எவ்வாறு தொழில் ஆரம்பிப்பது என்பது குறித்தும் ஆலோசனை வழங்கப்படும்.

கடந்த ஜனவரி 31 தொடக்கம் ஹொங்கொங் குடியிருப்பாளர்கள் பிரிட்டனுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் வரை குடியிருக்கவும் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது தொடக்கம் சுமார் 27,000 விசா விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் முதல் ஆண்டில் 154,000 பேர் வரை பிரிட்டனுக்கு வருவார்கள் என்று பிரிட்டன் உள்விவகார துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

## சிரிய தலைநகரில் இஸ்ரேல் சரமாரி ஏவுகணை தாக்குதல்

சிரிய தலைநகர் டமஸ்கஸிற்கு அருகே இடம்பெற்ற ஏவுகணைத் தாக்குதல்களில் நான்கு படையினர் காயமடைந்துள்ளனர். இதற்கு இஸ்ரேல் மீது சிரிய அரச ஊடகம் குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற தாக்குதலின்போது பல ஏவுகணைகளையும் இடைமறிப்பதற்கு சிரிய வான் பாதுகாப்பு முறையால் முடிந்ததாக அந் இந்த ஏவுகணைகள் வீசப்பட்டிருப்பதாக அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

டமஸ்கஸிற்கு அருகில் இருக்கும் இராணுவ தளம் ஒன்றை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாக பிரிட்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் குறிப்பிட்டபோதும் அதுபற்றி



நாட்டு இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சிரிய அரச செய்தி நிறுவனமான சானா செய்தி வெளியிட்டுள்ளது.

குறைந்தது ஒரு வெடிப்புச் சத்தத்தை கேட்டதாக டமஸ்கஸ் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அண்டை நாடான லெபனான் மற்றும் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு கோலன் குன்று பக்கமாக இருந்து மேலதிக விபரத்தை வெளியிடவில்லை.

சிரிய உள்நாட்டு போருக்கு மத்தியில் அந்நாட்டில் ஈரானுடன் தொடர்புபட்ட இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் நூற்றுக்கணக்கான தாக்குதல்களை நடத்தியபோதும் அது பற்றி வெளிப்படையாக கருத்துக் கூறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

செய்யாத குற்றத்திற்காக

## 44 ஆண்டு சிறை சென்றவர் வழக்கு



அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் தான் செய்யாத குற்றத்திற்காக 44 ஆண்டுகள் சிறை அனுபவித்த ரொன்னி லோங் என்பவருக்கு இழப்பீடாக 750,000 டொலர்கள் மாத்திரம் கிடைத்ததற்கு எதிராக வழக்குத் தொடுக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

கறுப்பினத்தவரான லோங், 1976 ஆம் ஆண்டு வெள்ளையின பெண் ஒருவரை கற்பழித்ததாக குற்றம்சாட்டப்பட்டார். வெள்ளையினத்தவர்களை மாத்திரம் கொண்ட நீதிபதிகள் குழுவால் வழங்கப்பட்ட தீர்ப்பில் கற்பழிப்பு மற்றும் திருட்டுக் குற்றச்சாட்டில் லோங்கிற்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

தான் நிரபராதி என்று தொடர்ந்து கூறிவந்த லோங் அந்த குற்றத்தை செய்யவில்லை என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்ட நிலையில் கடந்த டிசம்பரில் ஆளுநரினால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டார்.

இந்நிலையில் 65 வயதாகும் லோங் சிறை அனுபவித்த ஓர் ஆண்டுக்கு தலா 50,000 டொலர்கள் இழப்பீடு வழங்கப்பட வேண்டிய நிலையில் அவரது 15 ஆண்டு சிறை காலத்திற்கே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

“அவரது பெற்றோர்கள் இறக்கும்போதும், அவரது மகனின் பிறந்தநாட்கள் மற்றும் பட்டமளிப்பு விழாவிலும் அவர் சிறை அனுபவித்துக் கொண்டிருந்தார். அந்த 44 நாட்களில் அவர் எல்லாவற்றையும் இழந்துவிட்டார். அவருக்கு கிடைத்ததை விடவும் அதிகம் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளார்” என்று லோங்கின் வழக்கறிஞர் தெரிவித்தார்.



## சீனா: மருமகளாக வந்த காணாமல்போன மகள்

சீனாவில் தனது மகன் திருமணம் செய்யும் பெண் தனது உண்மையான மகள் என்பதை திருமணத்தின்போது தாய் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

ஜியன்சு மாகாணத்தின் சுசோ நகரில் கடந்த மார்ச் 31ஆம் திகதி இந்த அதிர்ச்சி சம்பவம் இடம்பெற்றதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 20 ஆண்டுகளுக்கு முன் வீதி ஓரத்தில் அந்தத் தாய் புதிதாகப் பிறந்த மகளை தொலைத்துள்ளார். பல ஆண்டுகளாக குழந்தையை தேடியபோதும் இரண்டு தசாப்தங்களின் பின் எதிர்பாராத தருணத்தில் மகள் கிடைத்திருப்பது அவருக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தனது மகன் திருமணம் புரியும் பெண்ணின் கையில் இருக்கும் மச்சம் காணாமல்போன தனது குழந்தையிடம் இருப்பது போன்று உள்ளதை கண்டே அந்தத் தாய் அது பற்றி கேட்டுள்ளார்.

அப்போதே அந்தப் பெண்ணை வீதி ஓரத்தில் இருந்து எடுத்து வளர்த்ததை அவரது பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். சொந்தப் பெற்றோரை அடைந்ததில், திருமணத்தைக் காட்டிலும் அதிக ஆனந்தம் அடைவதாகக் கூறி மகிழ்கிறார் மணமகள். அந்தப் பெண் மணந்துகொண்ட ஆடவர், தாயாரின் தத்தெடுக்கப்பட்ட மகன் என்பதால் அவர்களது உறவுமுறை குறித்த குழப்பமும் நீங்கியது.

## சவூதி வணிக வளாகங்களில் உள்நாட்டவர்களுக்கே வேலை



சவூதி அரேபியாவின் வணிக வளாகங்களில் சவூதி நாட்டவர்களை மாத்திரமே பணியமர்த்துவதற்கு அந்நாட்டின் தொழிலாளர் சட்டத்தில் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. உள்நாட்டவர்களுக்கான தொழில்வாய்ப்பை அதிகரிக்கும் புதிய நடவடிக்கையாக இது உள்ளது.

இதன்படி சவூதி ஆண் மற்றும் பெண்களுக்கு 51,000 தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் மூன்று புதிய தொழிலாளர் வழிமுறைகளை மனித வளங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் அஹமது பின் சுலைமான் வெளியிட்டுள்ளார். இது அந்நாட்டின் சில்லறை விற்பனைகள் மற்றும் உணவகங்களில் மாற்றங்களை கொண்டுவருவதாக உள்ளது.

சவூதி அரேபியாவில் எண்ணெய் வருவாய் வீழ்ச்சி அடைந்திருக்கும் நிலையில் கடந்த காலங்களில் அதிகம் வெளிநாட்டு பணியாளர்களிடம் தங்கியிருந்த தொழில் துறைகளில் உள்நாட்டு பிரஜைகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நெருக்கடிக்கு சவூதி அரசு முகம்கொடுத்துள்ளது.

இதில் வர்த்தக வளாகங்கள் மற்றும் அதன் முகாமைத்துவ நிலையில் சவூதியர் மாத்திரமே பணியாற்ற முடியும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. சில வேலைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டபோதும் அந்த வேலைகள் பற்றி குறிப்பிட்டு கூறப்படவில்லை.

அதேபோன்று உணவகங்கள், கபே மற்றும் கேட்டரிங் வர்த்தகத்தில் சவூதி நாட்டவர்களை அதிகரிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டில் வேலையற்றோர் எண்ணிக்கையை 7 வீதமாகக் குறைப்பதற்கு மில்லியன் கணக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருளாதார சீர்திருத்தத் திட்டம் ஒன்றை 2016 இல் சவூதி அரசு அறிமுகம் செய்தது.

## மியன்மாரில் 120 பிரபலங்களை பிடிக்க இராணுவம் வலைவீச்சு

மியன்மாரில் இராணுவத்தின் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்த முன்னணி நடிகர் ஒருவரை இராணுவம் கைது செய்துள்ளது. அத்துடன் 120 பிரபலங்களை அது தேடி வருகிறது.

தாய்லாந்திலும் மியன்மாரிலும் பிரபலமாக உள்ள 24 வயது பெயிங் டகோ நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். இராணுவத்திற்கு எதிரான போராட்டங்களில் நேரடியாகவும் சமூக ஊடகம் வழியாகவும் அவர் தீவிரமாகச் செயல்பட்டார்.

மியன்மாரில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அங்கு நாள்தோறும் பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக பேசியதற்காக சுமார் 100 திரைப்பட இயக்குநர்கள், நடிகர்கள், நட்சத்திரங்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வார ஆரம்பத்தில் பிரபல நகைச்சுவை நடிகரான சர்கனரை மியன்மார் பாதுகாப்புப் படை கைது செய்திருந்தது.

அதேபோன்று தாய்லாந்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மியன்மார் அழகு




ராணியான ஹா லே இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக கடந்த வாரம் உரையாற்றியிருந்தார். மியன்மாரில் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக தொடரும் ஆர்ப்பாட்டங்களில் 600 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## குச்சவெளியில்

# விவசாய காணிகளில் நடப்பட்ட விளம்பர பலகைகளை அகற்றுமாறு கவனயீர்ப்பு போராட்டம்

### ஆளுநர் தீர்வை பெற்றுத்தருவதாக உறுதி





திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தொடுவாய் பகுயில் விவசாய காணிக்குள் நடப்பட்ட விளம்பரப் பலகைகளை அகற்றக் கோரி மக்கள் நேற்றுமுன்தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத்தொடர்ந்து, களத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் சென்றிருந்தார்.

இதன்போது ஆளுநர் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்ப்புக்கள் இருந்தபோதிலும், விவசாயம் என்ற போர்வையில் அரச காணிகளில் நடைபெற்று வரும் காடழிப்பைத் தடுக்க தேவையான முடிவுகள் எடுக்கப்படும்.

இருப்பினும், சட்டப்பூர்வமாக்கல் உறுதி செய்யப்பட்டவுடன் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நிலங்கள் விரைவில் ஒப்படைக்கப்படும் என அவர் தெரிவித்தார். இதன்போது

வன பாதுகாப்பு அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் ஏன் விளம்பர பலகைகள் அமைக்கப்பட்டதாகவும் , நீண்ட காலமாக பயிரிட்ட நிலங்கள் அப்பகுதியில் இருந்ததால் விளம்பர பலகைகளை அமைத்த பின்னர் நுழைய முடியாத சூழ்நிலை இருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர். அது மட்டுமின்றி சிலர் நீண்ட காலமாக அந்த நிலங்களுக்கு உரித்துப்படிவம் உள்ளதாகவும் சிலர் கூறினர்.

இதனைதொடர்ந்து ஆளுநர் விளம்பர பலகைகளுக்கு பின்னால் உள்ள வயல் நிலங்களை பார்வையிட்ட ஆளுநர், அதன் சட்டபூர்வமான தன்மையை சரிபார்த்த பின்னரே விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்றும்,விவசாயம் என்ற போர்வையில் காடழிப்புக்கு எந்தவிதமான காரணமும் இருக்காது என்றும் கூறினார்.

வனத் திணைக்களத் துறையினருடன் கலந்துரையாடி தீர்வினை பெற்றுத்தருவதாக ஆளுநர் முடிவு செய்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# அனுமதிப்பத்திர விதிமுறைகளுக்கு முரணாக மணல் கடத்தல்

**ஏறாவூர் நிருபர்**



அனுமதிப்பத்திர விதிமுறைகளுக்கு முரணாக மணல் ஏற்றிச்சென்ற ஐந்து கனரக வாகனங்கள் மட்டக்களப்பு ஏறாவூர்ப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் சாரதிகள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த தெரிவித்துள்ளார்.

மணல் ஏற்றிச்செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளபோதிலும் வாகனத்தின் கொள்ளளவை விட மேலதிகமாக மணல் ஏற்றப்பட்டிருந்ததாக குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் கரடியனாறு பகுதியிலிருந்து மேல் மாகாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது செங்கலடி கறுத்தப்பாலம் பிரதேசத்தில் பொலிஸார் சோதனையிட்டபோதே சட்டவிரோத நடவடிக்கை தடுக்கப்பட்டது.

# சித்திரை புத்தாண்டு காலத்தில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றுமாறு எச்சரிக்கை

**கல்லடி குறூப்நிருபர்**

சித்திரை புத்தாண்டு காலத்தில் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

"பிலவ" வருட தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு காலத்தில் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

நாடளாவியரீதியில் கொரோனா தொற்று தொடர்பான அச்சஉணர்வு முழுமையாக நீங்காத நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொரோனா பரவலை கருத்திற்கொண்டு மக்களைமிகுந்தஅவதானத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தாக்கம் குறைவடைந்து வரும் நிலை காணப்பட்டாலும், தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு காலங்களில் அதிக சன நெரிசல் காணப்படுவதனால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறு வேண்டுக்கோள் விடுத்துள்ளனர்.

# கல்முனையில் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

### மக்கள் அச்சம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கல்முனைப் பிரதேசத்தில் சமீப காலமாக அதிகரித்துள்ள திருட்டுச் சம்பவங்களால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கல்முனை வட்டவிதானை வீதியிலுள்ள ஆசிரியர் ஒருவரது வீடொன்றினுள் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (7) அதிகாலை மூன்று மணியளவில் வீட்டுக்கூரையினை உடைத்துக்கொண்டு உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த அலுமாரிகள் தளபாடங்களை ஆராய்ந்துள்ளனர். சத்தம் கேட்டு அருகிலுள்ள அறையில் உறங்கிக் கொண்டிருந்த வீட்டு உரிமையாளர் எழுந்து பார்க்கின்றபோது வீட்டு முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரது பி.டி.டபிள்யூ 0606 இலக்கம் கொண்ட ஹோண்டா மோட்டார் சைக்கிளை திருடிச்சென்றுள்ளனர்.

திருடனை பிடிப்பதற்காக வீட்டு உரிமையாளர் விரட்டிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் வீதியின் ஓரங்களில் பதுங்கிநின்ற ஏனைய நான்கு பேர் வாள், கத்தி சகிதம் வீட்டு உரிமையாளரோடு சண்டையிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை திருடன் திருடிச் செல்வதும் திருடனைப் பிடிப்பதற்காக வீட்டுரிமையாளர் துரத்திச் செல்லும் காட்சி அருகிலுள்ள சீ.சீ.ரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த வீட்டுரிமையாளரான ஆசிரியர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

கல்முனைப் பிரதேசத்தில் சமீபகாலமாக வீடுகளுக்குள் புகுந்து கொள்ளைச் சம்பவங்களில் ஒரு கும்பல் ஈடுபட்டுவருகின்றமை தொடர்பில் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பிரதிநிதிகள், உள்ளூராட்சி சபைகளுக்கு இடையில் சுமூகநிலை கொண்டுவரப்படவேண்டும்

கிழக்கு மாகாணத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஒருசில உள்ளூராட்சி சபைகளுக்கும், நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை கிழக்கு மாகாண ஆளுநர் கட்சி, பேதம் பார்க்காது பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டுமென மு.கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட உள்ளூராட்சி சபைகளில் மட்டக்களப்பு மாநகரசபையும் ஒன்று. மாநகர சபையைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் ஆணையாளர்களாக கடமையாற்றிய சிவநாதன், திரு.உதயகுமார், திரு.மணிவண்ணன், திரு.சித்திரவேல், உட்பட ஏனைய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஏனைய துறைசார்ந்த வேலைகளில் ஈடுபடுவோர் அனைவரும் மிகவும் சிறப்பான முறையில் நேர்மையாகவும், மக்கள் தேவைகளை உணர்ந்தும் மக்கள் பாராட்டுகின்றளவிற்கு செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஊழியர்களைப் பொறுத்தவரையில் நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு மக்கள் நலனில் அக்கறையாக இருந்தனர். நகரத்தையும்,குடியிருப்புபகுதிகளையும், சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக பல சேவைகளை செய்தனர்.

மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டதற்குப் பிற்பாடு எவ்வித ஊழல் மோசடிகளுமின்றி மிகவும் சிறப்பான முறையில் மட்டக்களப்பு மாநகரசபை இயங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது

புதிய ஆணையாளர் வருகைக்கு பிற்பாடு நிர்வாக ரீதியாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக உள்ளும்,புறமும் முகங்களைப் பார்த்து வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றன. இம் முரண்பாடுகள் பல மாதங்களைக் கடந்தும் தீர்த்து வைக்கப்படவில்லை.

இதனால் மாநகரசபைக்கு கட்டுப்பட்ட கூடுதலானோர் பல சங்கடங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்களா? என்னும் கேள்வி எழுந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிளில் மதுபானம் கடத்தல் சந்தேகநபர் கைது

**ஆலையடிவேம்பு சுழற்சி நிருபர்**

அக்கரைப்பற்றில் இருந்து திருக்கோவிலுக்கு மோட்டர் சைக்கிளில் மதுபான கடத்தி வந்த வியாபாரி ஒருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை பொலிஸார் தம்பிலுவில் பிரதான வீதியில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் ஒருவர் தப்பியோடியுள்ளதுடன் 75 போத்தல் மதுபானங்கள் மற்றும் மோட்டார் சைக்கிளினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தம்பிலுவில் பிரதான வீதியில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுவந்த போதே சந்தேநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தேசிய உணவு பாதுகாப்பு வாரம்



**கல்குடா தினகரன் நிருபர்**

தேசிய உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் வலியுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில் கோரளைப்பற்று மத்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் உணவகங்களின் உரிமையாளர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு நேற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல். எம்.நஸீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டு உணவு தயாரிப்பது தொடர்பாகவும் அதனை கையாள்வது தொடர்பாகவும் விளக்கம் அளித்தனர்.

சட்ட விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்றும்இதன்போது எச்சரித்தனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு தொற்றா நோய் தொடர்பில் விழிப்புணர்வு




போசணை நிறை தேசிய ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொற்றா நோய், உணவு பழக்கவழக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்திய சாலையின் ஏற்பாட்டில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல்.எம் நக்பர் விரிவுரையாளராக கலந்துகொண்டு கொவிட் 19, நஞ்சற்ற உணவுகள், தொற்றா நோய், சம்மந்தமாக விளக்கமளித்ததுடன் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்களின் சந்தேகங்களுக்கும் தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

மேலும் இது போன்ற 17 அரச நிறுவனங்களில் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தவுள்ளதாக டாக்டர் கே.எல்.எம் நக்பர் தெரிவித்தார்.

# ஆறுகளை அண்மித்த பகுதிகளில் சிரமதான வேலைத்திட்டம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றினை அண்மித்த பகுதிகளில் சிரமதானம் நாளை 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு அட்டாளைச்சேனை பெரியபாலத்தடியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிர் தெரிவித்தார்.

சுத்தமாகவும் சுகாதாரமிக்க இடமாகவும் பேணவேண்டியதன் நிமிர்த்தம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அக்கரைப்பற்று நீர்ப்பாசனத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் கோணாவத்தை அபிவிருத்திக்குழு மற்றும் அல் இபாதா கலாசார மன்றம், பள்ளிவாசல்கள் உட்பட பொது அமைப்புகள் ஒன்றிணைந்து இச் சிரமதான வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிரமதான நிகழ்வில் பிரமுகர்கள், திணைக்களத் தலைவர்கள், பள்ளிவாசல் கலாசார தலைவர், கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.





மறைந்த மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றது. திருகோணமலை லோயலா கல்லூரி மண்டபத்தில் நேற்று (08) மாலை இந்நிகழ்வு இடம் பெற்றது. திருகோணமலை தமிழர் சமூகம்,புதிய உதயம்,பசுமை இல்லம் போன்ற அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. இதில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் திருகோணமலை பத்திரகாளியம்பாள் தேவஸ்தான பிரதமகுரு ரவிச்சந்திர குருக்கள் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜனார்த்தனன் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

படங்கள்: றொட்டவெவ குரூப் நிருபர் மன்னார்




# ஊவா மாகாண அரச சேவைக்கு 393 பேருக்கு நியமனங்கள்





**பதுளை தினகரன் விசேடநிருபர்**

ஊவாமாகாண அரசசேவைக்கு 393 பேருக்கு நியமனங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஊவா மாகாண நூலகசேவை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் நியமனங்கள், அரச செயலக உத்தியோகத்தர் நியமனங்கள் என்ற வகையில் மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா தாரிகள் என்ற ரீதியில் 351 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் மற்றும் அரச செயலக உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் 42 பேருக்குமாக 393 பேருக்கு நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஊவாமாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில், விவசாய இராஜாங்க அமைச்சர் சசிந்திர ராஜபக்ச ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றது.

நியமனங்கள் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் பின்தங்கிய பகுதி பாடசாலைகளில் ஐந்துவருடங்கள் கட்டாயம் சேவையாற்ற வேண்டியது அவசியமாகும் என நியமனப் பத்திரங்களில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அம்பன்வெல, இராஜாங்க அமைச்சர் விஜித்தபேருகொட மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சாமரசம்பத்தசநாயக்க, சுதர்சனதெனிபிட்டிய, திஸ்ஸகுட்டியாராய்ச்சி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் மத்திய ஆளுநர் இடையில் சந்திப்பு



**அக்குறணை குறூப் நிருபர்**

இலங்கைக்கான இத்தாலிய தூதர் ரீட்டா.ஜி.மன்னெல்லா (7) மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவை ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் சந்தித்தார். ஆளுநரும் தூதுவரும் பரஸ்பரம் பல பிரச்சினைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர், கூட்டத்தின் முடிவில் நினைவுச் சின்னம் பரிமாறப்பட்டது.

## தொலைபேசி கேபில்கள் சரிந்து வீழ்ந்ததில் இருவர் படுகாயம்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் குடாகம பகுதியில் தொலைபேசி இணைப்பிற்கான கேபில்கள் கம்பி ஏற்றிச்சென்ற கனரக லொறி சரிந்து வீழ்ந்ததில் இருவர் காயமடைந்துள்ளனர். ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாகம பகுதியிலேயே நேற்றுமுன்தினம் மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான காட்சிகள் சி.சி.கமராவில் பதிவாகியுள்ளது.

அதிக வேகமாக சென்ற கனரக லொறி வளைவொன்றில் செல்கையில் கேபில்களின் ஒருத்தொகுதி சரிந்து வீதியில் வீழ்ந்துள்ளது. இதன் போது பாதசாரதிகள் இருவர் சிறு காயமடைந்ததுடன் போக்குவத்து தடையும் சில மணி நேரம் ஏற்பட்டது.



# ரூ.1000 சம்பளத்துடன் சலுகைகளையும் வழங்குமாறு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



பொகவந்தலாவ பொகவான தோட்டத்தில் நாட்சம்பளம் ஆயிரத்தை பெற்றுக்கொடுத்த அரசாங்கம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் உரிமை மற்றும் இதுவரை கிடைத்த சலுகைகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என கோரி நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

தோட்டகொழுந்து மடுவத்தின் முன்பாக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை நாட் சம்பளம் ஆயிரம் ரூபா என்ற கோரிக்கை

நீண்டகால கனவாக இருந்து வந்த போதிலும் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் தொழிலாளர்களின் கொடுப்பனவுகள் ஏனைய சலுகைகைள் தோட்ட நிர்வாகத்தினால் இடை நிறுத்தப்பட்டுள்ளன. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே பொகவந்தலாவ பொருந்தோட்ட பொகவந்தலாவ தோட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொகவந்தலாவ கம்பனிக்குட்பட்ட பொகவந்தலாவ குயினா கீழ் பிரிவு , மேல்பிரிவு ஆகிய தோட்ட மக்களினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆயிரம் ரூபா நாட் சம்பளம் இந்த மாதத்தில் இருந்து வழங்கப்படும் என்பதை அரசாங்கம் அறிவித்ததை அடுத்து நாளைமுதல் தோட்டப்பகுதியில் இயங்கி வந்த சிறுவர் நிலையங்களில் பணி புரிந்து வந்த

உத்தியோகத்தர்கள் மற்றும் தோட்ட புறங்களில் பணியாற்றி வந்த சுகதார உதவியாளர்ககளின் எண்ணிக்கை தோட்ட நிர்வாகத்தினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒரு நாள் சம்பளத்திற்காக 15 கிலோ கிராம் தேயிலை பச்சை கொழுந்து பறித்து வந்த தோட்ட தொழிலாளர்களை 20 கிலோ கிராம் பறிக்குமாறு நிர்வாகம் வலியுருத்தி வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம்முன்னெடுக்கப்பட்டதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

குறித்த தோட்டப்பகுதியில் பறிக்கப்பட்ட ஒரு கிலோ பச்சை தேயிலை கொழுந்திற்கு 40 ருபாய் அளவில் தொழிலாளர்களுக்கான சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் எம்மால் நாள் ஒன்று 20 கிலோ தேயிலை கொழுந்து பறிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

# பதுளை மாவட்டத்தில் தோட்ட நிர்வாகங்களின் அராஜக போக்கு

**செந்தில் தொண்டமான் எச்சரிக்கை**



பதுளை மாவட்டத்தில் பல தோட்டங்களில் தோட்ட தொழிலாளர்களுக்கு மேலதிக கொளுந்துக்கான கொடுப்பனவை வழங்க கம்பனிகள் மறுப்பு தெரிவித்துள்ள நிலையில் செந்தில் தொண்டமான் அந்த தோட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு மக்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

அக்கலந்துரையாடலின் போது தோட்ட நிர்வாகத்தின் அராஜக போக்கை கண்டித்ததுடன், அடிப்படை சம்பளம் 700 ரூபா 1000 ரூபாய் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதில் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்படவில்லை என்பதை மக்களுக்கு விளக்கப்படுத்தினார்.

மேலதிக வேலைகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழங்கினால் மாத்திரமே எதிர்காலத்தில் ஏனைய வேலைத்திட்டங்களை தொழிலாளர்கள் முன்னெடுப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கம்பனிகளுக்கு ஒரு நாளுக்கு 1000 ரூபாய் படி 30 நாட்களுக்கு 30000 ரூபாய் தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கும் நிலைமை ஏற்படும் என்று கம்பனிகளை செந்தில் தொண்டமான் எச்சரித்துள்ளார்.

# பதுளை மாவட்டத்தில் தூர்ந்து போன கிராமியக் குளங்கள் புனர் நிர்மாணம்



பதுளை மாவட்டத்தில் தூர்ந்து போன சுமார் 47 கிராமியக் குளங்கள் புனர் நிர்மாணம் செய்யப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்சன தெனிப்பிட்டிய தெரிவித்தார். அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு, "நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பண்டாரவளை, வெலிமடை, மஹியங்கனை, பதுளை, எல்ல, ஊவா பரணகம. ஹப்புத்தளை, ஹாலிஎல்ல போன்ற தேர்தல் தொகுதிகளில் தூர்ந்து போயுள்ள குளங்கள் இவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப் படவுள்ளது. அதற்கமைய சுமார் 47 கிராமியக் குளங்கள் விவசாயிகளின் பங்களிப்புடன் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. இரு போகங்கள் பயிர் செய்கை செய்யும் வகையில் இவை புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதன்படி நேற்று முன் தினம் ஊவா பரனகமை, உமா எல குளம் மற்றும் கெப்பெட்டிப்பொல குளம் போன்றவை பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்சன தெனிபிட்டியவின் நேரடி கண்காணிப்பின் கீழ் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

## பலாங்கொடையில் 38 பேருக்கு கொரோனா

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை சமனலவெவ நீர் தேக்கத்திற்கு உரிய கபுகல மின்சார விநியோக நிலையத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் அதனை சூழவுள்ள குடும்ப உறுப்பினர்கள் 38 பேருக்கு கொரோனா வைரஸ் ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

வெலிகேபொல சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் மூலம் கடந்த 5ஆம் திகதி 126 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி சி ஆர் பரிசோதனையின் மூலமே கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பலாங்கொடை கபுகல மின்சார நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் உட்பட அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மேலும் மின்சார நிலையத்தை சூழவுள்ள விடுதிகளில் தங்கி உள்ளோர் இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கட்டாக்காலி நாய்களால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி நகர பகுதிகளில் சுற்றித்திரியும் கட்டாக்காலி நாய்களால் தொற்று நோய் பரவும் அச்சுறுத்தல் நிலவுவதாக பிரதேச மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவை நகரின் குப்பைத் தொட்டிகள் வீதியோரங்கள் கடைத் தெருக்களில் நடுவீதிகளில் நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடமாடுவதால் இந்த அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பிராணிகளிடம் ஜீவகாருண்யம் காட்டப்படல் வேண்டும் ஆனால் அது மனித நலன்களை பாதிக்காத வகையில் நடவடிக்கைகள் கையாளப்பட வேண்டும் எனவும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்த நிதி ஒதுக்கப்படாமையால் இந்நிலைமை மோசமடைவதற்கு காரணம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# இரத்தினபுரியில் புதிய மீன் விற்பனை நிலையம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

இரத்தினபுரி எம்பிலிப்பிட்டி, மாதம்பை பிரதேச மீன் விற்பனை நிலையங்களுக்கு பதிலாக புதிய மீன் விற்பனை நிலைய கட்டடம் கடந்த 7ஆம் திகதி சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 40 வருட காலமாக மீன் விற்பனை நிலையம் பிரதான பாதையில் இடம்பெற்று வந்தது. சப்ரகமுவ மாகாணசபை கொடகவெல பிரதேச சபை நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்த புதிய மீன் விற்பனை நிலையம் நிர்மாணிக்கப்பட்டது.

24 மொத்த மற்றும் சில்லறை மீன் விற்பனை நிலையங்களும் வேறு 5 வியாபார நிலையங்களும் இந்த கட்டிட தொகுதியில் அமைந்துள்ளன. குடா வெல்ல, தங்கல்ல ஆகிய பிரதேசங்களிலிருந்து மீன் விற்பனை நிலையத்திற்கு நாளாந்தம் மீன்களைக் கொண்டுவர வியாபார நிலைய உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இங்கே நாளாந்தம் 6000 கிலோகிராம் மீன்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றன.இரத்தினபுரி மாவட்டத்தில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள 400 வியாபாரிகள் இந்த மீன் விற்பனை நிலையத்தில் இருந்து மீன்களைக் கொள்வனவு செய்து நடமாடும் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ இராஜாங்க அமைச்சர்களான ஜானக வக்கும்புர, கஞ்சன வீரசேகர, பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன,முதிதா டி.சில்வா கொடகவெல பிரதேச சபைத் தலைவர் பிரியந்த பண்டார முன்னாள் மாகாண சபை அமைச்சர் அதுல குமார ராகுபத்த உள்ளூராட்சி ஆணையாளர் துலிப் சொமிரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## சிவசக்தி தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா திறந்துவைப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**



கண்டி தெல்தெனிய கல்வி வலயத்துக்குட்பட்ட இரங்களை கொடகங்க சிவசக்தி தமிழ் வித்தியாலத்தில் 50 இலட்ச ரூபா செலவில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கான அனுசரணையை அவுஸ்திரேலியா, மெல்போன் நகரில் இயங்கும் பிலமின்ஸ்டன் கென்சி`ங்டன் ரொட்டரி கழகம், கொழும்பு ரொட்டரி கழகம், கண்டி மெட்ரொபொலிடன் ரொட்டரி கழகம் என்பன இணைந்து வழங்கி இருந்தன. இதன் திறப்பு விழா வைபவத்தில் தெல்தெனிய வலயக் கல்விப் பணிப்பாளர் வை.எம்.டீ. குமாரிஹாமி, கொழும்பு ரொட்டரி கழகத்தின் தலைவர் கே. முருகேசு மற்றும் கண்டி மெட்ரோபொலிடன் ரொட்டரி கழகத்தின் தலைவர் பல்தானோ உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# அபிவிருத்தியின் முன்னோடி சமூகப் பற்று

நேர்காணல் சதீஸ்

கண்டி மாவட்ட சமூக செயற்பாட்டாளரும் அரசியல்வாதியான வசீர் முக்தார் மூவின சமூகத்திற்கும் பாரிய சேவைகளையாற்றி வருபவர். கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் ஜனாஸாக்களை கண்டியிலும் அடக்கம் செய்வதற்கான முயற்சிகளில் சமூக பற்றுடன் செயற்படும் பெருந்தகையாவார். அது தொடர்பில் தினகரனுக்கு அவர் வழங்கிய செவ்வியிலிருந்து......

**கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் ஜனாஸாக்களை கண்டியிலும் அடக்கம் செய்வதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபட்டுள்ளதாக நாங்கள அறிகின்றோம். அது பற்றிக் கூற முடியுமா?**

கண்டியிலும் கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன். கொரோனா தொற்றினால் உரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கி ஒரு மாத காலம் கடந்து விட்டது.

சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்திற்கு ஏற்ப பொருத்தமான இனங்காணப்பட்ட மையவாடிகளில் அனைத்து 25 மாவட்டங்களிலும் முஸ்லிம் ஜனாஸாக்களை பொருத்தமான இடத்தில் அடக்கலாம் என்ற கருத்தினையும் முன் வைத்திருந்தனர்.

இந்த தீர்மானத்தை கருத்திற் கொண்டு அந்தந்த மாகாணங்களின் கீழ் இயங்கக் கூடிய பிரதான செயலாளர் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோர்களது வழிகாட்டலுடன் பிரத்தியேகமான குழுக்கள் ஒவ்வொரு மாவட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த குழுவினரே குறித்த இடத்தை தெரிவு செய்து ஜனாஸாக்கள் அடக்குவதற்கான இடத்தை பரிந்துரை செய்வார்கள்.

விசேடமாக கண்டி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் நிஹால் வீரசூரியவிடம் நான் விடுத்த கோரிக்கைக்கு இணங்க மத்திய மாகாண

## கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் ஜனாஸாக்களை கண்டியிலும் அடக்கம் செய்வதற்கான முயற்சிகள்

பிரதான செயலாளர் ராஜரட்ன தலைமையில் மத்திய மாகாணத்தில் பொருத்தமான மையவாடியினைத் தெரிவு செய்வதற்காக ஒரு பிரத்தியேகமான ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் வழிகாட்டலுடன் கண்டி மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்கள் செறிந்து வாழக் கூடிய ஜும்ஆப் பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி 05 இடங்களை தெரிவு செய்து மாகாணப் பணிப்பாளரிடம் பரிந்துரை செய்துள்ளேன்.

அந்த வகையில் அக்குறணை தாய் பள்ளி ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடி, திகன கும்புக்கந்துர ஜம்ஆப் பள்ளிவாசல் மையவாடி, என்னுடைய ஊரான யட்டிநுவர தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள தெஹியங்க ஜும்ஆப் பள்ளிவாசலின் மையவாடி, உடுநுவர கெட்டக்கும்புர ஹந்தஸ்ஸ ஜும்ஆப் பள்ளிவாசலின் மையவாடி, தெல்தோட்டை ரலிமங்கொட ஜும்ஆப் பள்ளிவாசலின் மையவாடி முதலிய ஐந்து பள்ளிவாசல்களையும் பரிந்துரை செய்துள்ளேன்.

தற்போது மாகாண பிரதான செயலாளர் அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள பிரத்தியேகமான குழுவினர் கடந்த வாரம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் இந்த ஐந்து இடங்களில் பரிசீலனை செய்து ஓர் இடத்தை அடையாளம் கண்டு மிக விரைவில் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.



**கடந்த காலத்தில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதில் ஏற்பட்ட சவால்கள் குறித்த உங்கள் நிலைப்பாடு என்ன?**

இன்றைய சூழ்நிலையில் ஜனாஸாக்கள் அடக்கம் தொடர்பில் எந்தவிதமான எதிர் கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. இது பெரும்பான்மையின சமூகத்திடமோ அல்லது வேறு சமூகத்தினரிடமோ காணப்படவில்லை.

இந்தப் பிரச்சினையை பெரியளவில் ஊடகங்கள் தான் பூதாகரமாக்கி பிரச்சினையைத் தோற்று வித்தன என்று குறிப்பிடலாம்.

தேவையற்ற விதத்தில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளிக்கொணர்ந்தார்கள். சில பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கூட பொறுப்பற்ற விதத்தில் செயற்பாட்டனர். மக்கள் மத்தியில் பெரும் குழப்பமான சிந்தனையை தோற்றி வித்த காட்சியை நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இது உண்மையிலேயே கவலை தரும் செய்தியாகும்.



**நீங்கள் கண்டி மாவட்டத்தில் 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்த முஸ்லிம் பாடசாலை ஒன்றை மீளவும் இணைத்துக் கொள்வதில் முயற்சி செய்து அதனை முதல் கட்டத்தில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.அது தொடர்பில் உங்கள் கருத்து,...**

இந்த அரசாங்கத்தின் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் 1000 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தும் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் முதலாம் கட்டத்தில் 11 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் இரண்டு தெரிவு செய்யப்பட்டிருந்தன.

அதில் ஒன்று நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஒரு தமிழ் பாடசாலையும் மற்றையது கண்டி மாவட்டத்தில் கலஹா ஸ்ரீ இராமகிருஸ்ண தமிழ் பாடசாலையுமாகும்.

ஆனால் அதில் துரதிருஷ்ட வசமாக தமிழ் மூலமான ஒரு முஸ்லிம் பாடசாலை எவையும் தெரிவு செய்யப்பட்டு இருக்கவில்லை. கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை முஸ்லிம் பாடசாலை காரணமின்றி தரப்படுத்தலில் இருந்து அது நான்காம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டிருந்தது. அதனை அமைச்சர் அலி சப்ரி, ஸ்ரீலங்கா பொதுஜன நிறுவுனர் முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே, கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக செயற்படும் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார, மத்திய மாகாண பிரதான செயலாளர் ராஜரட்ன,

## தெஹிஅங்கை வட்டாரத்தில் சகல வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானம் அமைக்க விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதி...

கண்டி கல்விப் பணிமனையின் கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட அனைவர்களது அளப்பரிய பங்களிப்பின் மூலம் தெல்தோட்டை முஸ்லிம் பாடசாலையினை முதல் கட்டத்தில் உள்வாங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை நான் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இது சம்பந்தமாக குறித்த அமைச்சர் என்னுடன் தொடர்பு கொண்டு எனக்கு உறுதியளித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் அலி சப்ரியும் உறுதியான வாக்குறுதியினை வழங்கியிருக்கின்றார்.

**இவை தவிர நீங்கள் வேறு பாடசாலைகள் விடயத்தில் கவனம் செலுத்தவில்லையா?**

தெஹிஅங்கை அல் அஸ்ஹர் முஸ்லிம் பாடசாலையும் 1000 தேசிய பாடசாலை அபிவிருத்தி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டிருக்க வில்லை. அதனையும் உள்வாங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. உடத்தலவின்னை ஜமாலியா, உட்பட ஐந்து தமிழ் மொழி மூல முஸ்லிம் பாடசாலைகள் கண்டி மாவட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளன. இந்த சந்தர்ப்பத்தில் எமது யட்டிநுவர தேர்தல் தொகுதி அமைப்பாளரும் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவுக்கு நன்றியை நான் மேலும் ஒரு தடவை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதேவேளை மாவட்டத்தில் மும்மொழி சார்ந்த பாடசாலைகள் உருவாக்கும் செயற்திட்டத்தின் கீழ் கட்டுகஸ்தோட்டை சாஹிரா பாடசாலை உள்வாங்கப்பட்டு தரம் உயர்த்தப்படவுள்ளன. ஒரு மாவட்டத்தில் 20 பாடசாலைகள் மும்மொழிப் பாடசாலைகள் உருவாக்கப்படவுள்ளன. இதில் கட்டுகஸ்தோட்டை சாஹிராக் கல்லூரியும் உள்வாங்கப்பட்டு தரம் உயர்த்தப்படும் என்று மத்திய மாகாண ஆளுநர் என்னிடம் உறுதிமொழி வழங்கியுள்ளார். நான் அவரிடம் நேரடியாக முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த உறுதிமொழியை வழங்கினார்.

**நீங்கள் தெஹிஅங்கை அஸ்ஹர் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை நவீன முறையில் அமைப்பதற்கான வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக நாங்கள் அறிகின்றோம். அதன் பணிகள் எந்தளவு உள்ளன?**

கண்டி மாவட்ட பொதுஜன பெரமுன கட்சியின் அமைப்பாளரும் விவசாய அமைச்சருமான மஹிந்தானந்த அலுத்கமகேவிடம் முன்வைத்த வேண்டுகோளை அடுத்து அவர் விடுத்த பணிப்புரைக்கு அமைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை கடந்த வருடம் 2020 ஒக்டோபர் மாதம் சந்தித்தேன். அப்பொழுது என்னுடைய பிரதேச சபைக்கு உட்பட்ட தெஹிஅங்கை வட்டாரத்தில் சகல வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானம் இல்லை. தெஹியங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்து தருமாறு வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு அவர் 2020 களில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்ய முடியாது. எனினும் 2021 களில் செய்து தருவதற்கான நடவடிக்கை எடுக்கின்றேன் என்று என்னிடம் நேரில் தெரிவித்தார்.இது எமது பிரதேசத்துக்கு கிடைத்த பாரிய அபிவிருத்தி திட்டமாகும்.

05.04.2021 ஆம் திகதி மத்திய மாகாண பிரதான பொறியியல் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் தீபானந்த தலைமையில் பொறியியலாளர் குழுவினர் பாடசாலைக்கு வருகை தந்தனர். படவரைஞர், தொழில் நுட்ப உதவியாளர்கள், கட்டடக் கலைஞர்கள் நேரில் மைதானத்தை பார்வையிட்டதோடு அதற்கான அனைத்து மதிப்பீட்டு வேலைத் திட்டங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள். இனி எதிர்வரும் காலங்களில் துரிக கதியில் இந்த நவீன விளையாட்டு மைதானத்திற்கான அடிக்கல் நாட்டு விழா விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெறும்.

இங்கு சகல வசதிகளும் உள்ளடங்கியதான விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்படவுள்ளது. கண்டி மாவட்டத்தில் ஐந்து விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதில் தெஹிஅங்கை அல் அஸ்ஹர் பாடசாலையின் மைதானமும் ஒரு முக்கியமான மைதானமாக உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடினப் பந்து விளையாடக் கூடிய இரு கிரிக்கெட் திடல்கள், கால்பந்து விளையாட்டுக்கு பொருத்தமான மைதானமாக செப்பனிடப்படவுள்ளன. 200 மீட்டர் ஓடுபாதை மற்றும் முதியவர்கள் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக நடைபாதையினையும் நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளனர். இரவு வேளைகளில் மின் விளக்குகளில் விளையாடுவதற்கும் சுற்றி வர பாதுகாப்பான வேலிகளை அமைத்து இந்த விளையாட்டு அரங்கு நிர்மாணிக்கப்படவுள்ளன.

**எதிர்காலத்தில் நீங்கள் முன்னெடுக்கவுள்ள வேலைத் திட்டங்கள் பற்றி கூறுவீர்களா?**

கிராமத்தில் உள்ள உள்ளூர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் தெஹிஅங்கை வட்டாரத்தில் 60 இலட்சம் ரூபா செலவில் அனைத்து வீதிகளும் புனர் நிர்மாணம் செய்வதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். நீதி அமைச்சர் அலி சப்ரியின் பணிப்புரைக்கு இணங்க 06 பாதைகள் முழுமையாக நிர்மாணிப்பதற்கு அனுமதியைப் பெற்றுத் தந்திருக்கின்றார். தெஹிஅங்கை மத்திய பிரதேசத்தை இணைக்கும் முகமாக தெஹிஅங்கை கலஹாகும்புர வீதி காபட் இடுவதற்கான முதல் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசேடமாக அல் அஸ்ஹர் மற்றும் அல் இல்மா ஆகிய இரு பாடசாலைகளின் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். முக்கியமாக அல் இல்மா பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்காக வேண்டி பல கோரிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் முன் வைத்திருக்கின்றேன்.

எதிர்காலத்தில் இப்பாடசாலையின் அபிவிருத்தி வளர்ச்சியுடன் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டத்தையும் முன் வைத்து இயங்கி வருகின்றேன். அதே போன்று உடுநுவர தேர்தல் தொகுதியில் ஹந்தஸ்ஸ அல் மனார் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பிலான கோரிக்கைகள் பல என்னிடம் முன் வைத்திருக்கின்றார்கள்.

இது தொடர்பிலும் அமைச்சருடன் உரையாடி வருகின்றேன். இதே போன்று கண்டி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தி அந்தப் பாடசாலையின் கல்வி பௌதிக வளம் மற்றும் விளையாட்டுத் துறை சம்பந்தமாகவும் செயற்பட்டு வருகின்றேன்.

கண்டி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் குறைகளை இனங்கண்டு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மென்மேலும் கல்விப் பணிகளை மேற்கொள்வதே என்னுடைய இலக்காகும் என்று தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.





## இலங்கை - பங்களாதேஷ் தொடர்

# பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை

சுற்றுலா பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகள் இடையில் இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் போது பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரண்டு கிரிக்கெட் அணிகளும் ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக விளையாடவுள்ள இந்த டெஸ்ட் தொடர் பற்றி இன்று இலங்கை கிரிக்கெட் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே இந்த தொடரில் பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டர்கள் என்னும் விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை இந்த டெஸ்ட் தொடரின் போது ஊடகவியலாளர்கள் மைதானத்திற்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கை – பங்களாதேஷ் அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி ஏப்ரல் 21ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 03ஆம் திகதி வரையிலும் கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் நடைபெறுகின்றது. இந்த டெஸ்ட் தொடருக்காக பங்களாதேஷ் கிரிக்கெட் அணி அடுத்த வாரம் இலங்கை வருவதோடு, டெஸ்ட் தொடர் ஆரம்பமாக முன்னர் இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சிப் போட்டி ஒன்றிலும் எதிர்வரும் 17ஆம் திகதி விளையாடவிருக்கின்றது.

## சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி



# சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் அணி வெற்றி

(மாளிகைக்காடு குறூப் நிருபர் )

சாய்ந்தமருதின் முதிசங்களான பிரேவ் லீடர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 41 வருட பூர்த்தியினை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் பந்து வீச சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகம் முன்வந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டு கழகத்தினர் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை பெற்றது.

சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டு கழகத்தின் சார்பில் ஹஸீம் 32 ஓட்டங்களையும் றிப்கான் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தின் சார்பில் சார்பில் நௌபீல் 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கட்டுக்களையும், முஹம்மது ஜலீல் 4 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பாடிய சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தினர் 17.5 ஓவர்களில் 3 விக்கட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை பெற்று 7 விக்கட்டுக்களினால் வெற்றி பெற்றனர். சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தின் சார்பில் பயாஸ் 62 ஓட்டங்களையும், சர்ஜுன் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டு கழகத்தின் சார்பில் ஹஸீன் 4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களை கொடுத்து 1 விக்கட்டினை கைப்பற்றி இருந்தார்.

இப்போட்டியில் ஆட்ட நாயகனாக சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் அணியை சேர்ந்த முஹம்மட் பயாஸ் தெரிவு செய்யப்பட்டார்.



தென்பிராந்திய கிரிக்கெட் பயிற்சி முகாம்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் 2021 ஆம் ஆண்டிலும் டோக்கியோ சீமெந்து குழுமம் மற்றும் Foundation of Goodness இடையிலான பங்காண்மை நீடிப்பு

டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சி முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர். ஞானம் மற்றும் Foundation of Goodness இன் ஸ்தாபகரும் பிரதம காப்பாளருமான குஷில் குணசேகர ஆகியோர் இரு அமைப்புகளுக்குமிடையிலான பங்காண்மையை தொடர்ச்சியான 7ஆவது வருடத்துக்கும் நீடித்திருந்தனர். எதிர்கால தலைவர்களை கட்டியெழுப்பும் நோக்கில் இந்த அனுசரணை அமைந்திருப்பதுடன், தென் மாகாணத்தைச் சேர்ந்த பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கிரிக்கெட் பயிற்சி முகாம்களை முன்னெடுப்பதற்கு உதவியாக அமையும்.


## மலையக கரப்பந்தாட்ட வீராங்கனை மாலைதீவு விளையாட்டு கழகத்திற்கு ஒப்பந்தம்

பசறை நிருபர்

பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஸ்பிரிங்வெலி தோட்ட , மேமலை பிரிவில் வசிக்கும் செல்வி. ஜெயராம் திலக்ஸனா என்ற கரப்பந்தாட்ட வீராங்கனை மாலைதீவு கரப்பந்தாட்ட கழகம் ஒன்றில் விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்ப்பட்டுள்ளார். கடந்த மாத இறுதியில் இருந்து காலியில் இடம்பெற்ற கெலக்ஸி கோப்பைக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெற்றது. இதில் இலங்கை மகளிர் கரப்பந்தாட்ட தரப்படுத்தலில் உள்ள முதல் 8 அணிகள் பங்குப்பற்றுவது வழமையாகும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரப்பந்தாட்ட அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி மேமலை தோட்டத்தைச் சேர்ந்த திலக்ஸனா, சிரிசாந்தி ஆகிய வீராங்கனைகள் விளையாடினர். இவர்களில் திலக்ஸனா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரில் பிரகாசித்தமையின் காரணமாக மாலைதீவு கரப்பந்தாட்ட விளையாட்டு கழகம் ஒன்றிற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டு கரப்பந்தாட்ட விளையாட்டு கழகம் ஒன்றில் விளையாட ஒப்பந்தமான முதல் இலங்கை வீராங்கனை என்ற பெருமையையும் இவர் தனதாக்கி கொண்டுள்ளார். இது குறித்து இவ்வீராங்கனையின் பாடசாலை பயிற்சி ஆசிரியரும் தற்போதைய வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலய உப அதிபருமான என்.சுந்தராஜ் கருத்து தெரிவிக்கையில் மலையகத்தின் புரட்சி லயத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதற்கு திலக்ஸனா சிறந்த முன்னுதாரணம் இவர் 2012 ஆம் ஆண்டு எனது பயிற்சியின் மேமலை தமிழ் வித்தியாலய கரப்பந்தாட்ட அணிக்கு விளையாடி பல வெற்றிகளுக்கு காரணமானார்.

## ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டி





# இலங்கை கரப்பந்தாட்ட அணிக்கு மஞ்சி அனுசரணை

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி வர்த்தக நாமமான மஞ்சி, தேசத்தின் வருடாந்த மஞ்சி தேசிய சுப்பர் லீக் கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது. ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் இலங்கையின் தேசிய அணி உயர்ந்த ஸ்தானத்தை எய்துவதை இலக்காகக் கொண்டு இந்த அனுசரணையை வழங்க முன்வந்துள்ளதாக மஞ்சி தெரிவித்துள்ளது.

ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளுக்காக, இலங்கையின் தேசிய கரப்பந்தாட்ட அணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள பாடல் அறிமுகம் நிகழ்வும் இந்த அனுசரணை வழங்கும் நிகழ்வில் இடம்பெற்றது. இந்தப் பாடல் இலங்கை முழுவதிலும் இசைக்கப்படும் என்பதுடன், பெருமளவு கரப்பந்தாட்ட ரசிகர்களை கவரும் வகையில் அமைந்திருக்கும். மேலும் தேசிய அணிக்கு வெற்றிக்கான ஆதரவை ரசிகர்களிடமிருந்து திரட்டும் வகையிலும் அமைந்திருக்கும். இந்த அனுசரணை வழங்கும் நிகழ்வில் பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகருதம் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவருமான ரஞ்சித் சியம்பளாபிட்டிய மற்றும் வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சர் டலஸ் அலஹப்பெரும ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் நிறுவனமான மஞ்சி, ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளில், இலங்கையின் தேசிய கரப்பந்தாட்ட அணியை வெற்றி பெறச் செய்வதற்காக அர்பணிப்பை மேற்கொண்டுள்ளது. இந்தப் போட்டிகள் ஆகஸ்ட் மாதம் ஜப்பானில் இடம்பெறவுள்ளன. இலங்கையின் முன்னணி கரப்பந்தாட்ட போட்டித் தொடரான மஞ்சி தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் என்பது, இலங்கை தேசிய அணிக்கு வீரர்களை தெரிவு செய்வதற்கான பிரதான திறவுகோலாக அமைந்துள்ளது. சுப்பர் லீக் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிகள் மார்ச் 13 ஆம் திகதி மஹாரகம இளைஞர் நிலையத்தில் இடம்பெற்றது.

நிறைவுபெற்ற சம்பியன்ஷிப் போட்டித் தொடர் தொடர்பில் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி நளின் பி கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில், “மஞ்சி தேசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் 2021 இல் உண்மையான விளையாட்டுத் திறமைகளையும், ஆர்வத்தையும் காண முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது தேசிய அணி சிறப்பாக செயலாற்றும் திறமையைக் கொண்டுள்ளது என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றியாளராக தெரிவு செய்யப்படும் என்பதிலும் நம்பிக்கை கொண்டுள்ளோம். பங்கேற்ற சகல வெற்றியாளர்கள் மற்றும் அணியினருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதுடன், தேசத்தின் தேசிய விளையாட்டின் முக்கியத்துவத்தை மஞ்சி முழுமூச்சுடன் உணர்ந்து செயலாற்றுகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன். உள்நாட்டில் இந்த விளையாட்டை ஊக்குவிப்பதற்கு தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், சர்வதேச ரீதியிலும் இலங்கையின் தரப்படுத்தலை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கின்றது.” என்றார்.

இந்தப் போட்டித் தொடரில் நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த பங்குபற்றுநர்கள் பெருமளவில் பங்கேற்றிருந்தனர். ஆண்கள் சுப்பர் லீக் பிரிவில் இலங்கை மின்சார சபை அணி வெற்றியீட்டியிருந்தது. Bitu Link விளையாட்டு கழகத்தை வெற்றியீட்டி முதல் ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டது. பெண்கள் பிரிவில் இலங்கை இராணுவ அணி வெற்றியீட்டியிருந்தது. இறுதிப் போட்டியில் வான்படை அணியை வெற்றியீட்டி முதல் ஸ்தானத்தைப் பெற்றிருந்தது.

இலங்கையில் விளையாட்டுக்கு மஞ்சி வழங்கும் ஆதரவு சாதாரண கூட்டாண்மை அனுசரணை என்பதற்கு அப்பாலானதாக அமைந்துள்ளது. உள்நாட்டில் விளையாடப்படும் விளையாட்டுக்களை மேம்படுத்துவதற்கு CBL தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், சமூகத்தாரை ஒன்றிணைப்பதற்கு உதவும் விளையாட்டு நிகழ்வுகளை முன்னெடுப்பதில் உதவிகளை வழங்கவும், ஒன்றிணைவு மற்றும் சமத்துவத்தை ஊக்குவிக்கவும் அர்ப்பணித்துள்ளது.



# தேசிய தகுதிகாண் மெய்வல்லுநரில் தங்கம் வென்றார் சண்முகேஸ்வரன்

தேசிய தகுதிகாண் மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றரில் பங்குகொண்ட மலையக வீரர்களான குமார் சண்முகேஸ்வரன் மற்றும் விக்னராஜ் வக்ஷான் ஆகிய இருவரும் முறையே தங்கம், வெண்கலப் பதக்கங்களை வெற்றி கொண்டனர்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வருடத்தின் முதலாவது தேசிய தகுதிகாண் மெய்வல்லுநர் போட்டிகள் (07) கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் ஜுலை மாதம் நடைபெறவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை இலக்ககாக் கொண்டு சிரேஷ்ட வீரர்களுக்கும், அதே மாதம் நடைபெறவுள்ள உலக கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியை இலக்காகக் கொண்டு கனிஷ்ட வீரர்களுக்கும் இந்த தகுதிகாண் போட்டிகள் நடைபெறுகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இதில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட மலையக வீரர் குமார் சண்முகேஸ்வரன் தங்கப் பதக்கம் வென்றார்.

கொரோனா வைரஸுக்குப் பிறகு முதல்தடவையாக தேசிய மட்டப் போட்டியொன்றில் களமிறங்கிய அவர். போட்டித் தூரத்தை 31 நிமிடங்கள் 29.31 செக்கன்களில் நிறைவு செய்தார்.

இறுதியாக, கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பங்குகொண்ட சண்முகேஸ்வரன் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 9ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

45 நிமிடம்

**இவ்வினாத்தாளில் மொத்தம் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் 45 நிமிட நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும். உங்கள் விடைகள் சரியானவையா என்று அடுத்த வாரம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**

**1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

ஆற்றங்கரையிலிருந்து அரசமரத்திற்கோ ஆண்டு முழுவதும் தண்ணீருக்குக் குறைவில்லை. வண்டல் கலந்து வந்த நீர் அரசமரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது. அரசமரம் அகன்று பெருத்து வானுறவோங்கித் தலை நிமிர்ந்து பூரிப்பாக நின்றது. அரசமரம் மற்றைய மரங்களைப் பார்த்து "நான் உங்களுக்கெல்லாம் தலைவன்!"
என்றது. மற்றைய மரங்கள் பேசாதிருந்தன. அரசமரம் அகங்காரத்தோடு பேசுவதை அவற்றால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பந்தியை துணையாகக் கொண்டு வினாக்களிற்கு விடை தருக.

i. அரசமரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது எது?
..........................................................
ii. அரசமரம் மற்றைய மரங்களைப் பார்த்து என்ன கூறியது?
..........................................................
iii. 'கர்வத்தோடு' என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.
..........................................................
iv. 'வெந்நீர்' என்பதன் எதிர்ச் சொல்லை எழுதுக.
..........................................................
v. அஃறிணை இறந்த காலப் பன்மைச் சொல் ஒன்று எழுதுக.
..........................................................
vi. 'மற்றைய மரங்கள் பேசாதிருந்தன' என்பதனை ஒருமை வாக்கியமாக எழுதுக.
..........................................................

**2. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i. உப்பிட்டவரை.......................................... நினை.

ii. இக்கரை மாட்டுக்கு .......................................... பச்சை.

**3. சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. மாலா ஆடற்கலையில் (தேற்சி, தேர்ச்சி) பெற்றவள்.

ii. சைக்கிளை (ஈர்ருருளி, ஈருருளி) எனவும் அழைப்பர்.

iii. நோய்த்தொற்றுக்கு உள்ளானவர் (அடையாளம், அடயாலம்) காணப்பட்டார்.

**4. பாடலில் விடுபட்ட சொற்களை எழுதுக.**

படிப்பறிவில்லா மாந்தர்க்கு - என்
படிப்பால் நன்மை (i) ....................................!
துடிக்கும் ஏழை (ii) .................................... - நான்
தூங்காதிருந்து வழி காண்பேன்!

**5. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

i. காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட இடம்
(சீனா, இந்தியா, நேபாளம்)
ii. சிட்டுக் குருவிகள் தினமாக பிரகடனப்படுத்திய நாள்
(ஏப்ரல் - 4, மார்ச்-20, ஒக்டோபர்-1)

**6. விடுகதையின் விடையை எழுதுக.**

i. ஒட்டியவன் ஒருவன் பிரித்தவன் இன்னொருவன் அது என்ன?
..........................................................
ii. காற்று நுழைந்ததும் கானம் பாடுவாள் அவள் யார்?
..........................................................

**7. புள்ளிக்கோட்டில் விடையை எழுதுக.**

i. நெல்லின் இளமைப் பெயர் ....................................
ii. பூவரும்பு என்பதனைப் பிரித்தெழுதினால் வருவது ....................................

**8. அண்மைக் காலமாக வாகனவிபத்துக்கள் அதிகளவில் நிகழ்வதை நாம் அறிகிறோம். நாம் கடைப்பிடிக்க வேண்டிய வீதி விதிகள் என்ற தலைப்பில் 5 சொற்களுக்கு குறையாது 3 வாக்கியங்கள் எழுதுக.**

i. ..........................................................

ii. ..........................................................

iii. ..........................................................

**9. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. Garden: ....................................
ii. Ship: ....................................

**10. ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. How much is it?
..........................................................
ii. My cat has four legs?
..........................................................

**11. தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

i. வானம் .................................... ii. பழங்கள் ....................................

**12. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. பங்குவ ....................................
ii. சோதன்ன ....................................
iii. யஹறுவா ....................................

**13. பின்வரும் சொற்களை சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.**
i. சோறு ..........................................................
ii. கால் ..........................................................

**14.** தரப்பட்ட எண்ணை எழுத்தில் எழுதுக.
**25043** ..........................................................

| | |
|---|---|
| 6 | 9 |
| 4 | 0 |

**15.** கட்டத்தில் தரப்பட்ட இலக்கங்களை பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை எழுதுக.
..........................................................

**16.** அடுத்து வரும் இரு எண்களை எழுதுக.
**4075, 4050, 4025,** ................., ......................

**17.** மு.ப 6.45 இற்கு புறப்பட்ட புகையிரதம் 6 மணித்தியாலம் 15 நிமிடங்கள் பயணித்ததெனின் பயணத்தை முடித்த நேரம் யாது?
....................................

**18.** 1kg தேயிலையின் விலை 1200.00 ரூபாய் எனின் 2kg 500g தேயிலையின் விலை யாது?
....................................

**19.பெட்டி** ஒன்றினுள் 12 பந்துகள் வைக்கலாம் 108 பந்துகளை வைப்பதற்கு எத்தனை **பெட்டி**கள் தேவை?
....................................

**20.**ஒரு கூடையில் 1950 தேங்காய்கள் இருந்தன. மற்றைய கூடையில் 1894 தேங்காய்கள் இருந்தன. இரண்டு கூடைகளிலும் உள்ள தேங்காய்கள் மொத்த எண்ணிக்கை யாது?
....................................

**21.**10kg மா உள்ள பையிலிருந்து 2kg 500g மாவை வெளியே எடுத்தால் மீதியாக உள்ள மாவின் அளவு யாது?
....................................

**22.**7m நாடாவில் இருந்து ஒவ்வொன்றும் 50cm அளவுள்ள 12 துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டால் எஞ்சியுள்ள பகுதியின் அளவு யாது?
....................................

**23.**தரப்பட்ட **எண்களை** உரோமன் இலக்கத்தில் எழுதுக.
i. ஒன்பது ....................................
ii. ஏழு ....................................

**24.** ஒருவருக்கு 5 இனிப்புகள் வீதம் 200 இனிப்புக்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?
....................................

**25.**3 லீற்றர் கொள்ளளவுள்ள பாத்திரம் ஒன்றை நிரப்புவதற்கு 100 மில்லி லீற்றர் அளவுள்ள கோப்பை ஒன்றினால் எத்தனை தடவைகள் ஊற்ற வேண்டும்?
....................................

**26.**கண்ணன் ஒரு பேனா ரூபாய் 12.50 வீதம் 10 பேனாக்களை வாங்கியபின் ரூபாய் 500.00 ஐ கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் யாது?
....................................

**27.**120 நிமிடங்களில் எத்தனை மணித்தியாலங்கள் உண்டு?
....................................

**28.**கனவுரு ஒன்றிலுள்ள உச்சிகள், விளிம்புகள் எத்தனையாகும்?
i. உச்சிகள் ....................................
ii. விளிம்புகள் ....................................

**29.**120 பழங்களைக் கொண்ட குவியலில் 1/4 பழுதடைந்ததன் காரணமாக அவை அகற்றப்பட்டு மீதிப்பழங்கள் விற்கப்பட்டன. விற்கப்பட்ட பழங்கள் எத்தனை?
....................................

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

**30.**செட்டைகள் உள்ளது
i. கிளி ii. மைனா iii. மீன்

**31.**சிறந்த விஞ்ஞானியும் சிறந்த எழுத்தாளருமாக திகழ்ந்தவர்
i. ஆர்தர் சி. கிளாக் ii. ரீ.பீ. ஜாயா iii. C.W.W. கண்ணங்கர

**32.**நிலத்தில் வெந்நீரைக் கொட்டுவதால் இறக்கும் பிராணி
i. தேனீ ii. மண்புழு iii. தும்பி

**33.**வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தில் நான்காவது படிமுறையாக அமைவது
i. புழு கூட்டை அமைத்தல்
ii.புழு இலையை உண்ணுதல்
iii. கூடு வெடித்தல்

**34.**அரச நிறுவனங்களில் ஒன்று
i. தனியார் வாங்கி ii. சிறப்பு அங்காடி iii. பிரதேச செயலகம்

**35.**மீனைப் பழுதடையாது பேணுவதற்குப் பயன்படுத்தும் பொருள்
i. பனிக்கட்டி ii.மரத்தூள் iii. மணல்

*(18ஆம் பக்கம் பார்க்க)*



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

17 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

**36.** அசுத்த நீரால் ஏற்படும் நோய்
i. இரப்பையழற்சி ii. சுவாசநோய் iii. ஈரலழற்சி

**37.** தேசிய இலச்சினையில் காணப்படும் இடம் அல்லாதது
i. அரச ஆவணங்கள் ii. இலவசப் பாடநூல் iii. தனியார் வங்கி

**38.** கருங்கல் உடைப்பவர்கள் பயன்படுத்தும் பொருட்கள்
i. துறப்பணம், சீவுளி
ii. வெட்டுளி, கல்லுடைக்கும் சுத்தியல்
iii. சாந்தகப்பை, மட்டப்பலகை

**39.** தையல் ஊசி தாங்கியைத் தைப்பதற்குப் பயன்படுத்தப்படும் அலங்காரத்தையல்
i. கம்பளித் தையல் ii. சங்கிலித்தையல் iii. நரம்புத்தையல்

**40.** நோய் காவிகளான ஆட்கள் மூலம் பரவும் நோய்கள்
i. டெங்கு, நீரிழிவு ii. சின்னமுத்து, கொப்பளிப்பான் iii.சீதபேதி, கழிச்சல்

**41.** கலப்பு மண்ணில் அடங்கியுள்ளவை
i. மணல், களி, பரல்
ii. பரல், சிறுமணல், களி
iii. சிறுகற்கள், மணல், சாம்பல்

**42.** நாம் செய்யத்தக்க நேர்வகையான மாற்றங்களில் ஒன்று
i. உணவு உண்டபின் பாத்திரங்களை கழுவாது வைத்தல்
ii. குப்பை கூளங்களை உரிய முறையில் அகற்றாது விடல்
iii. நித்திரை விட்டெழுந்ததும் படுக்கையை ஒழுங்கு படுத்தல்

**43.** தொடர்பாடல் கூறுகளாக அமைவன
i. அனுப்புபவர், தபாலகம், முத்திரை
ii. அனுப்புபவர், ஊடகம், பெறுநர்
iii. கடிதம், அனுப்புபவர், தபாலகம்

**44.** வடமாகாணத்திலுள்ள பெரிய குளங்களில் ஒன்று
i. இரணைமடுக்குளம் ii. பசவக்குளம் iii. மின்னேரியா

**45.** பொதுப் போக்குவரத்து வாகனத்தில் பயணம் செய்யும் போது நாம் செய்யவேண்டியது
i. விரும்பிய இடத்தில் வாகனத்தை நிறுத்தி இறங்குதல்
ii. பயணச் சீட்டை கட்டாயம் பெற்றுக் கொள்ளல்
iii. வாகனத்தின் முன்பக்க கதவால் ஏறி பின்பக்கத்தால் இறங்குதல்

**46.** அநுராதபுரம் அமைந்துள்ள மாகாணம்
i. மத்திய மாகாணம் ii. கிழக்கு மாகாணம் iii. வடமத்திய மாகாணம்

**47.** பின்வருவனவற்றில் பிழையான கூற்று
i. நீருக்கு வடிவம் உண்டு
ii. வெப்பமாக்கும் போது நீர் நீராவியாக மாறும்
iii. வெப்பநிலை அதிகரிக்கும் போது உப்பு, நீரில் விரைவாக கரையும்

**48.** கிளைத்துண்டுகளை நாட்டுவதன் மூலம் கன்றுகளைப் பெறும் பயிர்வகை
i. மிளகாய், கத்தரி ii. கங்குன், மரவள்ளி iii. பயறு, கடலை

**49.** இரு கம்பிகளை ஒன்றாகச் சேர்த்து முறுக்குவதற்குப் பயன்படும் உபகரணம்
i. துறப்பணம் ii. நீர்மட்டம் iii. குறடு

**50.** அனைத்து முண்ணிப் பறவைகளில் ஒன்று
i. ஆந்தை ii. காகம் iii. பருந்து

**51.** காந்தத்தின் இயல்புகளில் ஒன்று அல்லாதது
i. உலோகமல்லாத பொருட்களை கவராது
ii. எதிர் முனைகள் ஒன்றை ஒன்று கவரும்
iii. காந்தத்தின் வடமுனைவு நீல நிறத்தில் காணப்படும்

**52.** பண்டைக்காலத்தில் களைப்பைப் போக்கிக் கொள்வதற்காகப் பாடப்படும் பாடல்
i. அரிவு வெட்டுப்பாடல் ii. தாலாட்டுப் பாடல் iii. மழைப் பாடல்

**53.** பனிக்கட்டி நீராக மாறும் போது நடைபெறுவது
i. ஆவியாதல் ii. உருகுதல் iii. உறைதல்

**54.** தீங்கு செய்யும் பூச்சிகளைப் பிடித்து உண்பன
i. தவளை, ஓணான், ஆந்தை
ii. அணில், தேனீ, கிளி
iii. தும்பி, தேரை, மண்புழு

**55.** பல்லாங்குழி விளையாட்டிற்குத் தேவையான உபகரணம்
i. சிப்பி ii. பல்லாங்குழிப்பலகை iii. பந்து

**56.** கூட்டுப் பசளை செய்யப் பயன்படும் பொருட்கள்
i. தகரத்துண்டுகள், பொலித்தீன்கள்
ii. கடதாசிகள், **இறப்பர் துண்டுகள்**
iii. இலைகுழைகள், உக்கிய சிறுதடிகள்

**57.** உடல் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் உணவுக்கூட்டம்
i. பருப்பு, பயறு, சோயா
ii. பசளி, பருப்பு, வல்லாரை
iii. மா, வாழை, அன்னாசி

**58.** விருப்பமற்ற செயலைச் செய்யும் போது முகம் காட்டும் உணர்வு
i. பயம் ii. வெறுப்பு iii. மகிழ்ச்சி

**59.** சூரிய நமஸ்காரம் செய்யப் பொருத்தமான நேரம்
i. மதியம் ii. காலை iii. மாலை

**60.** பாரமான பொருட்களை வண்டியில் ஏற்ற உதவுவது
i. சாய்தளம் ii. கம்பி iii. நெம்பு கோல்

### பிராணிகளுக்குரிய ஒலி மரபுச் சொற்கள்

★ புலி - உறுமும்
★ பாம்பு - சீறும்
★ சிங்கம் - கர்ச்சிக்கும்
★ நாய் - குரைக்கும்
★ குதிரை - கனைக்கும்
★ ஆந்தை - அலறும்
★ பல்லி - சொல்லும்
★ வண்டு - இரையும்
★ மயில் - அகவும்

### கடந்த வாரம் (02.04.2021) வெளியான வினாத்தாள் - I இற்கான விடைகள்


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 2 | 21 | 3 | 31 | 3 |
| 02 | 3 | 12 | 3 | 22 | 2 | 32 | 1 |
| 03 | 3 | 13 | 1 | 23 | 2 88 என்பது 81ஆக மாற வேண்டும் | 33 | 1 |
| 04 | 2 | 14 | 1 | 24 | 2 | 34 | 2 |
| 05 | 2 | 15 | 2 | 25 | 1 | 35 | 3 |
| 06 | 1 | 16 | 2 | 26 | 2 | 36 | 1 |
| 07 | 3 | 17 | 3 | 27 | 1 | 37 | 2 |
| 08 | 1 | 18 | 2 | 28 | 3 | 38 | 1 |
| 09 | 3 | 19 | 3 | 29 | 1 | 39 | (2) |
| 10 | 1 | 20 | 2 | 30 | 3 | 40 | (5) |

### பயிர்களுக்கு தீமை செய்யும் பிராணிகள்


சில்வண்டு


எலி


மயிர்கொட்டி


பழ ஈ


தென்னம்வண்டு


நத்தை


வெட்டுக்கிளி


கறையான்

### விபத்துகளிலிருந்து பாதுகாப்பு பெற பயன்படுத்தும் உபகரணங்கள்


இடிதாங்கி மின்னல் கடத்தி


பாதுகாப்பு கவசம் அங்கி


ஆசனப் பட்டி


தீயணைப்பான்


கையுறை


காலுறை

## அடகுத் தங்க ஆபரண ஏலவிற்பனை

வரையறுக்கப்பட்ட பூஜாபிட்டிய பல நோக்குக் கூட்டுவுச் சங்கத்தின்

- அங்கும்புர
- பூஜாபிட்டிய
- முல்லேகம
- உடகம

எனும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2020-01-31ஆம் திகதி உட்பட அன்றைய தினம் முதல் அடகு வைக்கப்பட்டு 2021-05-08ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2021-05-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 3.00 மணி வரை பூஜாப்பிட்டிய சங்க அலுவலக வளவில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்.**

**வ/ப பூஜாபிட்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**பூஜாபிட்டிய.**

**2021-04-05.**

## மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவின் ஆண்டிற்கான கள்ளுத்தவறணைகள் வரயை வற்றல் – 2021/2022

2021ஆம் ஆண்டு ஆடி மாதம் 1ஆம் திகதி முதல் 2022ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு மஹவெவ பிரதேச செயலக பிரிவிலுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விற்பனைக்காக 2021.05.12ஆம் திகதி மு.ப.10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்கள் 2021.04.09ஆம் திகதி பிரசுரிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பத்திரிகையை பார்க்கவும்.

**எச்.எம்.என்.ஹேரத்**
**பிரதேச செயலாளர்,**
**மஹவெவ**
2021.03.29

## வெளிநாட்டு அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

ஐக்கிய இராச்சியம், Farnham Common Slough Bucks, Two Pins Clare Drive என்ற முகவரியைச் சார்ந்தவரும் GBR525665791 என்ற இலக்கத்தையுமுடைய கடவுச்சீட்டைக் கொண்டவருமான Paramjit Singh Kang ஆகிய நான், 2019.10.30 ஆம் திகதியிடப்பட்டதும் திவுலப்பிட்டிய, கொவிகம் பெதேச, 45/3A என்ற இலக்கத்தை சார்ந்த ஜாகொட ஆராய்ச்சிகே நந்தசிங்ஹ பிரியநாத (தேஅஅ இல.: 492310590ஏ) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட வெளிநாட்டு அற்றோணித்தத்துவமானது 2021 ஏப்ரல் 9 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இதுமுதற்கொண்டு என்னால் இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் வழங்குகின்றேன். எமது அற்றோணித் தத்துவக்காரர் என்ற நிலையில் மேற்கூறப்பட்டுள்ள **ஜாகொட ஆராய்ச்சிகே நந்தசிங்ஹ பிரியநாத என்பவரினால்** மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை அல்லது செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

**PARAMJIT SINGH KANG**

**2021 ஏப்ரல் 9 ஆம் நாளன்று.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தளை, பம்புரான, குமாரதுங்க மாவத்த, இல. 384ஐச் சேர்ந்த **கட்டமன்ன கம்மச்சாரிகே சுசாயாமா யெசானி** (தே.அ.அ.இல. 837851009V) ஆகிய நான் மாத்தறை பம்புரான, குமாரதுங்க மாவத்த, இல. 384, **கடமன்ன கம்மச்சாரிகே தமிது தசுன்** (தே.அ.அ. இல. 902942459V) இற்கு என்னால் வழங்கப்பட்ட மாத்தறை பகிரங்க நொத்தாரிசு **W.K.G. சஜீவனியினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.12.05ம் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவ இல. 690ஐ நான் இல்லாதொழித்து இரத்துச் செய்வதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**வழங்குபவருக்காக**
**தல்கஸ்வத்தகே T ஜகத் புஷ்பகுமார**
**சட்டத்தரணி**

The Housewives' companion
Classifieds on
Daily News

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# பதவி வெற்றிடம்

## தொழில்நுட்ப அலுவலர், கனிய அளவையாளர், உதவி கனிய அளவையாளர், கனிய அளவையியல் உதவியாளர், ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் படவரைஞர் பதவிகள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது மேலுள்ள பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
மேலுள்ள பதவிகளுக்கான தகுதிகள் பின்வருமாறு :

### 01. தொழிநுட்ப அலுவலகர்கள் (சிவில்)

**சம்பள அளவுத்திட்டம் :** MA 2-2(B) – ரூ.33,660 - 350x6- 600x14 – 44,160/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவம்**

மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் தொழிநுட்பத் துறையில் (சிவில்) தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் (NAITA) நான்கு வருடங்கள் முழுநேரமாக பொறியியல் துறையில் பயிலுநர் விசேட தேசிய டிப்ளோமா சான்றிதல் பெற்றிருத்தல் (NDES)

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தொழிநுட்பத்துறையில் (சிவில்) டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (SLIATE) உயர் தேசிய டிப்ளோமா (Civil) அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமையில் (NVQ) நிலை - 6 க்கு சமமான தகுதி.

### 02. கனிய அளவையாளர்

**சம்பள அளவுத்திட்டம் :** MM 1-1 – ரூ.53,175 – 10 x 1,375-15 x 1,910 - 95,575/-

**ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவம்**

இலங்கை அளவையியளாளர் நிறுவனத்தின் (IQSSL) பட்டதாரி உறுப்பினர்

அல்லது

இலங்கை அளவையியல் துறையில் (IQSSL) பட்டம் பெற்ற பட்டதாரி

அல்லது

ஆகக் குறைந்தது 10% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அல்லது சிலோன் பிளாண்டர்ஸ் சேமலாப சங்கத்திற்கு பங்களித்தல் அவ்வாறான நிதியத்திற்கு இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு பங்களிப்பாக ஆகக்கூடியது 12% மற்றும் உங்கள் சம்பளத்தின் 3% ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் தொழில் வழங்குனரினால் பங்களிப்பு செய்யப்படும்.

**விண்ணப்பங்கள்** : விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அனைத்து விபரங்கள் மற்றும் பிறப்பு சான்றிதழ், கல்விசார் சான்றிதழ் மற்றும் அனுபவம் ஆகியவற்றுடன் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை அடைவதற்காக பதிவுத் தபாலில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க /கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்களின் திணைக்கள தலைமையூடாக அவருடைய பரிந்துரையுடன் அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் முடும் திகதி** : கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை 2021.04.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் முறையில் அனுப்பப்படல் வேண்டும்.

**2021.04.09**

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல.: 21, BCC வளாகம்,**
**மீரானியா தெரு, கொழும்பு-12.**

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

erodua Viva Elite 2013
hite, Manual Gears, Alloy heels, Original Fog Lamp, ystal Headlight, Central ocking with Remote Key, Power Shutters, Power Mirrors, Reverse Sensors, Original Carpets, Power Steering, Second Owner, Home use.



- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சு**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – நுவரெலியா

## 2021 ஆம் ஆண்டு

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்பு மற்றும் திருத்தியமைப்பு செயற்றிட்டங்களுக்காக நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டி முறை அடிப்படையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01 | விலைமனு ஆவணங்களை விநியோகிக்கும் திகதி, நேரம் மற்றும் இடம் | 2021.04.09 ஆம் திகதி முதல் 2021.04.29 ஆம் திகதி வரையில் அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை<br>நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் |
| 02 | பூரத்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | 2021.04.30 ஆம் திகதியன்று மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்திற்கு பதிவுத் தபால் மூலம் அல்லது இந்நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். |
| 03 | விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் | 2021.04.30 ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் |
| 04 | விலைமனுப் பிணை | இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியத்தினால் விநியோகிக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியுடைய விலைமனுப் பிணைமுறி அனைத்து விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனுப் பிணைமுறியின் செல்லுப்படியாகும் காலம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள காலம் வரையானதாக இருத்தல் வேண்டும். |
| 05 | விலைமனுப் படிவங்களை சமர்ப்பித்தல் | விலைமனுக்கள் இரண்டு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''துணைப் பிரதி'' என பெயரிட்டு வேறு வேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு ஓர் உறையில் இட்டு அனுப்பப்படல் வேண்டும். அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரையும், ஒப்பந்த இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும். |
| 06 | விலைமனுக்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக | நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 052-2234482<br>அனைத்து வேலை விடயங்களுக்காக மாவட்ட பொறியியலாளர் (சுகாதாரக் கட்டிடம், நுவரெலியா, தொலைபேசி இலக்கம் 052-2235865) |

| | நிர்மாணம் மற்றும் திருத்தியமைத்தல் | பதிவு (CIDA Grade) | பொறியியல் அளவுப் பட்டியல் தொகை (வெட் அற்ற) (ரூ.) | மீளளிக்கப் படாத தொகை (ரூ.) | விலைமனுப் பிணையின் பெறுமதி – பணமாக (ரூ.) | பணமாக செலுத்தா விட்டால் (ரூ.) | விலைமனுப் பிணை செல்லுப்படி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **ஆரம்ப சுகாதார சேவையைப் பலப்படுத்தும் திட்டம் (PSSP)** | | | | | | |
| 01 | பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகக் கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல். | C-7,C-8 | 3,879,614.05 | 3000.00 | 19,400.00 | 39,000.00 | 2021/07/29 |
| 02 | நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஔடத களஞ்சியத்தை மேம்படுத்தல். | C-6,C-7 | 5,243,861.64 | 3000.00 | 26,300.00 | 52,600.00 | 2021/08/12 |
| 03 | மஸ்கெலியா பிராந்திய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்தியமைத்தல். | C-7,C-8 | 2,065,005.70 | 3000.00 | 10,400.00 | 20,800.00 | 2021/07/29 |
| 04 | டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையின் பழைய வெளி நோயாளர் கட்டிடத்தொகுதியை திருத்தியமைத்தல். கட்டம் - 1 | C-7,C-8 | 2,209,424.20 | 3000.00 | 11,100.00 | 22,200.00 | 2021/07/29 |
| 05 | வட்டவளை பிராந்திய வைத்தியசாலையின் தாதியர் உத்தியோகபூர்வ குடிமனைகளை திருத்தியமைத்தல். | C-6,C-7 | 4,857,830.00 | 3000.00 | 24,300.00 | 48,600.00 | 2021/08/12 |
| 06 | மத்துரட பிராந்திய வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகன கராஜ் மற்றும் சாரதி கடமை அறையை திருத்தியமைத்தல். | C-7,C-8 | 3,923,091.47 | 3000.00 | 19,700.00 | 39,400.00 | 2021/07/29 |
| 07 | தெரிபெஹெ பிராந்திய வைத்தியசாலையின் அலுவலர் குழாமினரின் உத்தியோகபூர்வ குடிமனைகளை திருத்தியமைத்தல். | C-7,C-8 | 3,413,624.80 | 3000.00 | 17,100.00 | 34,200.00 | 2021/07/29 |
| 08 | நில்தண்டாஹின்ன பிராந்திய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் - கட்டம் 02 | C-6,C-7 | 6,818,705.40 | 3000.00 | 34,100.00 | 68,200.00 | 2021/08/12 |
| 09 | நவதிஸ்பனை ஆரம்ப வைத்திய அலகின் உத்தியோகபூர்வ குடிமனைகளை நிர்மாணித்தல் - கட்டம் 01 | C-7,C-8 | 2,507,372.80 | 3000.00 | 12,600.00 | 25,200.00 | 2021/07/29 |
| 10 | கினிகத்தேன பிராந்திய வைத்தியசாலையின் ஔடத களஞ்சியத்தை திருத்தியமைத்தல். | C-8,C-9 | 905,517.71 | 1000.00 | 4,650.00 | 9,300.00 | 2021/07/29 |
| 11 | லக்ஷபான பிராந்திய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்தியமைத்தல். | C-6,C-7 | 4,564,232.90 | 3000.00 | 22,900.00 | 45,800.00 | 2021/08/12 |
| 12 | குருபணாவல ஆரம்ப வைத்திய அலகின் உத்தியோகபூர்வ குடிமனைகளை திருத்தியமைத்தல். | C-7,C-8 | 2,777,170.58 | 3000.00 | 13,900.00 | 27,800.00 | 2021/07/29 |
| | **தீர்மானிக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் (PSDG)** | | | | | | |
| 13 | டயகம பிராந்திய வைத்தியசாலையின் அலுவலர் குழாம் உத்தியோகபூர்வ குடிமனைகளை நிர்மாணித்தல். | C-6,C-7 | 4,246,512.00 | 3000.00 | 21,150.00 | 42,300.00 | 2021/08/12 |
| 14 | ஹப்புகஸ்தலாவ ஆரம்ப வைத்திய அலகின் கட்டிடத்தை திருத்தியமைத்தல். | C-7,C-8 | 3,814,522.90 | 3000.00 | 19,100.00 | 38,200.00 | 2021/07/29 |
| 15 | உடப்புஸ்ஸல்லாவ பிராந்திய வைத்தியசாலையின் வாட்டு இலக்கம் 02, 03 மற்றும் 06 இலிருந்து தாதியர் உத்தியோகபூர்வ குடிமனைகள் வரை பிரவேச வீதியை திருத்தியமைத்தல். | C-7,C-8 | 3,586,833.41 | 3000.00 | 17,950.00 | 35,900.00 | 2021/07/29 |

- விலைமனுப் பிணையினை பணமாக செலுத்தாவிடில், நுவரெலியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் விலைமனுப் பிணைமுறி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
- அனைத்து விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.
- விலைமனுக் கேள்வியை வழங்குவது தொடர்பிலான இறுதி தீர்மானம் எடுக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்குரியதாகும்.
- விலைமனுப் படிவங்களை அலுவலகத்திற்கு வருகைதந்து இலவசமாக பரீட்சித்துக்கொள்ள முடியும். (2021.04.09 ஆம் திகதி முதல் 2021.04.29 ஆம் திகதி வரையில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரையில்)

**தலைவர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகப் பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**
**2021.04 …………….. ஆம் திகதி**
**நுவரெலியா.**




## தேசிய கல்வி நிறுவகம்

# உடற் கல்வி மற்றும் விளையாட்டு உயர் டிப்ளோமா 2021/ 2022

தேசிய கல்வி நிறுவகத்தின் சுகாதாரம் மற்றும் உடற் கல்விப் பிரிவு வழங்கும் உடற் கல்வி மற்றும் விளையாட்டு உயர் டிப்ளோமா பாடநெறியின் முதலாவது குழுவினருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**பாடநெறிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான அடிப்படைத் தகைமைகள்:**

- கல்வி அமைச்சினால் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாகவிருத்தல்

**மற்றும்**

- க.பொ.த. (உ.தரம்) சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்

### பாடநெறித் தகவல்

**காலம்** - 02 வருடங்கள்

**மொழி** - சிங்களம்/ தமிழ்

**தேர்வு முறை** - கட்டமைக்கப்பட்ட நேர்காணல்

**நடாத்தப்படும் முறை** - வார இறுதி (மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை)

**கற்பித்தல் முறை** - விரிவுரைகள், செய்முறை / நிகழ்நிலை

**பாடநெறிக் கட்டணம்** - ரூபா. 90,000/- (சமமான இரண்டு தவணைகளில் செலுத்தலாம்) மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

* பாடநெறியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இலங்கைத் தகைமைச் சட்டகம் (SLQF) IV கல்வி மட்டத்தைப் நிறைவு செய்தமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்திலிருந்து (www.nic.lk) பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அல்லது அதற்கிணங்கத் தயாரித்துப் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கிற்கு இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கணக்கிலக்கம் 607628 இற்கு (உரிய கட்டணம்) ரூபா. 1200/- ஐச் செலுத்திய பற்றுச்சீட்டையும் இணைத்து 9"x 4" அளவு கடித உறையில் ரூபா. 15/- முத்திரையிட்டு உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் 2021 மே மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பிரிவுத் தலைவர், சுகாதாரம் மற்றும் உடற் கல்விப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மகரகம எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். தபால் உறையின் மேல் இடது மூலையில் "உடற்கல்வி மற்றும் விளையாட்டு உயர் டிப்ளோமா" என்று குறிக்கப்பட வேண்டும். உங்களது விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படின் விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

**கலாநிதி. உபாலி எம். சேதர**
**பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை)**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நிதி அமைச்சு

# பொருட்களின் பெறுகை

## தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB)

கீழே விபரிக்கப்பட்டவாறு 2020ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் பல்லூடக அமைச்சின் வருடாந்த அறிக்கையை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடுவதற்காக தகுதி மற்றும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை நிதி மற்றும் பல்லூடக அமைச்சின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருப்பதுடன் பின்வரும் தகைமை தகவுத்திறனை போதுமான அளவில் பூர்த்தி செய்த விலைமனுதாரர்களுக்கே விலைமனுக்களுக்கான இந்த அழைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

   அ. விலைமனுதாரரானவர் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபார முயற்சியாக/ நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   ஆ. கடந்த 3 வருடங்களில் அச்சிடல் தொடர்பான வேலைகளில் ஆகக் குறைந்தது 3 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியானதும் சித்திகரமாகவும் கணிசமான அளவில் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
   இ. வடிவமைத்து அறிக்கையை மூன்று மொழிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடுவதற்கான ஆற்றல்

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு -01, நிதி மற்றும் பல்லூடக அமைச்சு, செயலகம், வழங்கலுக்கான கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
   (தொலைபேசி/தொலைநகல்: 011-2484538/ 011-2421253)

4. 2021.04.09ஆம் திகதியிலிருந்து 2021.04.30ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு. ப. 9 மணியிலிருந்து பி. ப. 3 மணி வரையும் கொழும்பு -01, செயலகம், நிதி அமைச்சு, புதிய கட்டிடம், மேல் தரை மாடி, பிரதம கணக்காளர் இடம் ஓர் முழுமையான தொகுதி விலைமனுக் கோரல் ஆவணங்களை ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் ரூபா 1500 ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

5. 2021 ஜுலை 29ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருக்கும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து நிதி அமைச்சின் செயலாளரின் பெயரில் ஐம்பதாயிரம் ரூபாவிற்கான (50,000 ரூ.) விலைமனுப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2021.04.30ஆம் திகதி பி. ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு -01, செயலகம் நிதி அமைச்சு புதிய கட்டிடம், மேல் தரை மாடி, நிதிப்பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அல்லது தலைவர், அமைச்சு சிறிய பெறுகைக் குழு, நிதிப் பிரிவு, மேல் தரை மாடி, புதிய கட்டிடம், நிதி அமைச்சு, செயலகம், கொழும்பு -01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்குப் பின்னர் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர் தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

7. தாமதக் கேள்விகள் நிராகரிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '2020 ஆண்டிற்கான ஆண்டறிக்கையை அச்சிடல்' என்று குறிப்பிடல் வேண்டும். 2021 ஏப்ரல் 22ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு நிதி அமைச்சின் புதிய கட்டிடம், மேல் தரை மாடி, நிதிப்பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**அமைச்சு சிறிய பெறுகைக் குழு,**
**நிதி அமைச்சு**
**செயலகம், கொழும்பு -01.**

09.04.2021

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல. :** DIVPANN/LND/ACDEP/1/4/12

**காணி அமைச்சின் இல:** 4-3/8/2017/PC/63

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.09.12 ஆம் திகதிய 2018/67ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | - குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | - பன்னல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - 1553. இங்கரதவுல |
| கிராமம் | - இங்கரதவுல |
| காணியின் பெயர் | - இந்திகஹவெல வத்த |
| வரைபட இல. | - இ.கி.வ. இல. 341 |
| துண்டு இல. | : 130 |
| விஸ்தீரணம் | : 0.5939 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்,**
**பன்னல**

**பிரதேச செயலகம்**
**பன்னல**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**வெப் அப்கிளவுட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: **PV 00236022**
பதிவு முகவரி :
**இல. 20, சுவர்ணா பிளேஸ், நாவல வீதி, ராஜகிரிய PC10100**
**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**செயலாளர்**
**B.P.T. பீரிஸ்**

Repeat Your Ad For Better Offers

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோமாகம, தெல்கஹவத்த, பிரசன்னபுர, இல. 141/2/D ஐச் சேர்ந்த ரஞ்சித் செனரத் யாபா ஆகிய நான் சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு A.M.W. ஜயதிலக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.06.29ம் திகதியிடப்பட்ட நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ சோரதா மாவத்த, இல. 111/10 ஐச் சேர்ந்த மஞ்சுள **நிலந்த செனரத் யாபா** (தே.அ.அ.இ. 199103202370) விற்கு வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவ இல. 5787 ஐ உடனடியாக இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன். இவ் அட்டோர்ணி மூலம் மேற்கொள்ளப்படும் எந்த விடயங்களுக்கும் நான் பொறுப்புக்கூறமாட்டேன் எனவும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**- ரஞ்சித் செனரத் யாபா**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 23, அத்துருகிரிய வீதி, கொட்டாவ என்ற முகவரியில் வசிக்கும் வாஹலதன்த்ரீகே சந்தன பிரதீப்குமார (தே.அ.அ.இல.810804432V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதும் 2020 ஜனவரி 14ஆம் திகதி 5873 என்ற இலக்கத்தின் கீழ், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திருமதி எஸ்.எம்.இனோகா புஷ்பகுமாரி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான அற்றோணி தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப் பட்டுள்ளதென இலங்கை குடியரசின் பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**2021 ஏப்ரல் 07ஆம் திகதி**
**விஜய சூரிய முதியன்சேலாகே அமில விஜயசூரிய**

## 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கமுடைய வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடு) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் விற்பனை

## செலான் வங்கி பீஎல்சீ நீர்கொழும்பு கிளை

### இரண்டு மாடி வீட்டுடன் சேர்த்து பெறுமதியான ஆதனத்தின் ஏல விற்பனை

"கடப்பாடுடையவர்/ அடகு வைப்பவரான" தலஹேனவின் சரத் குமார குணரத்னவுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு பிணையாகக் கொடுக்கப்பட்ட ஆதனம்.

ஒரு ஏக்கர் இரு ரூட்ஸ் மற்றும் இருபத்தி எட்டு பேர்ச்சுகள் (1A.,2R.,28P) கொண்ட காணியின் கூறப்பட்ட ஒதுக்கீடான மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு பதிவாளர் பிரிவுக்கு உட்பட்ட அளுத்குரு கோரளேயின் தாசியபற்றுவில் நீர்கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட நீர்கொழும்பு செயலாளர் பிரிவில் இல. 163/பி-துங்கலபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட துங்கலபிட்டியவில் அமைந்துள்ள 'மடன்கஹவத்த கொட்டச' என்று அழைக்கப்படும் காணியின் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2015.11.03 ஆம் திகதிய உரிமம் பெற்ற அளவையாளர் டபிள்யு.ஜே.எம்.ஜி. டயஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட 1995.04.19 ஆம் திகதிய 2097/95 ஆம் இலக்க வரைவில் விபரிக்கப்பட்ட காணியின் அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட ஒதுக்கீடு.

**காணியின் பரப்பளவு 1 ஏக்கர் 02 ரூட்ஸ் 28 பேர்ச்சுகள் (1A.,2R.,28P)**
**அத்துடன் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்ந்தது.**

**செலான் வங்கி பீஎல்சீ எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்படி ஆதனத்தை அதே இடத்தில் 2021 மே 07 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு நான் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.**

**ஆதனத்தை வந்தடையும் வழி:-** நீர்கொழும்பு நகர மத்தியில் இருந்து மான்குளிய வீதியில் சுமார் 9.8 கி.மீ தூரம் பயணித்து சொய்சா மாவத்தையை அடைந்த பின், இடது பக்கமாக அமைந்திருக்கும் சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையும். சம்பந்தப்பட்ட ஆதனம் நீர்கொழும்பு துடெல்ல வீதியில் இருந்து சுமார் 130 மீற்றர் தொடக்கம் 140 மீற்றருக்கு அப்பால் இடது பக்கமாக சொய்சா மாவத்தையில் அமைந்திருக்கும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:- 2021.02.12 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி, 2021.01.12 ஆம் திகதிய தி ஐலண்ட், தினக்குரல் செய்திப் பத்திரிகை மற்றும் 2021.01.18 ஆம் திகதிய அருண செய்திப் பத்திரிகைகளைப் பார்க்கவும். விற்பனை அறிவித்தலுக்காக 2021.04.09 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

கொவிட் - 19 ஒழுங்குமுறைக்கு அமைவாக சுகாதார அமைச்சு மூலம் வெளியிடப்பட்ட கண்டிப்பான வழிகாட்டலுக்கு இணங்க ஏல விற்பனை நடத்தப்படும்.

**கொடுப்பனவு முறை:-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் தெரிவுசெய்யப்பட்ட கொள்வனவாளர் கீழ்க்காணும் தொகைகளை ரொக்கமாகச் செலுத்த வேண்டும். 01. கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) 02. உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் உள்ளூர் விற்பனை வரி (1%) 03. ஏல விற்பனையாளர் கட்டணங்களாக இரண்டரை வீதம் (2.5%) 04. விற்பனை நிபந்தனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிஸ் உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 3000/= 05. எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணம் ரூபா 1500/= 06. விற்பனைக்கான விளம்பரப்படுத்தல் மொத்தச் செலவு 07. கொள்வனவு விலையின் மீதமான 90% தொகை அரசாங்க தீர்வைகள், அறவீடுகள் வரிகள் அல்லது ஏனைய பொருத்தமானதும் இலங்கை அரசாங்கம் அல்லது ஏனைய எந்தவொரு அதிகார சபையாலும் விதிக்கப்பட்டதுமான கட்டணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். கூறப்பட்ட மேற்படி மீதித்தொகை மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% தொகையை தடுத்து வைப்பதற்கும் ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உடையதாகும்.

ஆதன உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பத்திரங்களை இல. 90, காலி வீதி, கொழும்பு-03 முகவரியில் உள்ள செலான் டவர் செலான் வங்கி பீஎல்சீ சட்டப் பிரிவின் தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. 0112456465. 011-2456472.

மேற்படி ஏல விற்பனையை முன்னறிவித்தல் இல்லாது நிறுத்தி வைக்கும்/ இரத்து செய்யும் உரிமை வங்கி உடையது.

**துசித கருணாரத்ன (ஜே.பி)**
**உரிமம் பெற்ற ஏலதாரர்**
**நீதிமன்ற ஆணையாளர்**

**T & H Auction**
**இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை**
**தொ.பே: 011 3068185, 2572940**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில்துறை இராஜாங்க அமைச்சு**

### 21600 புதிய டயர் தொகுதிகளை இலங்கை போக்குவரத்து சபைக்காக வழங்கல்

**Procurement No.: SMOT/04//CT/04**

1. 2021.05.12 ஆம் திகதி பி.ப. 2 மணி வரையும் இலங்கை போக்குவரத்து சபைக்கு 21600 புதிய டயர் தொகுதிகளை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில்துறை இராஜாங்க அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத்தலைவர் பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய விதிக்கப்பட்ட படிவத்திலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (தொலைபேசி: 011 7706110, தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457). 2021.04.09 ஆம் திகதியிலிருந்து 2021.05.11 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 80,000 ரூபாவை மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாக செலுத்திய பின்னர் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

| விளக்கம் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|
| ஆகக் குறைந்தது 45 நாட்கள் கடன் அடிப்படையில் இபோச இற்கு 21600 எண்ணிக்கையுடைய புதிய டயர் தொகுதிகளை வழங்கல்<br>(8.25 x 20 அளவுள்ள 600 எண்ணிக்கைகள், 9.00 x 20 அளவுள்ள 22856 எண்ணிக்கைகள் மற்றும் 10.00 x 20 அளவுள்ள 144 எண்ணிக்கைகள். | i) 8.25x 20 மற்றும் 10.00 x20 அளவுள்ள புதிய டயர் தொகுதிகளை முன்வைக்கும் விலைமனுதாரருக்கு மாத்திரம் - 0.3 மில். ரூபா<br>ii) 9.00 x 20 அளவுள்ள புதிய டயர் தொகுதிகளை முன்வைக்கும் விலைமனுதாரருக்கு மாத்திரம் - 8.4 மில். ரூபா<br>iii) அனைத்து 3 அளவுகளுக்குமான புதிய டயர் தொகுதிகளை முன்வைக்கும் விலைமனுதாரருக்கு மாத்திரம் - 8.7 மில். ரூபா. |

2. டயர் உற்பத்தியாளர்கள் மற்றும் டயர் உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள் அல்லது தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மாத்திரமே இந்த விலைமனுவில் பங்குபெறும் தகுதியை பெற்றுக் கொள்வர்.
3. உள்ளூர் முன்னுரிமையானது விலைமனுவொன்றின் மதிப்பீட்டு காரணியாக அமைந்திருக்கும்.
4. விலைமனுக்கள் 2021.09.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், மேற்கோள் காட்டப்பட்ட விலைகள் ஒரு (01) வருட காலத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
5. இபோச இனால் முதன் முதலிலேயே சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதுமான உத்தரவாதமொன்றின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு பெற்ற வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கானதும் 2021.10.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதொரு விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிராத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
6. (அ) எந்தவொரு விலைமனுதாரரின் உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவராகவிருக்கும் நபரானவர் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக ''1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களின் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு'' பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு மூலப்பிரதிகளை சமர்ப்பிக்கத்தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்தவுடனேயேயும் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்பும் விலைமனுதாரர்கள் தம்மை பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்தங்களின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஒப்பந்தம் வழங்கப்படமாட்டாது.
7. விலைமனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலச்சினை பொறிக்கப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2021.05.12 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு மூடப்படும். முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகை குழு, பிரதான கணக்காளர் மே/பா, கணக்கிடல் பிரிவு, வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில்துறை இராஜாங்க அமைச்சு, டி.ஆர் விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10, என முகவரியிடப்பட்டு தலைவரிடம் நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களை அடக்கியுள்ள முத்திரை பொறிக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for the supply of 21600 Nos. New Tyre Kits to SLTB" என குறிப்பிடப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் அவைகளை மூடியதும் உடனடியாகவே கொழும்பு-10, வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில்துறை இராஜாங்க அமைச்சின் கணக்கிடல் பிரிவில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழு,**
**வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும்**
**புகையிரத பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழில்துறை இராஜாங்க அமைச்சு,**
**இல.: 01, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

மேலதிக விபரங்கள் மற்றும் விலைமனு ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்கும் தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**இலங்கை போக்குவரத்து சபை பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**200, கிருள வீதி,**
**கொழும்பு-05, இலங்கை.**
**தொலைபேசி இலக்கம் : 011 7706110.**
**தொலைபேசி/தொலைநகல் : 011 2588457**

## ஆர்வ வெளிப்பாட்டிற்கான கோரிக்கை

**சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)**

வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

**Credit No.: 5792 LK Project ID:15621**

### இயற்கை-அடிப்படையிலான சுற்றுலாத்துறை திட்டமிடலுக்காக இரு தேசிய உசாத்துணையாளர்களை வாடகைக்கு அமர்த்துதல் (சர்வதேச உசாத்துணையாளர்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக)

1. சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் வனசீவராசி வளங்கள் அமைச்சினால் அமுல் நடாத்தப்படும் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்கான (ESCAMP) ஆகுசெலவிற்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை அரசாங்கமானது நிதியிடலொன்றை பெற்றுள்ளது. இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட அமைவிடங்களில் பாதுகாப்பு மற்றும் சமூக அனுகூலங்களுக்காக சூழல் தொகுதிகளின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதே இந்த செயற்றிட்ட அபிவிருத்தியின் நோக்கமாகும். வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு (MoWL&FC) செயற்றிட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக வன பரிபாலனத் திணைக்களம் (FD) மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் (DWC) ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையானது (PMU) செயற்றிட்டத்தை அமுல்படுத்துகின்றது.
2. செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையானது (PMU) உறுதி செய்யப்பட்ட அனுபவத்துடன் தகுதியான உசாத்துணையாளர்களை இப்போது அழைக்கின்றது.

   (A) இயற்கை அடிப்படையிலான சுற்றுலாத் திட்டமொன்றைத் தயாரிக்க சர்வதேச உசாத்துணையாளர்களின் ஆதரவைப் பெறுவதற்கும் மற்றும் இலங்கையின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் தற்போதுள்ள 4 இயற்கை சார்ந்த சுற்றுலாத் திட்டங்களை நாளது தரவேற்றம் **(Update)** செய்தல்.

   **உள்ளடங்கும் செயற்றிட்ட வேலைத்தளங்கள்:**

   (அ) வன பரிபாலனத் திணைக்களத்தினால் முகாமைத்துவப்படுத்தப்படும் சிங்கராஜா ஒதுக்கப்பட்ட வனப்பிரதேசம் மற்றும் நக்கிள்ஸ் பாதுகாப்பு வனப்பகுதி மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் முகாமைத்துவப்படுத்தப்படும் உடவளவே தேசிய வனம் மற்றும் புந்தள தேசிய வனம் (இவற்றிற்காக நான்கு (4) இயற்கை அடிப்படையிலான சுற்றுலாத்துறை திட்டமிடல் (NBTP) முன்பே தயாரிக்கப்பட்டுள்ளது;

   **மற்றும்**

   (ஆ) வன பரிபாலனத் திணைக்களத்தினால் முகாமைத்துவப்படுத்தப்படும் காலவில (Galawila) சூழலுக்கேற்ற வனம் (புதியதொரு பிரதேசம்)

   (B) இலங்கையில் ஹுருளு-கவ்டுள்ள-கந்தளாய் காணிச்சீராக்கலுக்கான பலவகைப்பட்ட இயற்கை அடிப்படையிலான சுற்றுலாத்துறை திட்டமிடல்களை தயாரித்தல்.

   **உள்ளடங்கும் செயற்றிட்ட வேலைத்தளங்கள்:**


   ஹுருலுலு - கவ்டுள்ள - கந்தாய் கொத்தணியில் அடக்கப்பட்டவைகள்- ஹுருளு ஒதுக்கப்பட்டவன பிரதேசம், கல்ஓய ஒதுக்கப்பட்ட வன பிரதேசம், சுண்டக்காடு ஒதுக்கப்பட்ட வன பிரதேசம், கவ்டுள்ள தேசிய வனம், மின்னேரிய தேசியவனம் மற்றும் சோமாவதி தேசிய வனம்.
3. உத்தேசிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக் காலப்பகுதியானது 5 மாதங்களாகும் (முழுநேரம்)
4. ஆர்வமுள்ள நிபுணர்கள், **www.eswcamp.lk** என்ற இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிக்குறிப்பிற்கு அமைந்தொழுகுவதுடன் உசாத்துணையை மேற்கொள்வதற்காக அவர்கள் தகைமை பெற்றுள்ளார்கள் என உறுதிப்படுத்தும் போதுமானளவு சான்றுகளுடனான முன்மொழிவொன்றை வழங்கல் வேண்டும். (உசாத்துணையின் முழுமையான நியதிக்குறிப்பு மற்றும் ஏனைய தகவல் ஆகியன இணையதளத்தில் வாசிப்பதற்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது)
5. தொழில்சார் தகைமைகள் மற்றும் உரித்தான துறையிலுள்ள அனுபவம் மற்றும் 2014 ஜுலையில் மீளாக்கம் செய்யப்பட்டதும் 2011 சனவரி உலக வங்கியின் கடன் பெறுவோரினால் தனிநபர் உசாத்துணையாளர்களை தெரிவு செய்தலும் வாடகைக்கு அமர்த்துதலும் என்பதன் கீழான உலக வங்கியின் உசாத்துணை வழிகாட்டலின் நடைமுறைகளின் அடிப்படையில் நிபுணர் தெரிவு செய்யப்படுவார்.
6. ஆர்வமுள்ள நிபுணர்கள் மேலதிக தகவலை ESCAMP இன் பெறுகை விஷேடத்துனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மின்னஞ்சல்: <anushaseneviratne1987@gmail.com>
தொலைபேசி: + 940112888/425-428. தொலைநகல்: +94-11-2888 577

7. செயற்றிட்ட முன்மொழிவுடனான ஆர்வ வெளிப்பாடானது 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு பிந்தாமல் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். ஆர்வ வெளிப்பாட்டை அடக்கியுள்ள தபாலுறையில் **"EOI – National Consultant ..................................................... NBT – ESCAMP".** (உரித்தான உசாத்துணையை இதற்கமைவாக வழங்கவும்).

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**இல. 82, ''சம்பத்பாய", ரஜமல்வத்த பாதை,**
**பத்தரமுல்ல, இலங்கை.**

**தொலைபேசி: +940112888/425-428. தொலைநகல்: +94112888 577**
**2021 ஏப்ரல் 09 ஆம் திகதியன்று.**

BE BETTER INFORMED!
Dinamina Daily News Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!


AVAILABLE AT
LAKE HOUSE

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கையின் அதிவேக வீதிகளின் வருமானத்தினால் நிதியிடப்பட்டது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

### ஒரு வருட காலப்பகுதிக்கு (2021/2022) அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்

1. மேலேயுள்ளவற்றிற்கு தகுதியும் முழுமையான தகுதியுமுள்ள நிறுவனத்திலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக வீதி EOM&M பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் பூரணமான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டவாறு அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல. | வாகனத்தின் இனம் | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | ஒரு வாகனத்திற்கான விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 01. | தொழிலாளர்களை எடுத்துச் செல்லும் ட்ரக் | RDA/EOM&M/PRC/2021/MNT/11-LT-1-9 | 09 | 30,000 |
| 02. | டிப்பர் ட்ரக் | RDA/EOM&M/PRC/2021/MNT/11-TT-1-4 | 04 | 25,000 |
| 03. | அடையாள பலகைகளை எடுத்துச் செல்லும் ட்ரக் | RDA/EOM&M/PRC/2021/MNT/11-STT-1-4 | 04 | 30,000 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122, தொலைநகல்: 038-2289560) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. 2021.04.09 ஆம் திகதியிலிருந்து 2021.05.07 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 5,000 ரூபா + 400 (VAT) ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் சிங்கள மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் பிரகாரம், கேள்வியின் முகவர் மற்றும் வெற்றிகரமான வெற்றியாளர்கள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
5. 2021.05.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவு பணிப்பாளரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 2021.08.08 ஆம் திகதி வரையும் இருத்தல் வேண்டும்.
7. ஒவ்வொரு விலைமனுவும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021.09.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் (EOM&M பிரிவு மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நீதி அமைச்சு

### களுதொட்ட கட்டிடத்தின் இரண்டாம் மாடியின் வடிவமைப்பு, மாற்றங்கள் மற்றும் புதுப்பித்தல் II ஆம் கட்டம்

### Contract No.: MOJ/AC/26/12/2021

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 36 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான களுதொட்ட கட்டிடத்தின் இரண்டாம் மாடியின் வடிவமைப்பு, மாற்றங்கள் மற்றும் புதுப்பித்தல்களுக்காக (IIஆம் கட்டம்) தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நீதி அமைச்சின் அமைச்சு பெறுகைக்குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   இரண்டாம் மாடியின் - II ஆம் கட்டம் - முன் நுழைவாயிலின் வெளிப்பக்கம் மற்றும் உள்ளக வடிவமைப்பு ஆகியனவே எமது திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

   ஒப்பந்தக் காலப்பகுதி - 365 நாட்கள் மற்றும் ஒரு மாத குறைபாடுகளுக்கான பொறுப்பு காலப்பகுதி.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும் - (ஆரம்ப தகவல், வடிவமைப்பு / தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதியில் முன்மொழிவு ஆகியவற்றை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். முன்மொழிவுகள் இரு தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்படல் வேண்டும். முதலாவது தபாலுறையானது ஆரம்ப தகவல் மற்றும் வடிவமைப்பு/ தொழில்நுட்ப முன்மொழிவு ஆகியவற்றைக் கொண்டிருப்பதுடன் இரண்டாம் தபாலுறையானது நிதியிடல் முன்மொழிவைக் கொண்டிருத்தல் வேண்டும்). தொழில்நுட்ப தகைமையுள்ள விலைமனுதாரர்களின் விலைமனு விலைகள் நிதியிடல் விலைமனுக்களை திறக்கும் வேளையில் வாசிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவர்களாகவும் கட்டிட நிர்மாணத்தில் உள்ளக வடிவமைத்தலில் இந்நிறுவனத்துடன் எஸ்பி-3 அல்லது மேற்பட்ட தரபதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   - கடந்த ஐந்து வருடங்களில் கம்பனியின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது 4.5 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் 50 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாத பெறுமதியில் நிகரான தன்மையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட ஒரு செயற்றிட்டம் (உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டுமான-நிர்மாணம் அல்லது நிர்மாணம், கட்டிடமொன்றின் மாற்றங்கள் மற்றும் புதுப்பித்தல் ஆகியன).
   - (ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட பின்னர்) இந்த ஒப்பந்தத்திற்காக எந்தவொரு முற்பணக் கொடுப்பனவு நீங்கலாக, திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்ததொகை 10 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-12, நீதிஅமைச்சு, மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி, 3ஆம் மாடி, வழங்கல்கள் பிரிவின் கணக்காளரிடமிருந்து பெற்று 2021.04.09 ஆம் திகதியிலிருந்து 2021.04.29 ஆம் திகதி வரையும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2021.04.09 ஆம் திகதியிலிருந்து 2021.04.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் ஐயாயிரம் இலங்கை ரூபாவை (5,000 இ.ரூபா) செலுத்திய பின்னர், கொழும்பு-12, மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி, நீதி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2021.04.30 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-12, மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி, நீதிஅமைச்சு, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-12, நீதி அமைச்சு, மூன்றாம் மாடி, வழங்கல் பிரிவின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவற்றை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
8. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதுமானதும் மூன்று இலட்சத்து அறுபதினாயிரம் இலங்கை ரூபாவிற்கான (360,000,. ரூபா) 'விலைமனுப் பிணையொன்றுடன்' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் இலகுவாக ரொக்கப் பணத்தில் மாற்றக்கூடியதுமான உத்தரவாதமாகவும் கொழும்பு-12, மீயுயர் நீதிமன்றகட்டிடத்தொகுதி, நீதிஅமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமான வகையில் இருத்தல் வேண்டுமென்பதுடன் 2021.08.27 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறந்த பின்னர் 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
9. 2021.04.20 ஆம் திகதியன்று மு.ப.11 மணிக்கு நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

**தலைவர்,**
**அமைச்சுபெறுகைக் குழு,**
**நீதிஅமைச்சு,**
**மீயுயர் நீதிமன்றகட்டிடத்தொகுதி,**
**கொழும்பு-12.**

## உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் (BES) பிரிவு

# மருத்துவ உபகரண வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல்

1. கீழே குறிப்பிட்டுள்ள மூடும் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27 ஆம் இலக்கத்திலுள்ள உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பெறுகைக் குழுத் தலைவரினால் கீழே குறிப்பிட்டுள்ள மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| | உருப்படி | விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் காலப்பகுதி | | மூடும் திகதி | BES அலுவலகத்தில் செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு (மில்.ரூ,) |
|---|---|---|---|---|---|---|
| | | இலிருந்து | வரையும் | | | |
| 1. | 09 Nos. Ultra Sound Scanners | 2021.04.09 | 2021.04.30 | 2021.05.03 | 12,500.00 | 90 |

2. இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் மருத்துவ உபகரணங்களின் தயாரிப்பாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர் ஆகியோர் மாத்திரமே இந்த பெறுகையில் பங்குபெறுவதற்கு தகுதியுடையவராவர்.
3. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து, எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர், முகவர், பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் ஆகியோரினால் கொள்வனவு செய்யப்பட்ட முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் இரு பிரதிநிதிகளில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படலாம்.
   - அ) கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27 ஆம் இலக்கத்திலுள்ள உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்.
   - ஆ) கொள்வனவு செய்ய வேண்டிய உருப்படிகளுக்கான விலைமனுக்கோரல் ஆவணங்களுக்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ்.
   - இ) உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் நிதிப்பணிப்பாளருக்கு ரொக்கப் பணத்தில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
   - ஈ) வியாபார பதிவு சான்றிதழ் மற்றும் அதன் நிழற்படப்பிரதி.
   - உ) முதன்மையாளர்களினால் அவர்தம் உற்பத்திகளுக்கு உள்ளூர் முகவர்களாக நியமிக்கப்பட்ட சான்றிதழ்/ கடிதமொன்று.
4. மேலே குறிப்பிட்டுள்ள காலப்பகுதியில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27 ஆம் இலக்கத்திலுள்ள உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் நிதிப்பணிப்பாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல.: 011-2691916, 2694479 - தொலைநகல் இல.: 011-2698317).
5. கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27ஆம் இலக்கம் உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் நிதிப்பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
6. கொழும்பு-10, டி சேரம் பிளேஸ், 27ஆம் இலக்கம் உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் நிதிப்பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
7. விலைமனுக்கோரல் ஆவணத்துடன் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட ஒப்பந்த பதிவு சான்றிதழை தயவு செய்து சமர்ப்பிக்கவும்.
8. உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் நிதிக்கான பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல.: 2684732.

**தலைவர்/அமைச்சு பெறுகைக் குழு,**
**உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10.**

## இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6188(EL) | Spare Modules for the Stinis Spreaders | 30,000.00 | 1,000.00 | 2021.05.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6194/(EL) | Main and Guide wheels for Duratrack Trolley of JCT | 60,000.00 | 1,000.00 | 2021.05.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/20/PT/20/054 | Marine quality Paint & Thinner for Dredger Hansakawa | 100,000.00 | 3,500.00 | 2021.04.19 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/07/059 | 5040 Liters of Transfluid oil P-157 | 24,000.00 | 1,000.00 | 2021.04.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/14/015 | 01 No. Battery/Inverter System for JCT RTG Crane | 22,000.00 | 1,000.00 | 2021.04.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/16/051 | 10 Nos. PVS Piston Pumps for RAM Spreaders – 41T | 20,000.00 | 1,000.00 | 2021.04.28 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/13/51 | Cam Clutch KK8332H-22/Tsubaki-MZ 70G TK-10 Nos. | 38,000.00 | 1,000.00 | 2021.04.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/10/051 | Fifth Wheel unit P/N T27055449 | 50,000.00 | 1,000.00 | 2021.04.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/01/053 | Cloth Polyester Brown Suiting – 7700 meters for year 2021 | 50,000.00 | 1,000.00 | 2021.04.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/PT/08/059 | Marine quality paint and thinner for Tug Nandimithra | 55,000.00 | 1,000.00 | 2021.04.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/01/051 | Diesel Engine for ZPMC Transtainers at JCT – 01 No. | 150,000.00 | 3,500.00 | 2021.04.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. மொத்தஆகுசெலவு 5 மில்லியன் ரூபாவிற்குமேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப் பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குநரொருவருக்கு முகவராக, உப முகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.
3. ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2021 ஏப்ரல் 09ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மூடும் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மூடும் நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652,2483024. 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443.**

# பெறுகை அறிவித்தல்

## மத்திய மாகாண சபை - பிரதான மற்றும் கல்வி அமைச்சு

## தேசிய போட்டி ரீதியில் கேள்வி கோரல் (NCB)

## நிதி மூலாதாரம் — மாகாண நிலையான அபிவிருத்தி மானியம்

1. மத்திய மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமைகள் உள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுவதுடன் குறித்த வேலைகளும் நிதி மூலாதாரமும், அதற்குரிய பொறியியல் அளவுப்பத்திரத் தொகையும் ஒப்பந்தக் காலமும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. இயைபுடைய வேலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள CIDA நாளதுவரையில் தரவேற்றம் செய்யப்பட்ட பதிவு இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
3. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதி மாகாண பணிப்பாளர், (பொறியியல் சேவைகள்), கல்விக் கட்டிடங்கள், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக் கட்டிடம், மூன்றாம் மாடி, யட்டிநுவர வீதி, கண்டி அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம் 081-2203892) பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அந்த அலுவலகத்தில் உரித்துடைய ஆவணங்களையும் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்க முடியும்.
